# மிர் ஆ

2001



தேசிய கல்விக் கல்லூரி
அட்டாளைச்சேனை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13938
650
ACCESSION NO: 13938
CLASS NO:

# MIR - AH

MIRROR

126

# 2001

REFERENCE SECTION
உசாத்துணைப் பிரிவு

அமீர்அலி பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை

**Hijri 1422**

இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்

**NATIONAL COLLEGE OF EDUCATION**
**ADDALAICHENAI**
**SRI LANKA**
Tele/ Fax : 067 - 77327

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ACCESSION NO:- | 13938 |
| --- | --- |
| CLASS NO :- | 050 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

சீரிய அறிவினை சிறப்புற மாந்தர்க்கு
வழங்கிய இறையோனே – எம்மை
நேரிய பாதையில் நிலைபெறச் செய்திட
அருளினைத் தருவாயே....

(சீரிய)

மாமறை மூலமும் மாநபி மூலமும்
அறிவினைத் தந்தோனே – என்றும்
மாண்புறு கல்வியை மகிழ்வுடன் பெற்றிட
நிறைந்தருள் புரிவாயே....

(சீரிய)

அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி
அதன் புகழ் தினமோங்க – என்றும்
அலைகடல் போலவே கலைபல பொங்கிட
அருள்மழை பொழிவாயே....

(சீரிய)

பெட்டகம் அறிவின் பேரொளி கலஸாலி
பேரறிவெமைச்சூழ – உன்னை
இருகரமேந்தி சிரம்பணிகின்றோம்
இறையருள் தருவாயே....

(சீரிய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our President




**AL - HAJ. A. L. ABDUL RASOOL**

**B.A.(Hons), Dip.in Ed.,M.Ed.(Aus,)**

REFERENCE SECTION
உசாத்துணைப் பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீடாதிபதியின் ஆசிச் செய்தி

அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியின் வெளியீடான 'மிர்ஆ' (கண்ணாடி) சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் புளகாங்கிதம் அடைகின்றேன்.

சஞ்சிகை என்பது ஒரு சரித்திரச்சுவடு. இது சாகாவரம் பெற்றது. காலத் தேவைகளைக் கச்சிதமாய் வடிவமைத்து கனிய நெஞ்சங்களில் கல் எழுத்தாய்ப் பதிக்கக் கூடியது. இவ்வாறான ஓர் உயரிய படைப்பு எனது காலத்தில் வெளிக்கொணரப்படுவது கண்டு அளவிலா ஆனந்தம் அடைகின்றேன்.

எமது கல்விக் கல்லூரியின் கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்களினதும், ஊழியர்களினதும், பயிலுனர் களினதும் உயரிய தியாகங்கள் தேசிய மட்டத்தில் எமக்குத் தனியான ஓர் இடத்தைப் பெற்றுத்தந்துள்ளது. இது என் உள்ளத்தை நெகிழ வைக்கின்றது. மேலும், நீங்கள் ஒவ்வொருவரும் என் இதயத்தில் நிலைத்து நின்று பிரகாசிக்கின்றீர்கள்.

இச்சஞ்சிகை காத்திரமான ஆக்கங்களுடனும், அழகான தோற்றத்துடனும் வெளிவர உதவிய ஒவ்வொருவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.

உங்கள் மனங்களில் அன்புடன் வாழ விரும்பும்,

**அல்-ஹாஜ் ஏ. எல். அப்துல் றசூல்,**

பீடாதிபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி, உயர் கல்வி அமைச்சர் அவர்களின் ஆசிச்செய்தி



අඩ්ඩාලච්චේන ජාතික අධ්‍යාපන විද්‍යාපීඨය මගින් වාර්ෂිකව ප්‍රකාශයට පත් කෙරෙන "මීර් ආ" සඟරාව සෑම තරාතිරමකම සිසු සිසුවියන්ට මෙන්ම වැඩිහිටියන්ටද විපුල ප්‍රයෝජන නෙළා ගතහැකි සගරාවක් වශයෙන් හැඳින්වීම යෝග්‍යය වන්නේය.

'මීර් ආ' සගරාව මගින් සිය විෂයය ක්ෂේත්‍රයේ විද්‍යා, ගණිත, ශාරීරික අධ්‍යාපනය, ඉස්ලාම් ධර්මය ආදි නන්විධ අධ්‍යාපනික පාඨමාලාවන් සිය පාඨකයාට ප්‍රදානය කිරීම මෙහි විශේෂත්වය වේ. මෙම ජාතික අධ්‍යාපන විද්‍යාපීඨයෙන් අකුරු සතර උගන්නා ඉස්ලාම් ආගමික අග්‍යාසලාහින් මෙන්ම සෙසු ආගමික සහ ජාතික වන්නාවූ අයවලුන්ට පවා සාධාරණ ලෙස අධ්‍යාපනය බෙදාදෙනු ලබන අතර එහි මහගු සලකුණක් වශයෙන් 'මීර් ආ' සඟරාව හඳුන්වමු.

1992 වසරේ පිහිටුවන ලද මෙම විද්‍යාපීඨය මගින් 'මීර් ආ' සගරාව මෙවර පළවන 2001 කළඹ දක්වා අඛණ්ඩව ප්‍රකාශයට පත් කිරීම විශේෂ සිද්ධියකි. ඒ සුවිශේෂත්වයට එදා මෙදා තුර අනුග්‍රහයක් වූ සියලු දෙනාට දේශයේ ප්‍රණාමය පිරිනැමෙනු නිරනුමානය.

නැගෙනහිර පළාතේ අම්පාර ආශ්‍රිතව පිහිටා ඇති අඩ්ඩාලච්චේන ජාතක අධ්‍යාපන විද්‍යාපීඨයේ පීඨාධිපති ඒ. එල්. ඒ. රසූල් මහතා ප්‍රමුඛ 29 දෙනෙකුගෙන් සමන්විත කථිකාචාර්ය මණ්ඩලය ඇතුළු සගෘද සියල්ලෝ 'මීර් ආ' සගරාවේ මෙම ප්‍රගතියට නොපසුබට වීර්යයෙන් කර උර දුන්නෝ වෙති. ඔවුනට මෙන්ම 'මීර් ආ' සගරාවේ අනාගතයටද මෙම විද්‍යාපීඨයටද මගේ සුභ පැතුම් මෙසේ පිරිනමන්නට ලැබීම භාග්‍යයක් කොට සලකමි.

ආචාර්ය සරත් අමුණුගම
අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන අමාත්‍ය.

## பிரதம ஆணையாளரின் ஆசிச் செய்தி

අඩ්ඩාලච්චේන ජාතික අධ්‍යාපන විද්‍යාපීඨයේ වාර්ෂික ප්‍රකාශනයවන 'මීර් ආ' සඟරාවට මගේ සුබ පැතුම ප්‍රදානය කරන්නේ ඉතා සතුටින්ය. වර්ෂ 1992 - 05 - 10 වැනි දින ආරම්භ කළ අඩ්ඩාලච්චේන ජාතික අධ්‍යාපන විද්‍යාපීඨයේ ප්‍රාථමික, විද්‍යාව, ගණිතය, ශාරීරික අධ්‍යාපනය සහ ඉස්ලාම් යන පාඨමාලා පහක් ඇත. මෙහි විශේෂයෙන් ඉස්ලාම් ආගමික අභ්‍යාසලාභීහු පමණක් ඉගෙනීම ලබති. කථිකාචාර්ය මණ්ඩලයේ ඉතා දක්ෂ අධ්‍යාපනඥයෝ 29 දෙනෙක් ඉගෙන්වීම කරති.

මෙම පීඨයේ පීඨාධිපති ලෙස සේවය කරන ඒ. එල්. ඒ. රසූල් මහතා මෙම පීඨයේ දියුණුව සඳහා දිවා රෑ නොබලා උත්සාහයෙන් නියැලී සිටින බව මා දනිමි.

මෙම විද්‍යාපීඨයේ අනාගතය සර්ව ප්‍රකාරයකින්ම දීප්තිමත් වේවායි සුභ පතමි.


**ස්ටැන්ලි ප්‍රේමසිරි මැතිතුමා,**

ප්‍රධාන කොමසාරිස්,

අධ්‍යාපන විද්‍යා පීඨය සහ ගුරු අධ්‍යාපන ශාඛාව,

අධ්‍යාපන අමාත්‍යාංශය,

ඉසුරුපාය,

බත්තරමුල්ල.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் பிரதம ஆணையாளரின் ஆசிச் செய்தி

අඩ්ඩාලච්චේන ජාතික අධ්‍යාපන විද්‍යාපීඨ වාර්ෂික 'මීර් ආ' සඟරාවට සුබ පැතුම් පණිවිඩයක් නිකුත් කිරීමට ලැබීම ගැන සතුටු වෙමි.

1992 - 05 - 10 වන දින ආරම්භ කළ අඩ්ඩාලච්චේන ජාතික අධ්‍යාපන විද්‍යාපීඨය යටතේ මේ වන විට විෂය ක්ෂේත්‍ර ගණනාවක් යටතේ පාඨමාලා හැදෑරීමට ඉස්ලාම් ආගමික අභ්‍යාසලාභීන්ට හැකියාව ලැබී ඇත. මෙම පීඨයේ ප්‍රාථමික, විද්‍යාව, ගණිතය, ශාරීරික අධ්‍යාපන හා ඉස්ලාම් යන පාඨමාලා පවත්වන අතර වාර්ෂිකව ගුරු සිසුන් 105 කු ඇතුළත් කෙරේ. විද්‍යාපීඨයේ පීඨාධිපති වශයෙන් කටයුතු කරන්නේ ඒ. එල්. ඒ. රසූල් මහතාය. ඒ මහතා ශ්‍රී ලංකා ගුරු අධ්‍යාපනඥ සේවයේ නිලධාරියෙකි. අධ්‍යාපන විද්‍යාපීඨයේ කථිකාචාර්ය මණ්ඩලයේ ඉතා දක්ෂ කථිකාචාර්යවරු 29 කු සේවය කරන අතර එම කථිකාචාර්යවරුන්ගෙන් ලැබෙන්නාවූ සේවය ප්‍රශංසනීය වේ.

මෙම පීඨයේ දියුණුව උදෙසා කැපවෙන වර්තමාන පීඨාධිපති ඇතුළු කථිකාචාර්යවරුන්ගේ මෙහෙය අගය කරන අතර පීඨයේ අනාගත අභිවෘද්ධියට සුබ පතමි

**නිහාල් හේරත් මැතිතුමා**

අතිරේක ලේකම්

(අධ්‍යාපන සේවා ආයතන)

අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශය



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பீடாதிபதியின் ஆசிச் செய்தி



அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியால் வெளியிடப்படும் 'மிர் ஆ' சஞ்சிகைக்கு ஆசிச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரி என் உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்தது. இது பெறும் ஒவ்வொரு உயர்வுகளும் என்னை மகிழ்விக்கும். இதன் உயர்வுக்காக என் இதயம் அனுதினமும் பிரார்த்தித்துக்கொண்டே இருக்கும்.

இக்கல்லூரியின் பீடாதிபதி, விரிவுரையாளர்கள், பயிலுனர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மேலும் இச்சஞ்சிகையின் வெளியீட்டுக் குழுவினர் யாவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நீண்ட ஆயுளும், உயரிய வெற்றியும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

- அல்-ஹம்துலில்லாஹ் -

அமீர்அலி பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை

**அல்- ஹாஜ் ஏ. ஆர். ஏ. அஸீஸ்**
முன்னாள் பீடாதிபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் பீடாதிபதியின் ஆசிச் செய்தி



வல்ல நாயன் நாமம் போற்றி
பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்.

அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியின் வருடாந்த வெளியீடான 'மிர்ஆ' (கண்ணாடி) என்ற சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி யடைகின்றேன்.

இச்சஞ்சிகை வெளியீடானது மிக்க பயனுள்ள பல ஆக்கங்களைக்கொண்டுள்ளதுடன் இச்சஞ்சிகை நாட்டின் நாலாபக்கமும் இக்கல்லூரியின் சிறப்பினை வெளிக்காட்டும் என்பதில் ஐயமில்லை.

பயிலுனர்களின் திறமையினையும் கடின உழைப்பினையும் சுமந்து இம்மலர் வெளிவருவதற்கு காலாகவிருந்து செயற்பட்ட விரிவுரையாளர்களையும், மலர்க்குழுவினரையும் வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

- நன்றி -

**அல்–ஹாஜ் கே. முஹம்மட் தம்பி,**
முன்னாள் பீடாதிபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பீடாதிபதியின் ஆசிச் செய்தி



அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியால் வெளியிடப்படும் 'மிர் ஆ' சஞ்சிகைக்கு ஆசிச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரி என் உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்தது. இது பெறும் ஒவ்வொரு உயர்வுகளும் என்னை மகிழ்விக்கும். இதன் உயர்வுக்காக என் இதயம் அனுதினமும் பிரார்த்தித்துக்கொண்டே இருக்கும்.

இக்கல்லூரியின் பீடாதிபதி, விரிவுரையாளர்கள், பயிலுனர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மேலும் இச்சஞ்சிகையின் வெளியீட்டுக் குழுவினர் யாவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நீண்ட ஆயுளும், உயரிய வெற்றியும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

- அல்-ஹம்துலில்லாஹ் -

அமீர்அலி பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை

**அல்- ஹாஜ் ஏ. ஆர். ஏ. அஸீஸ்**
முன்னாள் பீடாதிபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் பீடாதிபதியின் ஆசிச் செய்தி



வல்ல நாயன் நாமம் போற்றி
பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்.

அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியின் வருடாந்த வெளியீடான 'மிர்ஆ' (கண்ணாடி) என்ற சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி யடைகின்றேன்.

இச்சஞ்சிகை வெளியீடானது மிக்க பயனுள்ள பல ஆக்கங்களைக்கொண்டுள்ளதுடன் இச்சஞ்சிகை நாட்டின் நாலாபக்கமும் இக்கல்லூரியின் சிறப்பினை வெளிக்காட்டும் என்பதில் ஐயமில்லை.

பயிலுனர்களின் திறமையினையும் கடின உழைப்பினையும் சுமந்து இம்மலர் வெளிவருவதற்கு காலாகவிருந்து செயற்பட்ட விரிவுரையாளர்களையும், மலர்க்குழுவினரையும் வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

- நன்றி -

**அல்-ஹாஜ் கே. முஹம்மட் தம்பி,**
முன்னாள் பீடாதிபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஞ்சிகை குழுத் தலைவரின் செய்தி...



அனைவர்மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக. இலங்கை முஸ்லிம்களின் தனிப் பெரும் தேசிய கல்விச் சொத்தாக விளங்கும் அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியின் கல்வி வளர்ச்சிப் போக்குப் பற்றி வியக்காதவர் எவருமில்லை. நாட்டின் இளைய தலை முறைகளின் மாசு அகற்றும் நல்ல சிற்பிகளை உருவக்குவதில் என்றும் முன் நிற்பது எமது கல்விக் கல்லூரியாகும்.

அந்த வகையில் ஆசிரிய பயிலுனர்களின் அறிவு விருத்திக்கும், ஆளுமை வளர்ச்சிக்கும் களம் சமைத்துக் கொடுப்பதிலும், கலையாற்றல்களை வளர்ப்பதிலும் முன்னிற்கும் எமது ஆண்டு மலர் 'மிர்ஆ'வின் மலர்ச்சிக்காய் பங்கெடுத்த நல்ல உள்ளங்களை நன்றியால் நினைவு கூறாமல் இருக்க முடியாது.

மலர் வெளியீடு என்பது சின்ன விசயமாகத் தெரிந்தாலும் அதில் ஈடுபடும் போதுதான் எம் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு எத்தகையதென்று தெரியவரும். அந்தவகையில் இம்மலர் சிறப்புற வெளிவர நல்ல ஆலோசனைகள் வழங்கிய எமது கல்விக் கல்லூரியின் பீடாதிபதி மதிப்புக்குரிய அல்-ஹாஜ் ஏ. எல். ஏ. றசூல் அவர்களுக்கும், அவர்களோடு இணைந்து நல்லறிவுரைகளை வழங்கிய விரிவுரையாளர்களான ஜனாப் எம். எச். எம். மன்சூர், அல்-ஹாஜ் ஏ. சி. ஏ. எம். மன்சூர், ஜனாப் எம். ஐ. நவாஸ், ஜனாப் எச். எம். ஆதம்பாவா, திரு. பொன். ஏரம்பமூர்த்தி, ஜனாபா என். பி. ஏ. றசீட் ஆகியோருக்கும் எனது நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

மேலும் இம்மலருக்கான சிறுசிறு விளம்பரங்களை தந்துதவிய விளம்பரதாரர்களுக்கும், புகைப்பட உதவி புரிந்த 'ஹில்மி ஸ்டுடியோ'விற்கும், இம்மலரை அழகுற அச்சிட்டு வெளிவர உதவிய ஸ்டார் ஒப்செற் பிரிண்டர்ஸ் ஸ்தாபனத்தாருக்கும், இம்மலரின் ஆக்கத்திற்காய் பெரும்பங்களிப்புச் செய்த 'மிர்ஆ' மலர்க்குழுவினர்களுக்கும் நன்றிகளை கூறிக் கொள்வதுடன் எல்லாவற்றுக்கும் மேலான வல்ல அல்லாஹ்வுக்கும் நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன். அல்-ஹம்துலில்லாஹ்

**கச்சிமுகம்மது பாஸிர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MIR - AH
## 2001

## EDITORIAL BOARD

*PATRON :*

Al-Haj. A.L. Abdul Rasool (President)

*CHAIRMAN :*

Mr. M.H.M. Mansoor (Co-ordinater)

*ADVISORS:*

**Mr. A.C.A.M. Mansoor** (Vice President)
**Mr. M.I.M. Nawas** (Co-ordinater)
**Mr. H.M. Athambawa**
**Mr. P. Erambamoorthy**
**Mrs. N.B.A. Razeed**

*MAGAZINE COMMITTEE :*

*EDITOR* : **Miss. A.L. Samrooth**

*PRESIDENT* : **Mr. K.M.M. Baasheer**

*JOINT. SECRETARY* : **Mr. SM. Sulhar**
**Miss. ALR. Raihana**

*TREASURER* : **Mr. M.S. Sujath Mohamed**

*MEMBERS* : **Mr. Y.L.M. Uwais**
**Mr. T.K.M. Siraj**
**Mr. S. Subaideen**
**Miss. S.S. Saheeda**
**Miss. M.H. Sajitha**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EDITORIAL BOARD



**Seated (Left to Right) :** Miss. ALF. Shamrooth, Miss. MH. Sajitha, Mr. MIM. Nawas (Lecturer - Co-ordinator), **Al-Haj. ALA. Rasool (President),** Mr. MHM. Mansoor (Lecturer - Co-ordinator), Miss. ALR. Raihana, Miss. SS. Sayetha,

**Satnding (Left to Right) :** Mr. YLM. Uwais, Mr. TKM. Siraj, Mr. SM. Sulhar, Mr. S. Subaideen, Mr. KM. Basseer, Mr. MS. Sujath Mohamed

**Absentees :** Al-Haj. ACAM. Mansoor (Vice Presidet), Mr. HM. Athambawa (Lecturer), Mr. K. Erambamoorthy ((Lecturer)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NATIONAL COLLEGE OF EDUCATON
# ADDALAICHENAI.

## ACADEMIC STAFF

01. **Al-Haj. A.L. Abdul Rasool** B.A. (Hons), Dip.in.Ed., M.Ed. (Aus.)
President

02. **Moulavi. A.L.M. Hasim** B.A. (Hons)., Dip.in.Ed., M.A.
Vice President (Academic)

03. **Mr. M.A.M. Jaleel** B.A (Hons)., Dip.in.Ed. (Merit) M.A.
Vice President (Continue Teacher Education)

04. **Al-Haj. A.C.A.M. Mansoor** B.A. (Hons)., Dip.in.Ed. (Merit). M.Ed. (Aus.)
Vice President (Administration & Finance)

05. **Mr. M.H.M. Mansoor** Sp.Tr. (P.E.)., B.Ed.
Lecturer Co-ordinator (Administration & Finance)

06. **Mr. U.L.M. Buhary** B.A. (Hons)., Dip.in.Ed. (Merit), M.A.
Lecturer Co-ordinator (Academic)

07. **Mr. M.I.M. Nawas** B.Sc. (Hons)., Dip.in.Ed., M.Ed. (Canada)
Lecturer Co-ordinator (Continue Teacher Education)

08. **Mrs. S.M.L.M. Nuhuman** B.A. (Hons)., Dip.in.Ed. (Merit).
Dean

09. **Mr. S.L.S.A. Sathar** B.Sc. (Hons)., Dip.in.Ed.
Dean

10. **Mr. A.L. Ahamed Lebbe** B.A., Dip.in.Ed. (Merit)
Dean

11. **Mr. M.K.M. Jubair** B.A. (Hons)., Dip.in.Ed.
Worden

12. **Mr. A.C. Saifudeen** Sp. Tr. (P.E.).
Worden

13. **Mrs. F.A. Razeek** Sangeetha Boosanam
Worden

14. **Mrs. S. Canagasabey** B.Sc. (Hons) Dip.in.Ed.
Worden & Course Co-ordinator (Maths)

15. **Mr. M.I.M. Musthaffa** Sp.Tr. (P.E.).
Course Co-ordinator (Physical Education)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. **Mrs. N.B.A. Razeed** B.Sc. (Hons)., Dip.in.Ed. (Merit)
Course Co-ordinator. (Science)

17. **Mr. T. Kanesharatnam** B.A. (Hons) Dip.in.Ed. (Merit)
Course Co-ordinator (Primary)

18. **Mr. A. Farook** B.A. (Hons) Dip.in.Ed.
Course Co-ordinator (Islam)

19. **Mr. S.M. Kubaidhullah** Sp. Tr. (English)
Subject Co-ordinator (Gene)

20. **Mr. P. Eramba Moorthy** B.A., Dip.in.Ed. (Merit)
Subject Co-ordinator (Pro.)

21. **Mr. H.M. Athambawa** Sp.Tr. English.
Subject Co-ordinator (Sp.Area)

22. **Mr. M.A. KaleeL** Sp. Tr. (English), B.Ed. (English)
Lecturer

23. **Mr. M.B.A. Azeez** B.Sc., Dip.in.Ed. (Merit)., M.Ed.
Lecturer

24. **Moulavi. M.I. Jawfer** B.A. (Hons)., Dip.in.Ed. (Merit)., MA.
Lecturer.

25. **Mr. S.N.A. Aroos** B.Sc., Dip.in.Ed. (Merit)., M.Sc. in. Sc. Ed.
Lecturer

26. **Mr. K. Punniya Moorthy** B.A., Dip.in.Ed., M.Ed.
Lecturer

27. **Mrs. P. Jeyakumar** B.Sc., Dip.in.Ed.
Lecturer

28. **Mr. P. Sathiya Nathan** B.A., Dip.in.Ed. (Merit)
Leturer

29. **Mrs. T. Kuhathasan** B.A. (Hans)., Dip.in.Ed.
Lecturer.

## PART TIME LECTURERS

01. **Mr. N.M. Fuard**
02. **Mr. M.I.M. Ameer**
03. **Mr. M. Aboobucker**
04. **Mr. M.F. Sharifdeen**
05. **Mr. A. Abdul Razak**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ACADEMIC STAFF



**Seated (Left to Right) :** Mr. MKM. Jubair, Mr. MIM. Mustaffa, Mr. SLSA. Sathar (Deen), Mr.ULM. Buhary (Lecturer - Co-ordinator), Mr. MAM. Jaleel (Vice President), Al-Haj. ALA. Rasool (President), Al-Haj. ACAM. Mansoor (Vice Presidet), Mr. MHM. Mansoor (Lecturer - Co-ordinator), Mr. SM. Kubaithullah, Mr. HM. Athambawa, Mr. MIM. Nawas (Lecturer - Co-ordinator),

**Satnding (Left to Right) :** Mrs. NBA. Rasheed, Mrs. S. Kanagasabey, Mrs. FA. Razeek, MBA. Azeez, Mr. K. Punnuyamoorthy, Mr. SNA. Aroos, Mr. T. Kanasaratnam, Mr. A. Farook, Mrs. P. Jeyakumar, Mrs. SMLM. Nuhuman (Deen)

**Absentees :** Moulvi ALM. Hasim, (Vice President), Mr. MA. Kaleel, Mr. AC. Saibudeen, Mr. K. Eranibamoorthy, Mr. AL. Ahamedlebbe (Deen), Mrs. T. Kuhathasan, Moulavi MI. Jawfer



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## OFFICE STAFF

**Mr. A.I.M. Musthafa** (Acontant) Act. Registrar.

**Mr. A.L.M. Ramees** - Hostel Sup.

**Mr. M.A. Majeed** - Lab. Asst.

**Mr. S.T.M. Hashim** - Cleark

**Mr. M.T.M. Ramees** - Cleark

**Mr. S.H.S.H. Wafalul** - Typist

**Mr. M. Rumaiz** -Librarian

**Mr. M.A.M.H. Manas** - Cleark

**Mr. M.I. Faiz** - Cleark

**Mr. K.M.A. Sawahir** - S.K.

**Mr. M.S.M. Muzathik** - Typist

**Mr. A. Pushparajah** - Cleark

## OTHER EMPLOYEES

01. MR. AL. SEENI MOHAMED - LIBRARY ATT.
02. MR. S. NOORMOHAMED, - LIBRARY ATT.
03. MR. M.I.M. JOWFAR - COOK
04. MR. A.L.M. ABOOBUCKER - COOK
05. MR. A.R.M. JOWFER - COOK
06. MR. U.L.M. HUSSAIN - COOK
07. MRS. U.L.A. MASHOODA - COOK
08. MRS. M.H.M. HAMDA - COOK
09. MRS. M.A. MAZAHINA - COOK
10. MR. M.H.M. THOWFEEK - WATCHER
11. MR. M.H.M. MUSTHAFA - WATCHER
12. MR. I.L.M. THASTHAKEER - WATCHER
13. MR. U.M. OCCAS LEBBE - WATCHER
14. MR. U.L.A. RAUF - WATCHER
15. MR. A.B. SARIFDEEN - LABOURER
16. MR. P.T.S. SUBUHAN - LABOURER
17. MR. U.L.M. FAROOK - LABOURER
18. MR. A.L.M. NIYAS - LABOURER
19. MR. M.M.M. ASANAR - LABOURER.
20. MR. M.M.M. SHIYAM - LABOURER
21. MR. U.L. ALIYAR - CARPENTER.
22. MR. S.M. FAALIK - PLUMPER
23. MR. M.H.M. SHARIFF - PUMP ROOM OPP.
24. MR. M.M.M. FAROOK - DRIVER
25. MR. S.M.M. ILLIYAS - DRIVER
26. MR. M.S.M. FAIROOS - LABOURER
27. MR. M.S.M. NASIR - LABOURER
28. MR. M.R.M. ASSIRAJ - LABOURER
29. MR. M.S.M. JESEER - LABOURER
30. MR. M.M.M. RIZAN - LABOURER
31. MR. M.M.M. SIYAS - LABOURER
32. MR. M.S.M. SAHIRAN - LABOURER
33. MRS. S.M. AWWA UMMA - SICK ROOM ATT.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை

# மீர் ஆ

மலர் : 02 2001

சஞ்சிகை ஆசிரியர் :
**செல்வி ஏ. எல். சம்ருத்**

புகைப்பட உதவி :
**ஹில்மி ஸ்ருடியோ,**
**பிரதான வீதி,**
**அட்டாளைச்சேனை.**

அச்சகம் :
**ஸ்டார் ஓப்செற் பிரிண்டர்ஸ்**
**பிரதான சாலை - சாய்ந்தமருது.**
**067 - 29414**

பதிப்புரிமை :
**தேசிய கல்விக் கல்லூரி,**
**அட்டாளைச்சேனை.**

வெளியீடு :
**சஞ்சிகைக் குழு,**
**தேசிய கல்விக் கல்லூரி,**
**அட்டாளைச்சேனை.**

இச்சஞ்சிகையிலுள்ள ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவர்களாவர்.

- ஆசிரியர் -

முகவரி :

**தேசிய கல்விக் கல்லூரி**
**அட்டாளைச்சேனை**

தொ.பே./பெக்ஸ் : 067 - 77327

மலரினுள்ளே....

01. புதிய கைத்தொழில் நாடுகளில் கல்வியும் அபிவிருத்தியும் 01
02. கற்பித்தல் முறைகளைத் தெரிவு செய்யும் போதும் அவற்றைப் பயன்படுத்தும்போதும் ஆசிரிய மாணவர்கள் கவனிக்க வேண்டிய அம்சங்கள் 06
03. அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியின் வளர்ச்சிப் போக்கு 08
04. Internet & E.mail 13
05. மனித வாழ்வுக்குச் சவாலாக அமையும் நஞ்சிலிருந்து பாதுகாப்புப் பெறல் 14
06. இதயத்தின் நினைவு உ ளி! 17
07. யாதுமொன்றாகி 18
08. The Importance.... 21
09. மினிக்கவிதைகள் 21
10. எங்கள் வாழ்க்கையில்... சிந்தனைக்கு 22
11. மிலேனியத்தின் ஆசிரியர் 24
12. வெந்துபோன இதயம் 27
13. RSSவும் பாபரி மஸ்ஜிதும் 28
14. மானிடா 31
15. சிந்தனையைத் தூண்டும் பிளேட்டோ 32
16. நண்பா உன் சிந்தனைக்கு 35
17. எரிநட்சத்திரங்கள் 36
18. Name & Address 1998 -2000 Batch 39
19. Name & Address 1999 -2001 Batch 42
20. 2001ம் ஆண்டு கல்லூரியின் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் முன்னிலை நிகழ்வுகள்

## மீர் ஆ 2002 சிறப்பு மலர்

அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியின் 10 ஆண்டு நிறைவினையொட்டி 10 - 05 - 2002இல் வெளிவரவுள்ளது.

இம்மலருக்கான ஆக்கங்கள் விரிவுரையாளர்களிடமிருந்தும், மாணவர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகின்றது. சிறந்த ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் **15 - 02 - 2002**

- மலர்க்குழு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கைத்தொழில் நாடுகளில் கல்வியும் அபிவிருத்தியும்

**பேராசிரியர் - சோ. சந்திரசேகரன்**
கொழும்புப் பல்கலைக்கழகம்.

இன்று பொருளாதாரத்துறையில் வெற்றி கண்டுள்ள தென்கொரியா, தாய்வான், சிங்கப்பூர், ஹொங்கொங் போன்ற கிழக்காசிய நாடுகள் புதிய கைத்தொழில்மய நாடுகளென அழைக் கப்படுவன. இரண்டாம் உலக யுத்தத்தில் கிழக்காசியாவில் உள்ள பல நாடுகள் ஏழ்மை நிலையிலேயே இருந்தன. உள்நாட்டு யுத்தங் களினாலும் எழுத்தறிவின்மையினாலும் இந்நாடு கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. இந்நிலை யில் இந்நாடுகள் பெரு வளர்ச்சி பெறும் என எவரும் எதிர்பார்க்கவில்லை. ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளே துரித வளர்ச்சி பெறும் எனப் பலரும் நினைத்தனர். ஆனால் 1965-1990 காலப்பகுதியில் கிழக்காசியாவில் ஹொங்கொங், சிங்கப்பூர், தாய்வான், தாய்லாந்து, மலேசியா, சீனா, இந்தோனேசியா முதலிய நாடுகள் பெரு வளர்ச்சி பெற்றன. இவை துரித மாக சாதனைகளைச் செய்த நாடுகளென உலக வங்கியால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஜப்பான் 1950களில் ஒரு பொருளாதார வல்லரசாயிற்று; தென்கொரியா, தாய்வான், சிங்கப்பூர், ஹொங்கொங் ஆகிய நாடுகள் 1965 தொடக்கமும் ஏனைய நாடுகள் 1970களிலும் தமது வளர்ச்சியைத் தொடங்கி வைத்தன.

மிகப் பிந்தியே கைத்தொழில் மயமாக்கப்பட்ட இந்நாடுகளின் வளர்ச்சி துரித கதியில் அமைந்தது. தென்கொரியா 1966இல் தொடங்கி 11 ஆண்டுகளில் தனது தனியாள் வருமா னத்தை இருமடங்காக்கிக் கொண்டது. இச்சாத னையை பிரிட்டன் 58 ஆண்டுகளிலும், ஐக்கிய அமெரிக்கா 47 ஆண்டுகளிலும் ஜப்பான் 34 ஆண்டுகளிலும் செய்துகொள்ள முடிந்தது.

தென் கொரியா உட்பட்ட இந்நான்கு நாடுகளின் துரிதமான வளர்ச்சிக்கு அந்நாடுகள் அயல் நாடுகளிடமிருந்து எதிர்நோக்கிய பயமுறுத்தல் களும் ஒரு முக்கிய காரணமாகும். தென்கொரியா வும் தாய்வானும் 1945வரை ஜப்பானின் குடியேற்ற நாடுகளாக இருந்தவை; உள்நாட்டுப் போர்களின் விளைவாக உருவா னவை; சிங்கப்பூர், மலேசியக் கூட்டரசிலிருந்து பிரிந்து வந்த நாடு; ஹொங்கொங் 1997வரை பிரித்தானிய குடியேற்ற நாடாக இருந்து வரும்; அதன் இருப்பை மக்கள் சீனம் இதுவரை காலமும் சகித்து வந்துள்ளமையும் ஒரு முக்கிய உண்மையாகும். இவ்வகையால், இந்நாடுகளின் அரசியல் பதட்டநிலை காரண மாக அரசு உறுதியுடன் செயற்பட வேண்டி யிருந்தது; பொருளாதாரத் துறையிலும் தொழில் நுட்பத்துறையிலும் துரித வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டியிருந்தது.

இந் நாடுகளின் வளர்ச்சிக்கான காரணங்களை ஆராய்ந்தேன், அபிவிருத்திச் செயற்பாட்டுடன் தொடர்புடைய பின்வரும் விளக்கங்களைத் தந்தனர்:

* கட்டுப்பாடற்ற பொருளாதாரச் சந்தை.
* ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட வர்த்தகக் கொள்கைகள்.
* திறமைமிக்க, நேர்மையான நிர்வாக அதிகாரிகள்.
* மனித சாதன வளர்ச்சியின் மீதான முதலீடு
* குறிக்கோள்களைக் கொண்ட வலிமையான அரசாங்கம்.

உயர் நிலை மனித சாதனத்தைப் பயிற்று வதற்கான நிதி ஒதுக்கீடு என்னும் கொள்கை மனிதவலுத் திட்டமிடலையும் இடைநிலை, மூன்றாம் நிலை மற்றும் தொழில் நுட்பக் கல்வியின் விரிவையும் குறிக்கும். இப்புதிய கைத்தொழில் நாடுகள் சிறந்த கல்வித் தேர்ச்சி யுடைய ஊழியர் தொகுதியை உருவாக்கும் நோக்குடன் கல்வித்துறையில் பாரிய முதலீட் டைச் செய்தன.



REFERENCE SECTION
உசாத்துணைப் பிரிவு
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பக்கல்வியைப் பொறுத்தவரையில் 1965ம் ஆண்டளவில் தென்கொரியா, சிங்கப்பூர், ஹொங்கொங் முதலிய நாடுகளில் மாணவர் சேர்வு வீதம் 100 வீதத்தினை எட்டியது. அவ்வாண்டில் தாய்வானின் சேர்வு வீதம் 97.15ஆக இருந்தது. அவ்வாண்டில், பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏனைய உலக நாடுகளில் சராசரி மாணவர் சேர்வு வீதம் 73 ஆக இருந்தது. இதனால் எழுத்தறிவு மட்டுமன்றி பெண்களின் கல்வித் தேர்ச்சியும் அதிகரித்தது. இந் நாடுகளில் துரித கைத்தொழில் மயமாக்கம் தொடங்கியபோது கல்வித் தேர்ச்சியுடைய ஊழியர்களின் சேவைகிடைக்கப்பெற இவ்வாரம்பக் கல்வி வளர்ச்சி உதவியது. இக்கால கட்டத்தில், இடைநிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி என்பவற்றை ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது.

இவ்வாரம்ப காலகட்டத்தில் இந்நாடுகளில் இடைநிலைக் கல்வி பெரிதும் மட்டுப்படுத்தப் பட்டிருந்தது. வசதிமிக்க சிலர் மட்டும் நூற் கல்வி பெறும் வாய்ப்புகள் வழங்கப்பட்டன. 1965ஆம் ஆண்டளவில் இடைநிலையில் மாணவர் சேர்வு வீதம் சிங்கப்பூரில் 45வீதம், தென்கொரியாவில் 35வீதம், ஹொங்கொங்கில் 29வீதமாக மட்டுமே இருந்தது. பொருளாதார வளர்ச்சி ஏற்படத் தொடங்கவே மக்களின் வருமானமும் கல்வி அபிலாசைகளும் வளர்ச்சி யுற்றன. இதனால் தென்கொரியாவிலும் தாய்வானிலும் அரசாங்க முயற்சியால் இடைநிலைக் கல்வி விரிவுபெற்றது. அரசாங்கங்கள் இடைநிலைக் கல்வியினூடாக மனித சாதன மேம்பாட்டை ஏற்படுத்த முற்பட்டன. இதனால் 1986ஆம் ஆண்டளவில் இக்கல்வி நிலையில் மாணவர் சேர்வு வீதம் அதிகரித்தது; இவ்வீதம் தாய்வானில் 92, சிங்கப்பூரில் 71, தென்கொரியாவில் 95, ஹொங்கொங்கில் 69 என உயர்ந்தது.

இந்நாடுகளில் கைத்தொழில் மயமாக்கம் ஆரம்பமானபோது ஒரு சிலருக்கே தொழில், தொழில் நுட்பக்கல்வி வழங்கப்பட்டது. அப்போது தொழில் உரிமையாளர்கள் எழுத்தறிவுடைய, திறமைமிக்க, பயிற்றப்படக் கூடிய ஊழியர்களையே விரும்பினர். வேலைக்கு அமர்த்தப்பட்ட பின்னர் தொழில் நுட்பம் பயிலப்பட்டது. நூற்கல்விக்கிருந்த உயர்ந்த அந்தஸ்து தொழில் நுட்பக்கல்விக்கு இருக்கவில்லை. விவேகம் குறைந்த மாணவர் களே அதனைப் பயின்றனர். நூற்கல்வியே சிறந்த தொழில் வாய்ப்புகளை வழங்கியது. எனவே இந்நாடுகள் கைத்தொழில் மயமாக் கத்தைத் தொடங்குவதற்கு தொழில், தொழில் நுட்பக்கல்வி காரணமாக இருக்க வில்லை.

ஆனால் காலப் போக்கில் பொருளாதார முறைகள் ஊழியர் தொகையைக் குறைத்து நவீன தொழில்நுட்ப முறைகளை நாடத்தொடங்கினர். பொருளாதார முறைகள் ஊழியர் செறிவைக் குறைத்து மூலதனச் செறிவுள்ளவை (Capital intensive) ஆயின; சிங்கப்பூர், ஹொங்கொங் முதலிய நாடுகளின் பொருளாதார முறைகள் கூடிய அளவுக்கு வர்த்தக மற்றும் நிதித் துறைச் சேவைகளை வழங்குவனவாய்மாறின.

ஹொங்கொங் இவ்வாறு பொருள் உற்பத்தித் துறையிலிருந்து சேவைத்துறை உற்பத்திக்கு மாறிய பின்னர்தான், 1970களிலும் 1980களிலும் தொழில் நுட்பக் கல்வியில் அக்கறை செலுத்தத் தொடங்கியது. 1975இல் 40வீதமான பாடசாலைப் பிள்ளைகள் தொழில்/ தொழில்நுட்பக் கல்வியைப் பயில வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்தது. ஆயினும் 1989இல் இவ்வீதம் 9யே எட்டியது. பெற்றோர்களின் விருப்பத்துக்கு இடமளிக்கப்பட்டமையால் அரசாங்கம் நினைத்ததுபோல் நடக்கவில்லை. கைத்தொழில் நிறுவனங்களின் சார்பில் பயிற்சி நிலையங்கள் வழங்கிய தொழில் நுட்பப்பயிற்சி யையே ஊழியர்கள் விரும்பினர். தொழில் உடனடியாகப் பயன்படுத்தக் கூடிய திறன் களில் அவை பயிற்சி வழங்கின. இந்நிலையில் முழுக்கல்வி முறையில் தொழில் நுட்பக்கல்வி ஒரு சிறு பகுதியாகவே விளங்கியது. பெரும் பாலான பாடசாலைப் பிள்ளைகள் பொதுவான நூற்கல்வியையே பயின்றனர். சிங்கப்பூரிலும் ஏறத்தாழ இத்தகைய நிலையே காணப்பட்டது. 1970களில் கூட தொழில் நுட்பக்கல்விக்குக் குறைந்த அந்தஸ்தே இருந்தது.

இதற்கு மாறாக, தென் கொரியாவிலும் தாய்வானிலும் தொழில் / தொழில் நுட்பக்கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான நீண்ட காலத்திட்டம் வகுக்கப்பட்டு அதற்கு முக்கிய இடம் வழங்கப்பட்டது. 1970க்கு முன்னர் தாய்வானில் பெரும்பாலான பிள்ளைகள் பாடசாலைகளில் நூற்கல்வியே பயின்றனர். ஆயினும் அரசாங்கம் கைத்தொழில் வளர்ச்சித் தேவைகளைக் கருதி இப்போக் கினை மாற்றியமைத்தது. இதனால் 1992இல் 50வீதமான பாடசாலை மாணவர் தொழிற்கல்விப் பயிற்சி நெறிகளில் சேர முடிந்தது. தென் கொரியாவும் 1960களில் பொருளாதார முறையின் மனித சாதன தேவைகளை நிறைவு செய்யும் முறையில் தொழில் / தொழில் நுட்பக் கல்வித் துறையில் தனது முதலீட்டை அதிகரித்தது.

இப்புதிய கைத்தொழில் நாடுகளில் அரசாங் கங்கள் தொழில் / தொழில் நுட்பக் கல்விக்கு அதிக முக்கியத்துவமளித்த போதிலும் பெற்றோர்களும், ஆசிரியர்களும் மாணவர்களும் இக்கல்விக்கு இரண்டாம் இடத்தையே வழங்கினர். இதனால் தொழில்/தொழில் நுட்பப் பயிற்சி நெறிகள் பெயரளவில் அவ்வாறு அழைக்கப்பட்டாலும் நடைமுறையில் அவை நூற் கல்விப் பயிற்சி நெறிகளாகவே விளங்கின. தென்கொரியாவில் ஆசிரியர்கள் தொழில் நுட்பப்பாடங்களுக்கு முக்கியத்துவமளித்துக் கற்பிக்கவில்லை. இப்பயிற்சி நெறிகளைக் கற்ற வர்களின் சம்பளங்கள் நூற்கல்வி பயின்றவர் களின் சம்பளங்களைவிடக் குறைவாகவே இருந்தது. தொழில் நுட்பக்கல்வி பயிலும் மாணவர்கள் சந்தர்ப்பம் கிடைத்தபோது, நூற் கல்விப் பயிற்சி நெறிகளுக்கு மாற விரும்பினர். எவ்வாறாயினும் தென்கொரியாவிலும் தாய் வானிலும் இடைநிலையிலும் உயர்கல்வி நிலை யிலும் தொழில்/தொழில் நுட்பக்கல்வி விரி வடைந்தமையால் நூற்கல்விக்கான வாய்ப்புகள் குறையவே அவற்றைப் பெற போட்டி அதிகரித்தது.

இந்நாடுகளில் இடைநிலைக்கல்வியில் ஏற்பட்ட பிரிவைத் தொடர்ந்து உயர்கல்வியும் விரிவு பெற நேர்ந்தது. கைத்தொழில் மயமாக்கத்தின் ஆரம்பக் கட்டத்தில் உயர்கல்வி வாய்ப்புகள் ஒரு சிலருக்கே வழங்கப்பட்டது. மேலும் உயர்கல்வி முற்றிலும் நூற்கல்விச் சார்புடைய தாகவே விளங்கியது. மருத்துவம், பொறியியல், சட்டம், ஆசிரியர் தொழில் போன்றவற்றுக்கான பயிற்சி நெறிகளே வழங்கப்பட்டன. 1956இல் உயர்கல்வி வயதெல்லையினரில் மிகச் சிறந்த வீதமானவர்களே உயர் கல்வி வாய்ப்புகளைப் பெற்றனர்: தென்கொரியா 6வீதம், சிங்கப்பூர் 10வீதம், ஹொங்கொங் 5வீதம் ஆயினும் 1970களில் உயர்கல்வித் தேவைகள் அதி கரித்தமையால் அரசாங்கங்கள் வசதிகளை விரிவு செய்ய வேண்டியதாயிற்று. இதன் விளைவாக தென் கொரியாவில் இவ்வீதம் 1986இல் 25வீதமாகவும் தாய்வானில் 33 வீதமாகவும் ஹொங்கொங்கில் 13வீதமாகவும் அதிகரித்தது. இன்று தென்கொரியாவும் ஹொங் கொங்கும் உயர்கல்வியை மேலும விரிவுசெய்து வருகின்றன. இதனால் 1995 இவ்வீதம் தென் கொரியாவில் 44ஆகவும் ஹொங்கொங்கில் 25 ஆகவும் அதிகரித்துள்ளது. மனித வலுத் தேவைகளை மட்டுமன்றி உயர்கல்விக்கான சமூக தேவைகளும் இப்பிரிவுக்குக் காரண மாயின.

தென்கொரியாவிலும் தாய்வானிலும் உயர் கல்வியை வழங்குவதில் தனியார் துறையினர் முன்னணியில் நிற்கின்றனர். தென்கொரியாவில் 66 வீதமான உயர்கல்வி நிலையங்கள் தனியார் துறையினருடையதாகும். தாய்வானில் உயர்கல்வி மாணவரில் 70 வீதமானவர்கள் தனியார்துறை நிலையங்களில் உயர்கல்வி பயிலுகின்றனர். இதற்கு மாறாக, ஹொங்கொங் கிலும், சிங்கப்பூரிலும் தனியார் துறையினரின் பங்களிப்பு மிகவும் குறைவு. இந்நாடுகளின் உயர்கல்வியில் அரசாங்கங்களே முக்கிய பங்கு கொள்கின்றன.

தென்கொரியாவிலும் தாய்வானிலும் உயர் கல்வியைப் பொறுத்தவரையில் அரசாங்கக் கட்டுப்பாடு அதிகமாக உண்டு. இந்நாடுகளில் காணப்படும் போர் நிலைமைகளும் அதிக தொகையான தனியார் நிறுவனங்களும் இதற்குக் காரணமாகும். கல்வி வாய்ப்புகளும் பாட ஏற்பாடும் இத்தகைய அரச கட்டுப் பாட்டிற்குட்படுகின்றது. தென் கொரியாவில் பொருளாதார முறையின் தேவைகளுடன் உயர் கல்வியை இணைக்கும் முறையில் அரச கொள்கை வகுக்கப்படுகின்றது. அந்நாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று அரசாங்கம் கனரகப் பொறியியல் மற்றும் இரசாயனக் கைத்தொழில்களில் கவனம் செலுத்தி வருவதால் அவற்றுக்கேற்ப இடைநிலை, உயர்நிலைக் கல்வி நிலைகளில் தொழில், தொழில் நுட்பப் பயிற்சி நெறிகள் அறிமுகம் செய்யப்படுகின்றன. அரசாங்கம் இப்பயிற்சி நெறிகளையே மாணவர்கள் பயில வேண்டுமென எதிர்பார்க்கின்றது. தொழில் உரிமையாளர்களும் இதனையே விரும்புகின்றனர். ஆயினும் பெற்றோர்கள் உயர் வருமானங்களைப் பெறக்கூடிய வாய்ப்புகளைத் தரும் பொதுக்கல்வியையே விரும்புகின்றனர்.

தாய்வான் அரசும் சகல கல்வி நிலைகளையும் பொருளாதார முறையின் தேவைகளுடன் இணைக்க முற்பட்டது. மாணவர்களை தொழில்/தொழில் நுட்பக்கல்விக்கு வழிப்படுத்தும் முயற்சியில் அரசு வெற்றியும் பெற்றது. அந் நாட்டில் 17-19 வயதுடைய இளைஞர்களில் 70 வீதமானவர்கள் இப்பயிற்சி நெறியினையே பயிலுகின்றனர். ஆயினும் இக்கல்வித் துறைக்குக் குறைவான அந்தஸ்தே கிட்டுகின்றது. பெரும்பாலும் நூற்கல்வி வாய்ப்புகள் கிடைக்கப் பெறாதவர்களே தொழிற் பயிற்சி நெறிகளை நாடுகின்றனர். மனித வலுத் திட்டமிடல், உயர்கல்வியின் விரிவு என்பவற்றை நாடிய இவ்விரு நாடுகளிலும் இறுதியில் கல்விக்கும் வேலைவாய்ப்பின்மைக்குமிடையே பொருந்தப்பாடின்மையே ஏற்பட்டது; மேலும் இந்நாடுகளில் இளைஞர் அமைதியின்மை தோன்றியதும் தற்செயலான ஒரு சம்பவமல்ல. இதனால் மனித வலுத்திட்டமிடல் அணுகு முறையும் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

ஹொங்கொங் நாட்டில் உயர்கல்வி வாய்ப்புகள், நிதி என்பன அரசாங்க மட்டத்தில் தீர்மானிக்கப் படுகின்றது. ஆயினும் உயர்கல்வி முறையை முற்றாக அரசாங்கம் கட்டுப்படுத்துவதுமில்லை; பொருளாதார முறையின் மனிதவலுத் தேவைகள் வலியுறுத்தப்படுவதுமில்லை. தொழிற் சந்தையின் தேவைகளுக்கேற்ப அரசும் ஏனைய நிறுவனங்களும் சேர்ந்து நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குகின்றன. இதனால் பொறியியல், சட்டம், மருத்துவம், கணனி, வர்த்தகவியல் கற்கை நெறிகள் போன்ற துறைகளிலேயே விரிவு ஏற்பட்டது. இந்நாட்டில் பொருளாதார முறையின் மனிதவலுத் தேவைகள் கருத்திற் கொள்ளப் பட்டாலும் தென்கொரியாவில் போன்று கல்வி-தொழிற் சந்தைத் தொடர்பு மத்திய அரசால் திட்டமிடப்படுவதில்லை.

கல்வி முறையின் பாடஏற்பாட்டைத் தீர்மானிக்கும் அதிகாரம், நான்கு நாடுகளிலும் அரசிடமே வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கல்விப் பாட ஏற்பாட்டின் நோக்கம், அடிப்படை எழுத்தறிவு, எண்ணறிவு என்பவற்றை வழங்கு வதும் சமூக ஒருமைப்பாடு, தேசிய ஒற்றுமை என்பவற்றை ஏற்படுத்துவதுமாகும்.

இடைநிலைக் கல்வி நிலையில் தாய்வானும் தென்கொரியாவும் பெரும்பாலான மாணவர் களைத் தொழில் நுட்பபாட ஏற்பாட்டைக் கற்கச் செய்தன. சிங்கப்பூரும், ஹொங்கொங்கும் இப்பாட ஏற்பாட்டை சில மாணவர்களுக்கே வழங்கின. இடைநிலைக் கல்வி நன்கு விரிவடைந்த போதிலும், நூற்கல்விப் பாட உள்ளடக்கம் பொரு ளாதார வளர்ச்சி ஏற்படு முன்னர் இருந்ததை ஒத்தாகவே இருந்தது. பெற்றோர்கள் நூற்கல்விப் பாட ஏற்பாட்டையே பெரிதும் விரும்பினர். இதனால் நூற்கல்விப் பிரிவில் சேர போட்டி அதிகமாயிற்று.

இந் நாடுகளில் பாடசாலைக் கல்வி கூடிய அளவுக்குத் தெரிவுப் பரீட்சைகளில் சித்தி யெய்துவதற்கான ஆயத்தத்தை வழங்குவ தாகவே உள்ளது. தென்கொரியாவில் 40 வீத மான இளைஞர்களுக்கு உயர்கல்வி வாய்ப்பு கள் இருந்தாலும் பாடசாலைக் கல்வியில் போட்டி அம்சம் இருக்கவே செய்கின்றது. பட்டதாரி களுக்குப் போதிய வேலைவாய்ப்புகள் இல்லை யாயினும் பட்டப்படிப்பு பெரிதும் நாடப்படுகின்றது. இதேபோன்ற இயல்புகள் சிங்கப்பூர், ஹொங் கொங் ஆகிய நாடுகளிலும் காணப்படுகின்றது. இந்நாடுகளின் கல்வி முறைகளுக்குப் பரீட்சைகளே உந்து சக்தியாக விளங்குகின்றன.

கல்விமுறையில் காணப்படும் பரீட்சை மையத் தன்மை, போட்டி என்பவற்றுடன் சமூக-அரசியல் நோக்கங்களும் முக்கிய இடம் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்

அரசின் மத்திய கட்டுப்பாட்டால் ஒழுங்கு படுத்தப்படும் பாட ஏற்பாடு இளைஞர் மத்தியில் சமூக இணக்கம், பண்பாட்டு அடையாளம் என்னும் உணர்வுகளையும் வளர்க்க முற்படு கின்றது. போர் சூழ்நிலையால் பீடிக்கப்பட்டுள்ள தென்கொரியாவிலும் தாய்வானிலும் நாட்டுப் பற்றும் தேசிய முன்னேற்றமும் முக்கிய பாட ஏற்பாட்டு நோக்கங்களாக உள்ளன.

பல இன மக்கள் வாழும் சிங்கப்பூரில் பாட ஏற்பாடு இனமுரண்பாடுகளைக் குறைப்பதையும் அரசியல், சமூக உறுதிப்பாட்டை ஏற்படுத்து வதையும் நோக்காகக் கொண்டது. பாடசாலைக் கல்வியில் ஆங்கிலம் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் நோக்குடன் பயன்படுத்தப்படு கினறது.

ஆயினும் ஹொங்கொங்கின் கல்வி முறையில் இத்தகைய தேசிய, அரசியல் நோக்குகள் காணப்படவில்லை. சீனப்பண்பாடு, ஹொங்கொங் கின் அரசியல் அந்தஸ்து, சீனக்குடியரசு போன்ற அம்சங்கள் பாட ஏற்பாட்டில் வலியுறுத்தப்படுவதில்லை. பாட ஏற்பாட்டில் பண்டைய சீனவரலாறு, இலக்கியம், கருத்து வேறுபாட்டுக்கு இடமற்ற கணிதம், விஞ்ஞானம், தொலைவிலுள்ள நாடுகளின் வரலாறு, புவியி யல் போன்ற அம்சங்களே காணப்படுகின்றன. ஆயினும் 1997இல் நாடு சீனக்குடியரசிடம் ஒப்படைக்கப்படும் என்பது உறுதியான பின்னர் பாட ஏற்பாட்டில் சீன கலாசாரத்திற்கு முக்கிய இடமளிக்கப்பட்டது.

பொதுவாகவே கிழக்காசிய நாடுகளின் பொருளாதார, கல்வி வளர்ச்சி அனுபவங்களில் பல வேறுபாடுகளைக் காணமுடியும் என்பதற்கு இந்நான்கு நாடுகளின் அனுபவங்கள் உதாரண மாக அமைகின்றன. கல்வித்துறையைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தின் பங்கு, கல்வி நிதிக்கான மூலாதாரங்கள், அரசாங்கக் கட்டுப்பாடு, தனியார் துறையின் பங்கு, தொழில் நுட்பக்கல்வியின் விரிவு, பாட ஏற்பாட்டு நோக்கங் கள் என்னும் அம்சங்களில் பல வேறுபாடுகளை அவதானிக்க முடிகின்றது. எடுத்துக் காட்டாக தென்கொரியாவும் தாய்வானும் தொழில், நுட்பக் கல்வியையும் சிங்கப்பூரும், ஹொங் கொங்கும் பொது நூற்கல்வியையும் பெரிதும் வலியுறுத்துகின்றன. மேலும் இந்நாடுகளில் வலுவான அரசுகள் இருந்தபோதிலும் பாடசாலைக் கல்வியில் அரசின் தலையீட்டில் வேறுபாடுகளைக் காணமுடிகின்றது.

இந்நாடுகளின் கல்விமுறைகளும் கல்வித் துறை அனுபவங்களும் கல்விக்கொள்கை உருவாக்கத்துக்கான சில பொது அம்சங் களையும் வழங்குகின்றன:

* அடிப்படை எழுத்தறிவு, எண்ணறிவு, சமூக இணக்கம் என்பவற்றை வழங்குவதில் ஆரம்பக்கல்வியின் பங்கு.
* பொருளாதார வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தின் பின்னர், கட்டம் கட்டமாக, ஒன்றன்பின் ஒன்றாக இடைநிலைக்கல்வியும் உயர் கல்வியும் விரிவடைந்தமை.
* தொழில் நுட்பரீதியான கைத்தொழில்துறை உருவானதுடன் சமாந்திரமாக இக்கல்வித் துறைகள் விரிவடைந்தமை.
* அரசுகள் சமூக இணக்கத்துக்கும் அரசியல் உறுதிப்பாட்டுக்கும் கல்வியைக் கருவியா கப் பயன்படுத்தியமை (ஹொங்கொங் இதற்கு விதிவிலக்கு.)
* பாடசாலைக்கல்வி திறமைக்கு முன் னுரிமை வழங்கி போட்டியை வலியுறுத்திய அதே வேளையில், சமூகத்தின் சகல பிரிவினர்களும் தமது சமூக-பொருளாதார அந்தஸ்தை உயர்த்திக் கொள்வதற்கான வாய்ப்புகளையும் வழங்கியது.

குருடர்களும் பார்வையுடையவர்களும் சமனாக முடியாது போலவே அறிவுள்ளோரும் அறிவற் றோரும் சமமாக மாட்டார்கள்.

திருக்குர்ஆன்

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையார் கல்லா தவர்"

திருக்குறள்

கற்றவர் முகத்தில் இரண்டு கண்களையுடைவர்.
கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்களையுடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பித்தல் முறைகளைத் தெரிவு செய்யும் போதும் அவற்றைப் பயன்படுத்தும் போதும் ஆசிரிய மாணவர்கள் கவனிக்க வேண்டிய அம்சங்கள்.

**எம்.ஏ.எம். ஜெலீல்** M.A.
உப-பீடாதிபதி (ஆசிரியர் தொடர் கல்வி)

தேசிய கல்விக் கல்லூரிகளைப் பொறுத்த வரையில் இரண்டு வருட கல்லூரி உள்ளகப் பயிற்சிக் காலத்திலும், ஒரு வருட கட்டுறு பயில்வுக் காலத்திலும் ஆசிரிய மாணவர்களுக்கு ஒரு பரந்த அளவில் கற்பித்தல் முறைகள் பற்றிய அறிவு வழங்கப்படுகின்றது. இம்முறைகளை கல்விக் கல்லூரிகளைவிட்டு வெளியேறிய பின்னர் ஆசிரிய மாணவர்களில் பலர் பின்பற்றிக் கற்பித்தலை மேற்கொள்வதில்லை. பழைய முறைகளிலேயே இன்றும் நமது ஆசிரியர்கள் கற்பித்துக்கொண்டிருப்பதைக் காணும்போது நாம் பெரிதும் வருந்த வேண்டியவர்களாக உள்ளோம். ஆகவே கற்பித்தல் முறைகள் தொடர்பாகப் பின்வரும் அம்சங்களில் கவனம் செலுத்துவது நம் ஒவ்வொருவரினதும் கட்டாயக்கடனாகும்.

**கற்பிக்கும் பாடம் பற்றிய அறிவும், அதன் தன்மையும்.**

ஒரு பாடத்தைக் கற்பிப்பதற்கு முன்னர் அப்பாடம் பற்றிய அறிவை மிகத் தெளிவாகப் பல முறை வாசித்துக் தீர்க்கமான முறையில் விளங்கிக் கொள்ள வேண்டும். விளக்கம் போதாத இடத்து அனுபவம் நிறைந்த ஆசிரியர்களிடம் கேட்டு விளங்கிக்கொள்ள வேண்டும். அல்லது விளக்க நூல்களைத் தேடிப்பெற்று அறிந்து கொள்ள வேண்டும். பாடத்தைக் கற்பிக்கும் முறையைத் தெரிந்தெடுப்பதற்கு முன்னர் அப்பாடம், விடயங்களை முன்வைக்கும் பாடமா? அல்லது செயற்பாடுகளுடன் கூடிய பாடமா? என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

செயற்பாடுகளுடன் கூடிய பாடமாயின் செயற்பாடுகள் பொதிந்த பின்வரும் கற்பித்தல் முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

1. செய்து காட்டல் (Demonstration)
2. சிந்தனையைக் கிளறும் முறை (Brain Storming)
3. நாடகமாக நடித்தல் (Dramatization)
4. படிமுறைத் திட்டமிட்ட கற்கும் முறை (Programmed Learning)
5. கண்டு பிடித்துக் கற்கும் முறை (Discovery Learning)
6. பிரச்சினை தீர்த்தல் முறை (Problem Selving)
7. செய்திட்ட முறை (Project Method)

ஓர் ஆசிரியர் கற்பிக்கும் பாடம், விடயத்தை மட்டும் போதிப்பதாக இருக்குமாயின், தான் கற்கும் விடயத்தைப் பல பகுதிகளாகப் பிரித்துக் குழு முறைக் கற்பித்தலைப் பயன்படுத்தலாம். அதனூடாக ஒரு சிறந்த கலந்துரையாடலையும் மேற்கொள்ளலாம். மாணவர்கட்குப் போதிய அறிவை மேலும் ஆசிரியர் (Mini - Lecture) சிறு விரிவுரை மூலம் வழங்கலாம்.

**பாடத்தின் நோக்கம் நிறைவேற்றப்படல்.**

ஆசிரியர் கற்பிக்கும் பாடத்தின் ஊடாகப் பின்வரும் நோக்கங்கள் நிறைவேற்றப்படும்.

1. அறிதல் ஆட்சி
2. உள இயக்க ஆட்சி
3. மனவெழுச்சி ஆட்சி
4. விழுமியங்கள் (Values)

மேற்படி எல்லா நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமாயின் குறிப்பிட்ட ஒரு முறையைத் தேர்ந்தெடுப்பதைவிட பொருத்தமான வேறொரு முறையை நோக்கத்துக்கேற்ப தெரிந்தெடுப்பது நல்லது.

**மாணவர்களின் தன்மைகள் / நிலைகளை அறிந்து கொள்ளல்.**

ஒரு வகுப்பறையை எடுத்துக் கொண்டால் பல வகைத் தன்மைகளைக்கொண்ட மாணவர்களைக் காணலாம். நுண்ணறிவில் கூடியவர்கள், பொருளாதாரத்தில் கூடியவர்கள் அல்லது குறைந்தவர்கள், உடல் நிலையில் பொருத்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடு உள்ளவர்கள், அற்றவர்கள், இன்னும் பல சமூகமட்டங்கள் கொண்ட மாணவர்கள் காணப் படுவர். ஆகையினால் மேற்கூறப்பட்ட எல்லா மாணவர்களுக்கும் பொருத்தமான ஒரு கற்பித்தல் முறையைத் தெரிவு செய்தல் வேண்டும்.

**வகுப்பு மட்டங்களுக்கு ஏற்ப பொருத்தமாக இருத்தல்.**

கற்பித்தல் முறைகளைத் தெரிவு செய்யும் போது மாணவர்களின் வகுப்பு மட்டங்களுக்கு ஏற்ப கற்பித்தல் முறைகளைத் தெரிவு செய்தல் மிக முக்கியமானதாகும். சில கற்பித்தல் நுட்ப முறைகள் ஆரம்ப வகுப்பு மாணவர்கட்குப் பொருத்தமானவை அல்ல.

உதாரணமாக விரிவுரை முறை / கலந்துரையாடல் முறை ஆரம்ப வகுப்பு மாணவர்கட்குப் பொருந்தா, ஆரம்ப வகுப்பு மாணவர்கட்கு அதிகமாக போலச் செய்தல், நடித்தல், செய்து கற்றல், விளையாட்டு முறைகள் சிறந்தவை, இடைநிலை வகுப்பு மாணவர்கட்கு சிந்தனையைக் கிளறும் முறை, கண்டு பிடித்துக் கற்கும் முறை பிரச்சினை தீர்க்கும் முறைகள், செய்திட்ட முறைகள் சிறந்தவை.

**வளங்கள் பற்றிய அறிவு.**

நீங்கள் வகுப்பறையில் உபயோகிக்க எண்ணும் முறையினைச் சிறந்த முறையில் செயற்படுத்துவதற்குத் தேவையான வளங்கள் போதியளவு உங்களிடம் அல்லது உங்கள் பாடசாலையில் உள்ளனவா என்பதைத் திட்டமிட்டுக்கொள்ள வேண்டும். விரிவுரை முறையைப் பயன்படுத்தும் ஆசிரியருக்கு கரும்பலகையும், சுண்ணக்கட்டியும் போதுமானது. ஆனால் ஏனைய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தும் போது வளங்கள் அதிகம் தேவைப்படும்.

உதாரணமாகக் குழுமுறைச் செயற்பாடெனின் குழுக்கள், வெவ்வேறாக அமர்வதற்கு ஆசனங்கள், இடவசதிகள் என்பன தேவைப்படும். தேவையான நூல்கள், தேசப்படங்கள், சித்திரங்கள், அட்டைகள், நிறப்பேனைகள், நிறப்பென்சில்கள், கருவிகள், நிறச் சுண்ணங்கள் அவசியம்.

இவை இல்லாதவிடத்து இம்முறைகள் வெற்றிகரமாகச் செய்ய முடியாமல் போகலாம். ஆசிரியர் ஒருவர் இவ்வளங்களை ஏலவே தேடிப்பெற்று வைத்துக்கொள்ள வேண்டும். அதன் பின்னரே இந்த முறையைத் தெரிந்தெடுத்துக் கற்பித்தலுக்காகப் பயன்படுத்த வேண்டும்.

**சூழற் காரணிகள் பற்றிய அறிவு.**

வகுப்பின் அமைப்பு, காற்றோட்டம், ஒளி, குறித்த பாடவேளை போன்றவை கற்பித்தல் முறையினைத் தெரிந்தெடுப்பதில் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

பொதுவாக அடைக்கப்பட்ட வகுப்பறைகள் செயற்பாட்டில் ஈடுபடக்கூடியதாகவும் இருக்கும். ஆகவே அதற்குப் பொருத்தமான கற்பித்தல் முறைகளைத் தெரிந்தெடுக்க வேண்டும்.

அடைக்கப்படாத வகுப்புக்கள் ஏனைய வகுப்புக்களுக்குப் பல கஷ்டங்களைக் கொடுக்க வாய்ப்புண்டு. இத்தகைய இடவசதி ஒரு பாடசாலையில் காணப்படாதபட்சத்தில் தனியான ஒரு மண்டபத்தைப் பயன்படுத்துவது நல்லது.

நல்ல காற்றோட்டமும், ஒளியும் உட்புகக்கூடிய இடங்களைத் தெரிவு செய்வதன் மூலம் மாணவர்கள் செயற்பாட்டில் ஈடுபட்டாலும் களைப்படையாமல் இருக்க வழியேற்படும்.

நூல்கள், படங்கள், சித்திரங்கள், மேந்தலை எறியித்தாள்கள் என்பவற்றை பயன்படுத்துவதாயின் நல்ல ஒளியும், வெளிச்சமும் உள்ள வகுப்பறைகளை உபயோகித்தல் வேண்டும்.

ஓர் ஆசிரியர் தெரிந்தெடுத்த முறை தமக்கும் மாணவருக்கும் பரிச்சயமான முறையா என்பதைச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

எந்த கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துவதாயினும் அவை பற்றி முதலில் பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அப்போதே எமது கற்பித்தல் சிறப்புடையதாக அமையும்.

சிறந்த கற்பித்தல் முறைகளை ஆசிரிய, மாணவர்கள் கைநழுவ விடாமல் தம் கற்பித்தல் செயற்பாடுகளில் உபயோகித்து நன்கு பயன்பெற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியின் வளர்ச்சிப் போக்கு

யூ. எல். எம். புஹாரி M.A.
விரிவுரையாளர் இணைப்பு அலுவலர் (கல்வி)

அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரி உத்தியோக பூர்வமாக 1992.05.10ஆந் திகதியே ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதிலும், இவ்வாரம்பம் தொடர்பான நிகழ்வுகள் அதற்கு முன்ரே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இவ்வகையில் கொட்ட கல்ல சிறிபாத கல்விக் கல்லூரியில் இருந்து மூன்று விரிவுரையாளர்கள் ஜனாப். எம்.எச்.எம். மன்சூர், ஜனாப். யூ.எல்.எம். புஹாரி, ஜனாப. எஸ்.எம்.எல்.எம். நு.்.மான் ஆகியோர் இடமாற்றப் பட்டு 1992.01.10 ஆந் திகதி அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கடமை யேற்றுக் கொண்டனர். இதன் பின்னர் கல்விக் கல்லூரியின் ஆரம்பம் தொடர்பான நிகழ்வுகளை மேற்கொள்ளும் பொருட்டு, முதலாவது பீடாதி பதியாக மருதமுனையை பிறப்பிடமாக கொண்ட அல்-ஹாஜ். ஏ.ஆர்.ஏ. அஸீஸ் அவர்கள் வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவியிலிருந்து விடுவிக்கப் பட்டு 1992.04.10 ஆந் திகதி அன்று கடமை ஏற்றுக்கொண்டார்.

இது இவ்வாறு இருக்க 1991ஆம் ஆண்டு க.பொ.த உயர்தார பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், சிறிபாத கல்விக் கல்லூரிக்கு முஸ்லிம் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் சிறிபாத கல்விக் கல்லூரி மலையக தமிழ் மாணவர்களுக்கென்று உருவாக்கப்பட்ட தால், முஸ்லிம் மாணவர்களுக்கான அனுமதி மறுக்கப்பட்டபோது, அம்மாணவர்களை அனுமதிக்கும் பொருட்டு, முஸ்லிம்களுக்கான தனியான கல்விக் கல்லூரி உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென முஸ்லிம் கல்வி மாநாடு, இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், அப்போதைய பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் துறைமுக அபிவிருத்தி, புணர்வாழ்வு புனரமைப்பு அமைச்சருமான கௌரவ எம்.எச்.எம். அஷ்ரப், முன்னாள் கௌரவ வர்த்தக வாணிப அமைச்சர் ஏ.ஆர்.ஏ. மன்சூர், முன்னாள் பொத்து வில் முதல்வர் எம்.ஐ. உதுமாலெவ்வை ஆகியோர் குரல் எழுப்பியதோடு, மாத்திரம் நின்றுவிடாது, பாராளுமன்றத்துக்கும் இப் பிரச்சினையை கொண்டு சென்றனர். இத்துடன் மாத்திரம் நில்லாது, அப்போதைய கல்வி உயர் கல்வி அமைச்சராயும், மேன்மை தங்கிய முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸா அவர்களையும் நேரடியாக சந்தித்து கௌரவ எம்.எச்.எம். அஷ்ரப், கௌரவ. ஏ.ஆர்.ஏ. மன்சூர் ஆகியோர் விளக்கினர். அப்போது முஸ்லிம் களுக்கான தனியான கல்விக் கல்லூரி உடனடி யாக அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஒரு பகுதியில் ஆரம்பிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. இந்த வரிசையில் அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரியினை ஆரம்பிப்பது தொடர்பான முதலாவது கலந்துரை யாடல் 1992.04.27 அன்று அப்போதைய கல்விக் கல்லூரிகளின் பிரதம ஆணையாளர் பி. குமாரசிறி அவர்களின் தலைமையில் முன்னாள் பொத்துவில் முதல்வர் எம்.ஐ. உதுமாலெவ்வை அவர்களின் உதவியுடன் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடை பெற்றது. இதனைத் தொடர்ந்து முதலாவது தொகுதி மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை கல்வி, உயர் கல்வி அமைச்சில் 1992.02.20 தொடக்கம் 1992.04.24 வரை இடம் பெற்றது. இவ் நேர்முகப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 57 பயிலுனர்கள் ஆரம்ப, கணித, விஞ்ஞான நெறிகளுக்கு முதலாவது தொகுதியினராக தெரிவு செய்யப் பட்டனர். இவர்களுள் சிறிபாத கல்விக் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் மாணவர்களும் அடங்குவர். இத்தோடு முதலா வது தொகுதி கல்வி அணியினராக, விரிவுரை யாளர் இணைப்பு அலுவலகர் ஒருவர், எட்டு விரிவுரையாளர்களும் நியமிக்கப்பட்டு 1992.05.04 தொடக்கம் 1992.05.09 காலப்பகுதியினுள் கடமையேற்றுக் கொண்டனர். அவர்களது பெயர் விபரம் வருமாறு:

01. ஜனாப். எம்.எல்.ஏ. மஜீட்
    விரிவுரையாளர் இணைப்பு அலுவலர் (நிருவாகம்)
02. ஜனாப். ஏ.எம். அகமட்லெவ்வை
    விரிவுரையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமீர்அலி பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை

03. ஜனாப். எச்.எம். ஆதம்பாவா
உதவி விரிவுரையாளர்
04. ஜனாப். ஏ. அபூபக்கர்
உதவி விரிவுரையாளர்
05. ஜனாபா. எம்.ஏ. றாசிக்
உதவி விரிவுரையாளர்
06. மௌலவி. ஏ.எல்.எம். ஹாசிம்
உதவி விரிவுரையாளர்
07. ஜனாப். எம்.ஐ.எம். நவாஸ்
உதவி விரிவுரையாளர்
08. ஜனாப். எம்.எம்.எம். நஃபர்
உதவி விரிவுரையாளர்
09. திருமதி. ஜே. சேரன்
உதவி விரிவுரையாளர்

அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரியினை உடனடியாக ஆரம்பிக்கும் பொருட்டு, அதற்குத தேவையான பௌதீக வளங்களில் அதிக மானவை அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இருந்துதான் பெறப்பட்டன.

அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரியின் உத்தியோகபூர்வமான அங்குராப்பண வைபவம் வெகுவிமர்சையாக கோலாகல வைபவங்களுடன் 1992.05.10ஆந் திகதி அன்று முன்னாள் ஜனாதி பதி மேன்மை தங்கிய ரணசிங்க பிரேமதாஸ அவர்களின் தலைமையில் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் துறைமுக அபிவிருத்தி புணர்வாழ்வு புணரமைப்பு அமைச் சருமான மர்ஹூம் கௌரவ எம்.எச்.எம். அஷ்ரப், முன்னாள் கௌரவ வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஜனாப். ஏ.ஆர். மன்சூர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் திறந்த வெளியரங்கில் சிறப்பாக நடந்தேறியது.

அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி இலங்கை யின் கல்விக் கல்லூரி வரலாற்றில் ஒன்பதாவது கல்விக் கல்லூரி என்பது குறிப்பிடத்தக்கது. இக்கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது தொகுதி பயிலுனர்கள் 57 பேரில் 26 பேர் ஆரம்ப நெறிக்கும், 28 பேர் விஞ்ஞானநெறிக்கும், 03 பேர் கணிதநெறிக்குமாக மொத்தம் 24ஆண் பயிலுனர்களும், 33 பெண் பயிலுனர்களும் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் இவர்களில் 51 பேரே இறுதி வரை நெறியினைத் தொடர்ந்து வெளியேறினர்.

கல்விக் கல்லூரிக்கான கல்விசாரா உத்தியோ கத்தர்களும், ஊழியர்களும் 06.01.1992 தொடக்கம் 13.08.1992 வரையுள்ள காலப் பகுதியில் நியமிக்கப்பட்டு கடமையேற்றுக் கொண்டனர். அவர்களது பெயர் விபரம் வருமாறு:

01. செல்வி. எஸ்.எல். ஜெஸீமா (இலிகிதர்)
02. எம்.ஏ.எம்.எச். மனாஸ் (இலிகிதர்)
03. ஏ.ஆர்.எம். ஜஃபர் (சமையலாளர்)
04. ஏ.எல். அபூபக்கர் (சமையலாளர்)
05. எஸ்.எம். பாலீக் (நீர்க் குழாய் பொருத்துனர்)
06. எம்.சி. றபாய்டீன் (நோயாளர் அறை ஊழியர்)
07. எம்.எச்.தௌபீக் (காவலாளி)
08. பீ.ரி. சுபுஹான் (தொழிலாளி)
09. ஏ.சி.எம். நியாஸ் (தொழிலாளி)
10. யூ.எல்.எம். பாறுக் (காவலாளி)
11. செல்வி. எம்.ஐ. முக்குலம்(நோயாளர் அறை ஊழியர்)
12. ஐ.எல்.எம். தஸ்தகீர் (காவலாளி)
13. யூ.எல். அலியார் (தச்சுத் தொழிலாளர்)
14. எம்.எச்.எம். முஸ்தபா (காவலாளி)
15. செல்வி. எஸ்.எம். அவ்வா உம்மா (நோயாளர் அறை ஊழியர்
16. ஏ. சீனிமுகம்மது (நூலக ஊழியர்)
17. எஸ்.எம். நூர் முகம்மது (நூலக ஊழியர்)
18. செல்வி. எம்.ஏ. உம்முல் மஜீனா (விஞ்ஞான கூட உதவியாளர்
19. எம்.ஏ. மஜீட் (விஞ்ஞான கூட உதவியாளர்)
20. எம்.ஐ.எம். ஜஃபர் (சமையலாளர்)

இத்தோடு 1992.10.01 இல் விடுதி அத்தியட்ச கராக யூ.எல். வாஹிட் அவர்களும், பதிவாளராக அல்-ஹாஜ் எம்.ஐ.எம். முஸ்தபா அவர்களும் இணைக்கப்பட்டு கடமையேற்றனர்.

இந்த வளர்ச்சியினை கண்காணிக்கும் பொருட்டு 1992.10.19 அன்று கல்விக் கல்லூரியின் அன்றைய பிரதம ஆணையாளர் பி. குமாரசிறி அவர்களும், அன்றைய அம்பாறை மாவட்ட பிராந்திய கல்விப் பணிப்பாளர் வில்மட் பெரேரோ அவர்களும் சமூகமளித்து இந்நிலையினை உறுதிப்படுத்தினர். இக்காலகட்டத்தில் முன்பு விரிவுரையாளர் இணைப்பு அலுவலராக கடமை யாற்றிய அலுவலர் பதவி உயர்வு பெற்றுச் செல்ல, புதிய விரிவுரையாளர் இணைப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலராக ஜனாப். ஏ.எல்.ஏ. றசூல் அவர்கள் நியமிக்கப்பட்டு கடமையேற்றுக் கொண்டார்.

இதன் பின்னர் 1994 இல் கல்விக் கல்லூரி அனுமதிக்கான மாணவர்களின் தொகை 81ஆக அதிகரிக்கப்பட்டது. மேலும் நான்காவது நெறியாக உடற்கல்வி நெறி ஆரம்பிக்கப்பட்டது. இந்த மாணவர்களின் அதிகரிப்பின் பொருட்டு 1993ஆம் ஆண்டில் அப்போதைய வர்த்தக வாணிப அமைச்சர் கௌரவ ஏ.ஆர். மன்சூர் அவர்களின் முயற்சியினால் இரண்டு விரிவுரை மண்டபங்களின் தொகுதி நிர்மானிக்கப்பட்டன. இவ்வாறு புதிதாக அமைக்கப்பட்ட விரிவுரை மண்டபங்களின் இரு தொகுதிகளைக் கொண்ட கட்டிடங்கள் கௌரவ அமைச்சர் ஏ.ஆர். மன்சூர் அவர்கள் சமூகமளிக்க முடியாது போனமையால் அப்போதைய கல்விக் கல்லூரி பிரதம ஆணையாளர் பி. குமாரசிறி அவர்களினால் 1993.07.26 அன்று வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இந்த இரு கட்டிடங்களுமே அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரிக்கென அமைக்கப்பட்ட முதலாவது கட்டிடத் தொகுதியாகும் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இதனைத் தொடர்ந்து 1993.01.01க்கும் 1993.02.17க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மேலும் 03 விரிவுரையாளர்களும் ஒரு இலிகிதரும் நியமிக்கப்பட்டனர். அவர்களது பெயர் விபரம் வருமாறு:

01. எம்.ஐ.எம். முஸ்தபா (உதவி விரிவுரையாளர்)
02. எச்.எம். ஆதம்பாவா (உதவி விரிவுரையாளர்)
03. எம்.ஏ. கலீல் (உதவி விரிவுரையாளர்)
04. திரு. எஸ். ஜெயராஜ் (இலிகிதர்)

இத்தோடு இரண்டாவது தொகுதி கல்விசாரா ஊழியர்களாக 10 பேர் 1993.04.25க்கும் 1993.04.28க்கும் இடைப்பட்ட காலத்தில் கடமையேற்றுக் கொண்டனர். அவர்களது பெயர் விபரம் வருமாறு:

01. யூ.எல்.ஜே. மகுதா (சமையலாளர்)
02. எம்.எ. மாசாஹினா (சமையலாளர்)
03. ஏ.எச். நூறுல் ஹம்தா (சமையலாளர்)
04. யு.எல்.எம். ஹுசைன் (சமையலாளர்)
05. எஸ்.எல். யூசுப்லெவ்வை (சமையலாளர்)
06. யு.எல்.ஏ. றவூப் (காவலாளி)
07. யு.எம். ஒக்காஸ் லெவ்வை (காவலாளி)
08. எம்.எச். றபீக் (காவலாளி)
09. யு.எல்.எம். நியாஸ் (தொழிலாளி)
10. எம்.எச்.எம். சரீப் (நீர்க் குழாய் திருத்துனர்)

மேலும் மூன்றாவது தொகுதி கல்விசார் உத்தியோகத்தர்களாக ஒரு விரிவுரையாளர் இணைப்பு அலுவலரும், 08 விரிவுரையாளர்களும் 1993.09.01க்கும் 1993.10.15க்கும் இடைப்பட்ட காலத்தில் கடமை ஏற்றுக் கொண்டனர். அவர்களது விபரம் வருமாறு:

01. ஏ.சி.ஏ.எம். மன்சூர் (விரிவுரையாளர் இணைப்பு அலுவலர் (கல்வி)
02. எஸ்.எம். உபைத்துல்லாஹ் (உதவி விரிவுரையாளர்)
03. எம்.ஏ.எம். ஜலில் (உதவி விரிவுரையாளர்)
04. திரு. ரி. துரைராசா (உதவி விரிவுரையாளர்)
05. ஏ.சி. சைபுதின் (உதவி விரிவுரையாளர்)
06. கே.எம். சுபையிர் (உதவி விரிவுரையாளர்)
07. எம்.கே.எம். ஜுபையிர் (உதவி விரிவுரையாளர்)
08. ஏ.எல்.எம். ஹாசீம் (உதவி விரிவுரையாளர்)
09. ஏ.எல்.எஸ்.ஏ. சத்தார் (விரிவுரையாளர்)

இது மாத்திரமன்றி 1993.12.01ல் கல்விக் கல்லூரிக்கான சாரதிகளாக யூ.எல்.எம். பாறுக், ஐ.எம். நாகூக் ஆகியோர் நியமிக்கப்பட்டதோடு 1993.01.12ல் கல்விக் கல்லூரிக்கான முதலாவது வாகனம் (வேன்) கிடைக்கப்பெற்றது.

இவ்வளர்ச்சியின் அடுத்த கட்டமாக 1994இல் நான்காவது நெறியாக உடற்கல்வி நெறிக்கு புதிதாக மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அத்தோடு விரிவுரையாளர் தங்குவதற்கான விடுதி ஒன்றும் புதிதாக அமைக்கப்பட்டது. இந்த விடுதிதான் அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரிக்கென ஒதுக்கப்பட்ட 10 ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்பட்ட முதலாவது கட்டிடமாக அமைந்தது. மேலும் 1995.11.01இல் மேலும் 03 உதவி விரிவுரையாளர்கள் கடமை ஏற்றுக் கொண்டனர் அவர்களது பெயர் விபரம் வருமாறு:

01. ஏ.எல். அகம்மது லெவ்வை (உதவி விரிவுரையாளர்)
02. திருமதி. என்.பீ.ஏ. றசீட் (உதவி விரிவுரையாளர்)
03. பி. ஏரம்பமூர்த்தி (உதவி விரிவுரையாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995.11.07ல் நூலகராக ஜனாப். எம். றுமைஸ் (றுகா) அவர்களும், 1996.02.15ல் விடுதி அத்தியட்சகராக ஜனாப். ஏ.எல்.எம். றமீஸ் அவர்களும், 1996.04.13ல் வாகனச் சாரதியாக ஜனாப். எஸ்.எம்.எம். இல்லியாஸ் அவர்களும் நியமிக்கப்பட்டனர்.

இதன் பின்னர் 1996ஆம் ஆண்டு கல்விக் கல்லூரிக்கான மாணவர் அனுமதியின்போது மாணவர் தொகை 105 ஆக அதிகரிக்கப்பட்டது. இவ்வாறு மாணவர் தொகை அதிகரிக்கப்பட்ட தால் கல்லூரிக்கான கட்டிட வசதிகளும் அதிக ரிக்கப்பட வேண்டிய தேவை ஏற்படலாயிற்று. இதனை முன்னாள் கௌரவ அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களிடம் சுட்டிக் காட்டியபோது, அவரது முயற்சியினால் 1997ல் கல்விக் கல்லூரிக்கான இரண்டாவது கட்டிடத் தொகுதி வழங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட கட்டிடத்தொகுதிகளாவன:

01. விரிவுரை மண்டபம் (சேர் றாசிக் பரீட் மாடிக்கட்டிடம்)
02. விரிவுரை மண்டபம் (சித்தி லெவ்வை மாடிக்கட்டிடம்)
03. பெண் பயிலுனர்களுக்கான விடுதிக்கட்டிடத் தொகுதி (ஆயிஷா விடுதி)
04.. பீடாதிபதி விடுதிக் கட்டிடம்
05. விரிவுரையாளர் விடுதிக் கட்டிடங்கள் இரண்டு
06. சிற்றூழியர் விடுதிகள் இரண்டு
07. உணவு விடுதிக் கட்டிடத்துடன் இணைந்த கலாசார மண்டபம்.

இவ்வாறு அமைக்கப்பட்ட சகல கட்டிடங்களும் கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட்பத்திரன அவர்கள் சமூகமளிக்க முடியாது போனமையால் முன்னாள் துறைமுகங்கள் அபிவிருத்தி புனர் வாழ்வு புனரமைப்பு அமைச்சர் கௌரவ மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களினால் 1997.03.24 அன்று திறந்து வைக்கப்பட்டது.

அட்டாளைச்சேனைக் கல்விக் கல்லூரியின் புகழ் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் பரவலாக பேசப் பட்டு வந்தது. அதாவது இறுதியாக திறக்கப்பட்ட கல்விக் கல்லூரியாக அன்று இருந்த போதிலும் அதன் அனைத்துத் துறை வளர்ச்சி அனைவ ராலும் பாராட்டப்படும் அளவுக்கு காணப்பட்டது. ஒவ்வொரு வருடமும் வெளியிடப்படும் இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகளைப் பொறுத்தவரை அனைத்து கல்விக் கல்லூரிகளையுடம் விட அதிக திறமைச் சித்திகளை பெறுவது அட்டா ளைச்சேனை கல்விக் கல்லூரியாகவே இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரியின் அனைத்துத் துறை வளர்ச்சியினையிட்டு ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு, கல்வி உயர்கல்வி அமைச்சர் கௌரவ ரிட்சட் பத்திரன அவர் களினால் தனது அமைச்சின் ஆலோசகராகவும், கல்விக் கல்லூரிகளின் முதலாவது பிரதம ஆணையாளராகவும் இருந்த திரு. குணபால விக்ரமரட்ன அவர்களை அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரிக்கு அனுப்பி வைத்தார். எனவே அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரியின் வளர்ச்சியினையிட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக 1997.11.15 அன்று திரு. குணபால விக்ரமரட்ன அவர்கள் இங்கு சமூகமளித்து உண்மையான நிலைமைகளை நேரடியாக அவதானித்தும் கண்டறிந்தும் அறிக்கை சமர்ப்பித்த போது இலங்கையில் உள்ள அனைத்துக் கல்விக் கல்லூரிகளுக்கும் முன் மாதிரியாக அட்டாளைச் சேனை தேசிய கல்விக் கல்லூரியைத்தான் கொள்ள வேண்டும் என குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பான அறிக்கை அன்றைய டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தமை அனை வரும் அறிந்த உண்மையாகும்.

இவ்வாறு இக்கல்விக் கல்லூரியினை பல வழிகளிலும் வளர்ச்சியடையச் செய்து அதன் புகழை எல்லா இடங்களுக்கும் பரவச் செய்த 'கிழக்கின் கல்வித் தாரகை', கல்லூரியின் தந்தையென விளிக்கப்படும் அல்-ஹாஜ் ஏ.ஆர்.ஏ. அஸீஸ் அவர்களுக்குப் பின்னர் இக்கல்விக் கல்லூரிக்கு இரண்டாவது பீடாதிபதியாக அட்டாளைச்சேனை கோட்டக் கல்விப் பணிப் பாளராக கடமையாற்றிய நிந்தவூரைப் பிறப்பிட மாகக் கொண்ட அல்-ஹாஜ் கே. முகம்மட் தம்பி அவர்கள் 1998.11.13இல் பீடாதிபதியாகக் கடமை ஏற்றுக் கொண்டார்கள். இவரது கடமையேற்பு வைபவத்தில் முன்னாள் கௌரவ அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் அவர்களும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான நிஸ்வி சின்ன லெவ்வை, எம்.ஐ.உதுமாலெவ்வை ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

1997ஆம் ஆண்டு பாராளுமன்ற சட்டத்தின் மூலம் அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி தேசிய கல்விக் கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டு 1997ஆம், 1998ஆம் ஆண்டுகளில் உலக வங்கியின் ஆசிரியர் கல்வி அபிவிருத்தி செயற் திட்டத்தின் மூலம் வகுத்தொதுக்கப்பட்ட நிதியின் மூலம் 1999இல் ஆரம்பிக்கப்பட்ட கட்டட வேலைகள் தற்பொழுது முடியுந் தறுவாயில் உள்ளன. அக்கட்டடங்களானவன :

01. விளையாட்டு மைதானமும் பார்வையாளர் அரங்கும்.
02. நிர்வாகக் கட்டிடத் தொகுதி
03. இரு உப-பீடாதிபதிகள் விடுதி
04. இரு விரிவுரையாளர் இணைப்பு அலுவலர் விடுதிகள்
05. இரு சிற்றூழியர் விடுதிகள்
06. பெண் பயிலுனர் விடுதி
07. பெண்களுக்கான உணவு பரிமாறும் அறை தொகுதி என்பன.

இவ்வேலைகள் அனைத்தும் முடிவடைந்ததும் கல்விக் கல்லூரிக்கான மாணவர் அனுமதி 215ஆக அதிகரிக்கப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது. அதுமாத்திரமன்றி ஆசிரியர் கல்வி அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் விஞ்ஞான கூட அபிவிருத்தி, நூலக அபிவிருத்தி, கணனிக் கல்வி அபிவிருத்தி என்ற பாரிய வேலை திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன. இச்செயல் திட்டங்களுடன் தொடர்புடையதாக நூலகம் தொடர்பான விஞ்ஞான தகவல் கற்கை நெறி போன்ற மேலும் பல புதிய நெறிகள் எதிர் காலத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளன. 1999ஆம் இஸ்லாம் நெறி புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2001இல் மேலும் 10 விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களின் விபரம் :

1. எம். பி. ஏ. அஸீஸ்
2. எஸ். என். ஏ. அருஸ்
3. ஏ. பாறூக்
4. ரி. கணேசரத்தினம்
5. மௌலவி எம். ஐ. ஐ.்பர்
6. கே. புண்ணியமூர்த்தி
7. பி. சத்தியநாதன்
8. திருமதி பி. ஜெயகுமார்
9. திருமதி எஸ். கனகசபை
10. திருமதி ரி. குகதாசன்

28 - 02 - 2001ஆம் திகதி முதல் நிருவாகத்திற்குப் பொறுப்பான உப-பீடாதி பதியாக கடமையாற்றிய அல்-ஹாஜ் ஏ. எல். ஏ றகூல் அவர்கள் பீடாதிபதியாகக் கடமை ஏற்றுக் கொண்டார். இன்னாரின் வருகை கல்விக் கல்லூரியின் வளர்ச்சிக்கு உரமாக அமையுமென பலராலும் நம்பப்படுகின்றது. காரணம் இவர் கல்விக் கல்லூரியின் செயற்பாடுகளை நன்கு அறிந்தவர் மட்டுமன்றி பல்வேறுபட்ட சிறப்பாற்றல் களையும் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் கடமை ஏற்ற நாள்முதல் கல்விச் செயற் பாடுகளிலும், இணைப்பாட விதானச் செயற்பாடு களிலும் உயரிய சாதனைகள் படைத்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.



### பிரார்த்திக்கின்றோம்!

எம் உள்ளங்களை அன்பால் கொள்ளைகொண்டு எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி; இடைநடுவில் விட்டுப் பிரிந்துசென்ற உடற்கல்விநெறி மாணவன் **மர்ஹூம் ஏ. ஜி. எம். சுகைப** அவர்கள் உயர்ந்த பேறுகள் பெற அல்லாஹுவைப் பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PRIMARY COURSE - A



**Seated (Left to Right)** : MI. Rakeeba Banu, SMS. Fareena, MA. Fathoola, MM. Ayesha Beevi, Al-Haj. ALA. Rasool (President), SS. Saheetha, PLS. Rafeeka, MA. Aaysha, MPMF. Rinosa.

**Satnding - 1st row (Left to Right)** : MT. Samsunisa, MH. Sajeetha, MM. Thasliya, AH. Janoosiya, ARS. Jiffriya, JF. Rifana, MI. Rinosa, SHB. Ruwaisa, SL. Jasmin, SM. Raseetha, NF. Fasliya.

**Standing - 2nd row (Left to Right)** LAR. Farhan, MA, Salahudeen, MAM. Ramsan, J. Samsudeen, J. Namdeen, ARM. Kiyas, MAM. Yaseer, ARM. Nathir, M. Fajeeth, MS. Sujath Mohamed, TM. Imthiyas.

**Absentee** : H. Julaina



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்

# INTERNET & E. mail

IZRATH
Science Course
Geleoya

The Internet is a huge collection of inter connected computer networks linking millions of computers across the world. Initially established as a research network(ARPA net in 1969), the Internet has grown in to a commercial network covering all sectors, including commerce & Finance, education and entertainment.It is similar to the international telephone system, there is no central authority that controls the Internet, but it's wonected in a way that makes it work like one big net work.



The Global Network System is Shown here

At the end of 1997, when it was established there were only 50 million Internet users, since then it has grown at the rate of more than half a million users per month.

The World Wide Web (WWW) gives you a graphical, easy to navigate interface for looking at documents on the Internet. You can think the WWW as a huge library on the Internet. Web' Sites' are like the books in the libary and Web "Pages" are like leaves in the books.

A collections of Web Pages is known as a web site A "home page is the Starting point for a web site.

Each web page, includes a web site's home page. Each so-called Web Page has its own specific URL (Universal Resource Location)

http://www. sliit. edu.

eg - http : //wwwdisney. com

Domain name

Host name

The are soft ware tools that you can use to access web pages (eg. Interne explorer of Microsoft Nets cape)

You can search an addess of a web page by Using search engines. The popular search engines on the Internet are :

http : // www. yaboo. com
http : // www. hotbot. com
http : // www. excite. com

Use corious new as font.

The E-mail

The E-mail is a system where a message is converted to electronic messages and send from a workstation to another via a tele com network.

To use electronic mail the sender should have necessry hard ware ('g.Pc, modem. telephone connection etc.) and soft wre. Each User is given an e-mail address, which is reflective of country / network. telephone Code.

eg. inshaff @ sliit. lk

User name — Host name — Extension



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் அறக்கட்டளை
அபிவிருத்தி ஆவணக்காப்பகம்

# மனித வாழ்வுக்கு சவாலாக அமையும் நஞ்சில் இருந்து பாதுகாப்புப் பெறல்

**எம்.எச்.எம். மன்சூர்** B. Ed.
விரிவுரையாளர் இணைப்பு அலுவலரும்
(சென். ஜோன் அம்பியூலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவின் மாவட்ட ஆணையாளரும்)

நஞ்சு மனித வாழ்க்கையுடன் மிகவும் நெருங்கிய தாகக் காணப்படுவதால் அன்றாடம் உலகில் பல்வேறு வகையான விபத்துக்கள் ஏற்படுவதை தொலைத்தொடர்புச் சாதனங்கள் மூலம் அறிய முடிகின்றன. நஞ்சினால் பெருமளவில் சிறுவர்கள் பாதிக்கப்பட்டாலும் அதன் கோரப் பிடிக்குள் வளர்ந்தவர்களும் அகப்படத்தவறுவதில்லை.

நஞ்சை, சிலர் நஞ்சென அறிந்தும் உட்கொள் கிறைனர். சிலர் அறியாதும் உட்கொள்கின்றனர். நஞ்சு எந்த வகையிலாவது சிறிதளவு உட்கொள் ளப்பட்டாலும் உடல் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பாதிக்கப்படுவதைத் தவிர்க்க முடியாது. சில வகையான நஞ்சுகளின் பாதிப்பி லிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் பலர். பல பின் விளைவுகளுக்கு உட்பட்டு வருந்துவதை எம் கண்முன் காணமுடிகின்றது. இவ்வாறான கொடிய நஞ்சுகளிலிருந்து பாதுகாப்புப்பெற உரிய வழி முறைகளை அறிந்திருத்தல் நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

**நஞ்சு மனித உடலைப் பல்வேறு வகை களில் அடைகின்றன குறிப்பாக**

**வாய் மூலம் :**

உண்பதன் மூலமும், குடிப்பதன் மூலமும்.

**சுவாசிப்பதன் மூலம் :**

வாயு நிலையிலும், ஆவி நிலையிலும்.

**தோலினூடாக :**

விசிறப்படும் இரசாயனப் பொருட்கள்,
விசக்கடிகள், ஊசி ஏற்றல்,

இவ்வாறு உடலையடையும் நஞ்சுகளில் சில குருதிக் கலன்களையும், வேறு சில நரம்புத் தொகுதியையும் பாதிக்கின்றன. இதனால் சுவாசச் செயற்பாடு, இதய இயக்கம், நரம்பின் தொழிற்பாடு என்பன பாதிக்கப்படுகின்றன. சில நஞ்சுகள் குருதியில் ஒட்சிசன் கொள்ளளலைத் தடுப்பதுடன், கலன்களுக்கான ஒட்சிசன் பரிமாற்றத்தையும் சீர் குலைக்கின்றன.

உடலினுள் செல்லும் நஞ்சுகள் நேரடியாக சமிபாட்டுத் தொகுதியைப் பாதிப்பதால் வாந்தி, வயிற்றோட்டம், வயிற்று நோ என்பன ஏற்படும். எரிக்கும் நஞ்சாயின் வாய், உதடு, தொண்டை, இரைப்பை என்பவற்றை எரித்து கடும் நோவையும் பாதிப்பையும் ஏற்படுத்தும்.

ஒருவரின் உடலினுள் நஞ்சு சென்றிருந்தால் பொதுவாக பின் வரும் குணங்குறிகள் தென்படும். அவையாவன, மூச்சடைப்பு, மயக்க நிலை, வாந்தி, வயிற்று நோ, வயிற்றோட்டம் என்பன வாகும். எரிக்கும் நஞ்சாயின் வாய் அவிந் திருக்கும். இவ்வாறான அறிகுறிகள் தென் பட்டால், நஞ்சு உட்கொள்ளப்பட்டதாகக் கவனத்தில் கொண்டு பொதுவான முதலுதவிச் சிகிச்சையை அளிப்பதன் மூலம் பாதிப்புகளி லிருந்து நிவாரணம் பெறப்பண்ணலாம்.

**வீட்டினிலும் சூழலிலும் காணப்படும் நஞ்சுப் பொருட்கள்**

அலங்காரப் பொருட்கள், திரவச் சவக்காரம், வெளிற்றும் தூள், சுவர்ப் பூச்சு, எலிப்பாசனம், கிருமி நாசினி, களைகொல்லிகள் போன்றவற்றை உட்கொண்டாலும் வாந்தி, வயிற்றுநோ போன்றன ஏற்படும். இதேபோல் சில மாத்திரைகள், சில மருந்துகள் உட்கொள்ளப்படல் அதிக பாதிப்பைத் தராதிருப்பினும் அவற்றின் அளவு அதிகரிக்கும்போது பாதிப்பு ஏற்படும். இதேபோல் சில தாவரங்களின் இலை, காய், பூ போன்ற வற்றை உட்கொண்டாலும் பாதிப்பு ஏற்படுவதுடன் அவற்றுடன் தொடுகையுறும்போது ஒவ்வாமையும் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உணவு நஞ்சாதல்**

உணவு முறையாகச் சமைக்காவிட்டால், அல்லது பாதுகாக்கப்படாவிட்டால் பற்றீரியாக் களின் தாக்கத்தினால் உணவு நஞ்சாகும். இவற்றுள் ஸ்ரபிலோ கொக்கஸ், சல்மொனெல்லா ஆகிய நஞ்சுகள் சற்று ஆபத்தானவை களாகும். ஸ்ரபிலோ கொக்கஸ் நஞ்சு உட் கொள்ளப்பட்டு 2-4 மணித்தியாலத்திற்குள் அறிகுறிகள் தென்படும் அவ்வறிகுறிகளாவன: அசௌகரிகத்துடன் வாந்தி எடுக்கும் உணர்வு, வயிற்றோட்ட உணர்வுள்ள வலி, வயிற்று வலி, தலை வலி, அதிர்ச்சி அல்லது மூச்சடைப்பு இதேபோல் சல்மனெல்லா நஞ்சு உட்கொள்ளப் பட்டால் சில மணித்தியாலங்களின் பின் அல்லது ஓர் இரு நாட்களில் காய்ச்சல், வயிற்றோட்டம், உடல் நோ, வாந்திவரும் உணர்வு, வயிற்று வலி, மூச்சுத்தடை ஏற்படும் உணர்வு போன்ற அறிகுறிகள் தென்படும். இந்நிலைக்கு உள்ளானவருக்குச் செய்ய வேண்டியவை:

01. நஞ்சுண்டவருக்கான பொதுவான முதலுதவி செய்தல்.
02. ஓய்வாக வைத்திருத்தல்.
03. ஏதாவது திரவ பானம் கொடுத்தல்.
04. வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லல்.

**போதைப் பொருள் நஞ்சாதல்:**

போதைப் பொருள் சுயநிலையை சீர்குலைத்து, சாதாரண நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தும். போதைப் பொருட்கள், சுவாசிப்பதன் மூலமும், வாய் மூலமும், ஊசி மூலமும் உள்ளெடுக்கப் படுகின்றன. ஊசி மூலம் உள்ளெடுப்பவர்களின் முளங்கைகளில் ஊசி அடையாளங்கள் தென் படும், நரம்பு உள்ள இடங்களில் ஒருவகை எரிவு உணரப்படும். போதைப் பொருள் உட்கொள்ளப்பட்டிருந்தால் வாந்தி வருவதுபோல் இருக்கும் ஆனால் வராது. கண்கள் இருட்டுவது போல் இருக்கும். வேறுசில போதைப் பொருட்கள் உட்கொள்ளப்பட்டால் பின்வரும் அறிகுறிகளை அவதானிக்க முடியும்.

**ஹிரோயின்**: இது ஊசி மூலமும், மாத்திரை யாகவும் உள்ளெடுக்கப்படுகிறது. இதனால் சுவாசம் கடுமையாகி நின்றுவிடவும் கூடும்.

**Depressants**: இது சுவாசத்தை கடின மாக்கும், தோலைக் குளிராக்கும், இதயத் துடிப்பை கூட்டிக்குறைக்கும், மயக்கநிலையை ஏற்படுத்தும்.

**Hallucinagens**: இது அதிக வியர்வையை ஏற்படுத்துவதுடன் மூச்சடைப்பையும் ஏற்படுத்தும்.

**அஸ்பிரின்னை அதிகமாக உட்கொள்ளல்**: இதனால் வயிற்றுவலி, வாந்தி, வாந்தியில் குருதி வெளிப்படல், சோர்வும் உறக்கநிலையும், காதினுள் ஒரு சத்தம், சுவாசக் கடினம், அதிக வியர்வை, அதிக இதயத்துடிப்பு என்பவற்றை ஏற்படுத்தும். இதை உட்கொண்டவர்களுக்கு நஞ்சுக்கான பொதுவான முதலுதவி அளிப்ப துடன், நன்கு சுவாசிக்கவும் இடமளிக்க வேண்டும்.

**மதுசார நஞ்சு :**

இது மைய நரம்புத்தொகுதியை பாதிக்கும், பாவிக்கும் அளவுக்கேற்ப தன்மை வேறுபடும், அதிகமாக அருந்தினால் மூளையில் பாதிப்பு ஏற்பட்டு உடற்சமநிலையும், உறுதித் தன்மையும் கெடும். குருதியில் மதுசார அளவு கூடும்போது, நடத்தையில் மாற்றம், சுயநிலையில் தடுமாற்றம், மன உறுதி, உடலுறுதி பாதிப்பு, மயக்கநிலை என்பன ஏற்படும். மதுசாரம் உட்கொள்ளப் பட்டிருந்தால் மூச்சில் மதுசார வாடை, வாந்தி, மயக்க நிலை, ஆளமான மூச்சு, முகம் சிவத்தல், இதயத்துடிப்புக் கூடிக்குறைதல், முகம் உலர்ந்து சோர்தல் போன்ற அறிகுறிகள் காணப்படும். இவற்றை உட்கொண்டவர்களுக்குப் பொதுவான முதலுதவிச்சிகிச்சை அளித்தல் சிறந்தது.

**தொழிற்சாலை நஞ்சுகள் :**

தொழிற்சாலைகளில் நச்சுத்தன்மை வாய்ந்த இரசாயனப் பொருட்கள், வாயுக்கள் தாவரங்கள், எரிபொருட்கள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பான்மையாக வாயுக்களே நச்சுத்தன்மை உடையதாகக் காணப்படுகின்றன. அமோனியா, நைதரசன், காபனீரொட்சைட், காபனோரொட்சைட், ஐதரசன், சயனைற், காபன்நாற்குளோரைட், காபன்முற்குளோரைட் போன்றன இவற்றுள்


அதிரவலி போத நிலையம்
பிரதேச சபை - சம்மாந்துறை
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கும். இவை தவிர்ந்த நச்சு வாயுக்களும் காணப்படுகின்றன. இவ்வாறான தொழிற்சாலைகளில் வேலை செய்வோர் உத்தியோகபூர்வமான தற்பாதுகாப்பை உறுதிசெய்து கொள்ளல் அவசியமாகும். இவ்வாறான இடங்களில் முதலுதவி செய்வோர் தன்னையும் விபத்துக்குள்ளான வரையும் பாதுகாத்துக்கொள்வதுடன் விபத்துக்குள்ளானவரை கவனமாக கையாண்டு (தொடுகை மூலம் அல்லது வேறுவிதமாக பாதிப்பு ஏற்படலாம்.) வைத்தியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

## Anaphylactic Shock :

இது ஒவ்வாமையின் தோற்றப்பாடாகும். இந் நிலைமை சில செக்கன்கள் அல்லது சில நிமிடங்கள் நீடிக்கும். இது ஊசி மூலம் போதைப்பொருள் ஏற்றுவதால் அல்லது பூச்சிகள் கொட்டுவதால் ஏற்படும். இந்நிலைக்கு உள்ளானவர்களில் அதிர்ச்சிக்கான அறிகுறிகள் தென்படும். அசௌகரியமும் வாந்தியும் ஏற்படும். நெஞ்சு அழுத்தப்படுவதுபோல் உணர்வர், சுவாசம் கடினமாகும், தும்மல் ஏற்படும், முகமும் கண்ணும் வீக்கமடையும், இதயத்துடிப்பு அதிகரிக்கும், மயக்க நிலை நீடிக்கும். இவ்வாறானவர்களுக்கு அதிர்ச்சிக்கான முதலுதவி வழங்கி, திறந்த காற்றுப்பாதையை ஏற்படுத்தி, மயக்க மீள் நிலையில் படுக்கவைத்தல், மயக்கமுற்றுக் காணப்படின் ABC செயற்பாட்டை மேற்கொண்டு உடன் வைத்தியரிடம் கொண்டு செல்லல்.

பொதுவாக நஞ்சுகள் மனித வாழ்க்கைக்கு சவாலாகவே அமைகின்றன. எனவே, நஞ்சு உட்கொள்ளப்பட்டவர் என அறியக்கிடைத்தால் அவருக்கு தேவையற்ற அறியாத சிகிச்சைகளை வழங்குவதை தவிர்த்துக்கொண்டு, பொதுவான நஞ்சுண்டவருக்கான முதலுதவிச் சிகிச்சையை அளித்தல் உயிர் மீட்சியின் பின் அவரது எதிர்காலத்திற்கு பயனுள்ளதாக அமையும். எனவே, ஒவ்வொருவரும் நஞ்சு உட்கொண்டவர்களுக்கு வழங்கக்கூடிய முதலுதவிச் சிகிச்சையினை அறிந்திருத்தல்.

**இவ்விடயங்கள் சம்பந்தமாக மேலதிக தகவல்கள் தேவைப்படின் கல்முனை மாவட்ட சென். ஜோன் அம்பியூலன்ஸ் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

### நஞ்சு உட்கொண்டவர்களுக்கான பொதுவான முதலுதவிச் சிகிச்சை :

01. அருகில் இருப்பவர்களிடம் என்ன நஞ்சை உட்கொண்டார் எந்த அளவுக்கு உட்கொண்டார் என அறிதல். அல்லது நஞ்சுப் பொருள் அல்லது நஞ்சு மரம் அண்மையில் காணப்படுகிறதா என அறிதல். அல்லது நோயாளி மயக்கம் தெளிந்து காணப்பட்டால் நிகழ்வினை கேட்டறிதல், மயக்கமுற்ற நேரத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளல்.

**- வாந்தி எடுக்கப்பண்ணக் கூடாது -**

02. விபத்துக்குள்ளானவரின் வாய் அல்லது உதடு எரிந்து காணப்பட்டால் குளிரச்செய்ய நீர் அல்லது பால் கொடுத்தல்.
03. மயக்க நிலை தெளிந்தால் மயக்க மீள் நிலையில் படுக்கவைத்தல்.
04. மயக்க நிலை தெளியாவிடின் ABC செயற்பாட்டை மேற்கொள்ளல் (முதலுதவியாளா நஞ்சினால் பாதிப்புக்குள்ளாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்)
05. உடன் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லல்.

வாந்தி அல்லது நஞ்சின் மாதிரி காணப்பட்டால் ஒரு போத்தலில் இட்டு பரிசோதனைக்காக வைத்தியரிடம் ஒப்படைத்தல்.

*With Best Compliments From :*

AS ACS Hardware

General Hardware Merchants, all kinds of Pipes & Fittings, Electrical Goods, Dealers for Robbialac Paints.

**ACS HARDWARE**
96/1, COLOMBO ROAD,
PERADENIYA
TEL : 074 - 473261
08 - 387767



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PRIMARY COURSE - B



**Seated (Left to Right)** : MFS. Samsunnisa, MHF. Farsana, K. Sameera, SM. Ramsiya, MMF. Kareema, Al-Haj. ALA. Rasool (President), NB. Zanfaniya, MI. Jiya, M. Majeeda, MSF. Nooriya, MIF. Roshana.

**Standing - 1st row (Left to Right)** : MM. Marjunas Begam, AH. Farmila, AM. Naseeha Begam, MAM. Naleefa, ALHR. Raihana, HMS. Rafeesa, AR, Ruwaisa, AL. Asma, ASF. Silmiya, MB. Faysa, AL. Sarmila, MK. Nawsiya.

**Standing - 2nd row (Left to Right)** :MI. Ahamedlebbe, MM. Yaseer, SL. Razack, AC. Asfar, MCM. Salahudeen, ALA. Rahman, AS. Anver Ali, KMM. Baassheer, MY. Samoon.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தில் நினைவு உளி!

நினைவுகள் தான் நமது உளி
அந்த உளி இதயத்தில் இருக்கிறது
இலட்சியத்தில் கிடக்கிறது
வாழ்க்கையை செதுக்குங்கள்!
வானத்தின் நினைவுகள் மேகங்கள்
என்றால்
அதன் செயல் மழை தானே
மழை,
வெள்ளத்தைப் பிரசவிக்கிறது
புல்வெளியை சுவாசிக்கக் கொடுக்கிறது
மழை இன்பம்
மழை துன்பம்
இவை அதன் இரண்டு பக்கங்கள்!
எம் நினைவுகளும் இவை போன்று தான்
சில நினைவுகள் தீயை விதைக்கிறது
வாழ்க்கை அதனால் கருகிப் போகின்றது
சில நினைவுகள் புல்லாங் குழல் இசை போல
உள்ளம் இரண்டுக்கும் இனிமை சேர்க்கிறது!
நினைவுகள் சுகமாகும் போது
வாழ்க்கை சிறக்கும்
சிறகில்லாமல் பறக்கும்
புகழ்! புன்னகை பூக்கும்
வாழ்க்கை சுமையல்ல, சுவையானது
சோகமானதல்ல சுகமானது
சுகமும் சுவையும்
நினைவுகளைப் பொறுத்தவை
முத்துகளைத் தெரிந்தெடுத்து
மாலை கோர்ப்பது போல
நினைவுகளை, உணர்வுகளை தெரிந்தெடுத்து
செயல்கள் செய்தல் வேண்டும்
அதற்கு
நினைவுகளை [illegible] வேண்டும்
நம்பிக்கையில் மூழ்குங்கள்
நம்பிக்கை இமயத்தை காக்கும்
இளமையைக் காக்கும்
இதயம் மெய்க்கும்!
சுகம் எனும் கரையை அடையவைக்கும்
வெற்றியின் வாசல் நம்பிக்கை
வெற்றியை அடைய
உறுதியோடு நேரத்தை நகர்த்த வேண்டும்

நேரம் எம்மை நகர்த்த கூடாது
நேரம் எமது நேரமாக அமையும்
எல்லா பாரமும் கலையும்,
இதயம் இளமையில் நனையும்!
வெற்றி!
தோல்வி!
எம் முயற்சியின் இரண்டு பக்கங்கள்
தோல்வி எம்மை தீண்டும் போது
இதயம் வெந்து போகிறது
நினைவுகள் நொந்து போகின்றன.
சிப்பிக்குள் முத்து இருக்கிறது
தோல்விக்குள் வெற்றி இருக்கிறது
வீழ்ந்தால் விரைவாக எழலாம்
விழிகளில் நம்பிக்கை வளரட்டும்
அவநம்பிக்கை தளரட்டும்!
மனதை விட்டு களரட்டும்!

உணர்வில் இளமையை மலரச் செய்து
உண்மை
நேர்மை
அன்பு
சத்தியம் போன்ற தூண்களை அமைத்தல்
வாழ்வு அதில் நிற்கும் போது
மரணம் கூட சரித்திரமாகும்
வாழ்வில் உதயத்தையும் ஆக்க முடியும்
கனவுகள்
நினைவுகள்
கற்பனைகள்
எல்லாம் இதயத்தில்
மின்னும் முத்துகளாக இருந்தால்
வாழ்க்கை
புகழால் செதுக்கப்படும்
மற்றோரால் மதிக்கப்படும்
வாழ்வினை சிறப்பாக்குங்கள்!
உளிகள் உங்கள் இதயத்தில்!

**ஆர். ரைஹானா ஏ. லத்தீப்**
(ஆரம்ப நெறி - 1998 - 2000)
நிந்தவூர்

REFERENCE SECTION
உசாத்துணைப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். நஸீறுதீன்.
(பகுதிநேர விரிவுரையாளர்)

# யாதுமொன்றாகி

முஜாஹித் ஆசிரியர், ஒரு கிழமைக்கு முன்னரேயே ஆயத்தங்களைச் செய்யத் துவங்கி விட்டார். இன்று திங்கட்கிழமை. கொழும்புக்கு இவர் பயணப்படவேண்டிய தினம். அவரின் இருபது வருட ஆசிரியத் தொழிலில் இருமுறை மட்டுமே அவர் கொழும்புக்குச் சென்றிருக்கிறார். ஒரு முறை பயிற்சிக் கலாசாலைத் தேர்வுக்கான நேர் முகப்பரீட்சைக்கெனவும், அடுத்தது ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றவுமாகும். நாளை அதிபர் தேர்வுக்கான நேர்முகப் பரீட்சை இருந்தது. அவரின் மனைவி மர்யம் அதிகாலையிலேயே எழுந்து, அவர் செல்வதற்கான ஏற்பாடுகளில் ஒத்துழைப்பு வழங்கினார்.

முஜாஹித், மெலிந்து நீண்ட தேகத்தைக் கொண்டிருந்தார். குட்டையாக வெட்டப்பட்ட முடி. முக்கோணவடிவில் ஒடுங்கிய முக வாக்கு. அகலமான நெற்றியில் நீளமான மடிப்புகள் நிலை குத்திய இன்னும் கண்ணாடி அணியப்படாத கண்கள். உதடுவரை நீண்ட மூக்கு, அவரின் கூர்மையான அவதானத்தை இன்னும் விசாலப்படுத்திக் காட்டும் மேலுதட்டில் சின்னதாக ஒரு மீசை. அவருக்கென்றமைந்த 'ட்ரேட் மார்க்' (இலட்சினை) பொறித்த உடையமைப்பொன்றுண்டு. அதில் ஒரு போதும் அவர் மாறியதில்லை. வெள்ளை நிறத்தில் சாறன், அதை குறுக்கிய படி இடுப்பில் கறுத்த பெல்ற். சாறனுள் உள் வாங்கப்பட்ட வெள்ளை நிற அரைக்கைச் சட்டை. அவரைச் சூழும்படியாய் எந்நேரமும் அத்தரின் மணம். அதன் ரகசியம் அவரின் காதின் மேல் இடுக்கினுள் மிகச் சின்னதாகத் திணிக்கப்பட்ட பஞ்சுருண்டையில் அடங்கி இருக்கிறது. யாராவது 'கவர்ண்மெண்ற் ஜொப்' பார்க்கிற சேர், இப்படியா உடுப்பது? எனக் கேட்டால்,

“பேய்...? என்ர கலாச்சார உடுப்ப விடவாடா அவன்ர உசத்தி. பதினொன்டு (லோங்ஸ்) போடுறதே ஹராம். உடுப்புலயாடா ஒரு மனுசன்ர உசத்தி தெரியுற” என்பார் அவர் ஆதலால் யாரும் அவரிடம் வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக் கொள்வதில்லை.

முஜாஹித் ஊரிலிருந்து, நோயற்றிருந்த காலங்களில் ஒரு போதும் பாடசாலையைத் தவறவிட்டதில்லை. ஐந்து முறை, 'லீவே போடாத சேர்' என காரியாலயத்தின் விருதைப் பெற்றிருக்கிறார். அதுவும் முதன்முதல் அதிகாலையிலேயே பிரசன்னமாகுகின்ற ஆசிரியர் அவராகத்தானிருப்பார். பின்னேரங்களிலும் மாணவர்களை வரச்சொல்லி, காசு வாங்காமலேயே பாடங்களைச் சொல்லிக் கொடுப்பார். ஊரில், அவரின் முதல் மனைவியே அந்தப் பாடசாலைதான் எனப் பேசினார்கள். 'ஒரு விடுமுறைக் காலத்தில் இந்த அதிபர் தேர்வை வைக்காது போய் விட்டார்களே' என நினைக்காமலுமில்லை அவர்.

காலை எட்டு மணிக்கு பஸ் தரிப்பிடத்தை விட்டு வெளிக்கிடும் முஜாஹித் ஏழரைக்கெல்லாம் அவ்விடம் வந்து சேர்ந்தார். பஸ் இன்னும் வரவில்லை சற்று நேரம் காத்திருந்தார்.

பஸ்வர முதல் ஆளாக அதனுள் ஏறினார். அவரின் இலக்கத்துக்குரிய இருக்கையைத் தேடி உட்கார்ந்தார். இலக்கம் எளிதில் மனப்பாடம் செய்யும்படியானதாயிருந்தது. பாடசாலையில் அவருக்குரிய இலக்கம் பனிரெண்டு அதைப் புரட்டிப் போட்டால் வரும் இருபத்தியொன்று (21). முஜாஹித் உள்ளே நோட்டமிடத் துவங்கினார்.

பாடசாலையின் வகுப்பறையைப் போல்தான் பஸ்ஸும் இருந்தது. முன்னே ஒரு கரும்பலகை இல்லாததுதான் குறையெனப்பட்டது. வகுப்பறையைச் சுற்றிவர மதில், இங்கு இரும்பாலான சுவர். மாணவர்களை நெருக்கமாக இருத்தி வைப்பது போலவே பயணிகளின் இருக்கையும் இரண்டிலும் நடுவாய் ஒரு திறந்த ஓடையமைப்பு. முஜாஹித்துக்கு முதன் முதல் வகுப்பறைக்கு வந்து விட்ட மாணவனின் உணர்வு தோன்றியது. இங்கு வாத்தியார் யார்? பஸ் நடாத்துனனே அதற்குச் சரியானவன் என நினைக்க, கொடுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுள் சிரிப்பு வந்து விட்டது. பஸ்ஸினுள் படிப்படியாகப் பிரயாணிகள் ஏறத் துவங்கினர்.

பஸ்ஸின் 'ஹோர்ன்' திடீரென பலமாக அலறத் துவங்கியது. சாரதி பஸ் வெளிக்கிடவுள்ளதைப் பறை சாற்றினான். நேரத்தைப் பார்த்தார் முஜாஹித் எட்டு மணி. அப்படியானால் இப்போது பாடசாலையின் ஆரம்ப மணியோசை ஒலிக்கத் துவங்கியிருக்கும். எல்லா மாணவர்களும் காலைக் கூட்டத்திற்காக ஒன்று சேரத் துவங்கியிருப்பர். இன்றைக்கு பகுதித் தலைவர் மஜீது உரையாற்றுவாராக்கும் முஜாஹித்தின் சிந்தனையை கண்டக்டரின் குரல் இடைமறித்தது.

"எல்லோரும் அடையாள அட்டையைப் பார்த்துக் கொள்ளுங்கள் 'செக் பொயின்ற்'ல் எல்லோரும் இறங்கினால் நல்லது. நேரத்துடனேயே சென்று விடலாம். பஸ்ஸுல் சத்தமிட்டுப் பேசி அடுத்த வரைக் கரைச்சல் பண்ணாதீர்கள்; ஆக முக்கியம் பஸ்ஸினுள் யாரும் புகைக்க வேண்டாம்...!

ஆஹா... என்னமாய் உபதேசிக்கிறான் இவன். இவனிடம் மஜீது பிச்சை வாங்க வேண்டுமென முஜாஹிதுக்குப்பட்டது. பிரயாணிகளின் மனம் நொந்து போய்விடாதபடி என்னமாய் அறிவுறுத்து கிறான். சாரதிக்குப் பொறுமையில்லைபோலும் மீண்டும் ஒலியெழுப்பினான். சில பிரயாணிகள் இப்போதுதான் ஓடி வந்து ஏறத் துவங்கினர். பாடசாலையுள் கதவு மூடுகின்ற வேளை முண்டி யடித்து உட்புகுகின்ற மாணவர்களைப் போல.

முஜாஹித் பஸ்ஸினுள் இருந்தவர்களை நோட்ட மிட்டார். பெரும்பாலானவர்கள் தெரிந்தவர்கள் தான். ஆனால் நன்கு பழகியவர்களாக எவருமில்லை. அதிபரிடம் மகன் இப்போது விடுமுறைக் கடிதத்தை ஒப்படைத்திருக்கக் கூடும். முதலாம் பாடவேளை ஆரம்பித்திருக்கும். இங்கு கூட பிரயாணிகள் வெகு நேர்த்தியாக உடை அணிந்திருந்தனர். ஆண்கள் எல்லோரும் சப்பாத்துக்கள் அணிந்திருந்தனர். பாடசாலை யைப் போலவே பயணமும் சரியாக இன்று நடந்தேறின் அவருக்குத் திருப்தி கிடைக்கக் கூடும். மிகவும் மரியாதைப்பட்ட மொழியால் பிரயாணிகள் பேசிக் கொண்டனர். அவர்களின் உடைகள் கூட நாகரீகமாக இருந்தன. அடுத்தவரை சகித்து, பஸ்ஸின் போக்குடன் இயைந்து போக வேண்டியவர்களாக உட்காரந் திருந்தனர்.

"சேர், கொழும்புக்கா?..."

திடீரெனக் கேட்ட பெண் குரலினால் முஜாஹித் சிந்தனை சிதைந்தது. குரல் பின் இருக்கைக் குரியது. திருப்பினார். அவரது பழைய மாணவி களில் ஒருத்தி. பெயர் சரியாக ஞாபகத்திற்கு வரமாட்டேனென்றது.

"ஓம் மகள். நீங்க...?"

"கண்டிக்கு சேர். பிள்ளை கிடைக்க வேணும். ரீச்சிங் ஹொஸ்பிடலுக்குப் போறம்"

"ஓ..." என்றவர் உடனே பஸ் நடாத்துனரின் பக்கம் திரும்பினார்.

"கண்டக்ரர், இங்க வாப்பா! இந்தப் பிள்ள சுகமில்லாதது. பின்னுக்கிருந்தா குலுக்கிப் போடும். முன்னால இருக்கிற ஒருத்தர்ர சீற்ற மாத்திக்குடு பார்ப்பம்"

முஜாஹித்துக்கு தனது தொழில் இங்கும் மாறவில்லையோ என நினைக்க வேண்டி யிருந்தது. வகுப்பில்தான் கேட்டல், பார்வையில் குறைபாடுள்ள மாணவனுக்குத்தான் இருக்கை கயை ஒழுங்கு படுத்துகிறோமானால் இங்கும் அதேதானா? மாணவி நன்றிப் பெருக்குடன் அவரைப் பார்க்க, முஜாஹித்துக்கு மனசு பூரித்துப்போயிற்று.

பஸ், சீராக ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் இடையிடையே சாரதி கியர் மாற்றும்போது, பள்ளத்தில் விழுந்து எழும்பும்போது பஸ் சிறிய குலுக்கலுக்குள்ளாயிற்று. மற்றப்படி பஸ்ஸில் எந்தத் தடங்கலுமேற்படவில்லை. சாரதியை ஏன் என்று பிரயாணிகளால் கேட்க முடியாது. அவன் விரும்புகின்றபடிதான் பயணத்தைத் தொடர முடிகிறது. பிரயாணியின் காலத்தைப் பொறுத்தே சாரதி அமைவதும். சாரதி மட்டுமல்ல, தாரம், குரு எல்லாமே விதிப் பயன் எனச் சொல்வ தில்லையா? நமக்கு நல்ல குரு வாய்க்கப் பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனால் நல்ல வாழ்க்கைநெறி கிடைத்ததாக முஜாஹித் நம்பினார்.

பஸ் திடீரென நிறுத்தப்பட்டது. முஜாஹித் வெளியே எட்டிப் பார்த்தார். பொலிஸ் காவலரண். அதை ருசுப்படுத்துகின்ற நடத்துனனின் குரல்.

“எல்லோரும் அவரவர் பேக்க எடுத்துட்டு இறங்குங்க. ஐடின்ரியகளை கைல எடுங்கோ”

ஓரிருவர் இறங்கவில்லை. ஆயுதப்படையில் வேலை செய்பவர்களாயிருக்கும். முஜாஹித் கீழே இறங்கினார். வரிசையொழுங்கு நீண்டு கிடந்தது. எல்லோருடைய வலது கையிலும் அடையாள அட்டை இருந்தது. ஆசிரியரிடம் கொப்பியைக் காட்டச் செல்கின்ற மாணவர் களைப்போல, ஒவ்வொருத்தராக முன்னேறினர். முஜாஹித்தைப் பார்த்ததும், சோதிக்காமலேயே பொலிஸ்காரன் விட்டுவிட்டான். கணக்கில் எல்லாப் பாடத்திலும் சரி எடுத்த திருப்தி அவருக்குக் கிடைத்தது. சிலர் பிணங்கிக் கொண்டு வந்தனர்.

பஸ் மீண்டும் ஓடத் துவங்கிற்று. ஒரு பாடம் முடிந்து, அடுத்த பாடம் துவங்குவதற்கிடையில் வகுப்பில் ஏற்படுகின்ற களேபரம்போல, பிரயாணிகளிடையே பேச்சுக்கள் கிளம்பின. சற்று நேரம்தான். பின்னர் அலுத்தவர்களாக மீண்டும் மௌனமாயினர். பஸ்ஸின் ஓடுகின்ற சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டேயிருந்தது.

முஜாஹித் பதியத்தலாவ வரை எட்டு இடங் களில் பஸ் நிறுத்தப்பட்டதைக் கணக்கிட்டிருந் தார். இப்போது பகல் சாப்பாட்டிற்கென ஒரு ஹோட்டலின் முன் பஸ் நின்று கொண்டிருந்தது. எல்லோருடைய முகங்களிலும் திடீரென உற்சாகக்களை குடிகொண்டது. இடை வேளையில் பல திக்குகளிலும் சிதறி ஓடுகின்ற மாணவர்களைப் போல அவர்களின் அசைவுகள் இருந்தன. இயற்கை உபாதைகளை நீக்கச் செல்வோர் ஒருபுறம். விரும்பிய உணவைச் சாப்பிடவென ஹோட்டலினுள் உட்புகுந்தோர் மறுபுறம். வீட்டிலிருந்து கொண்டு வந்த பார்சலை விரித்து வைத்து பஸ்ஸினுள்ளேயே உண்கின்ற பெண்கள் இன்னொரு புறம். முஜாஹித் பார்சலுடன் பஸ்ஸிலிருந்து இறங்கினார். கட்டுப்பாடுகளெல்லாம் தளர்ந்த நிலையை அவர் அங்கு கண்டார். அவர்களைப் பார்க்க சந்தோஷ மாயிருந்தது அவருக்கு.

பஸ் ஓடிக் கொண்டிருந்தது. உண்டகளைப்பில் பெரும் பகுதியினர் கண்ணயர்ந்திருக்கக் கண்டார் முஜாஹித். இனி எந்த இறங்குதலும் அவர்களுக் கில்லை அவர்களைக் காண, முஜாஹிதுக்கும் கண் சொருகிற்று.

பஸ் திடீரென குலுக்கலுடன் நின்றது. சாரதி ‘ஹோர்ன்’ சப்தத்தை ஆங்காரமாக அலற விட்டான். முஜாஹித் கண் திறந்தார். புறக் கோட்டை பயணம் முடிந்து விட்டிருந்தது. பிரயாணிகள், பாடசாலை முடிந்ததும் கேற்றைச் சூழ்ந்தபடி வெளியேற ஆயத்தமாகின்ற மாணவர் களின் அவசரத்திலிருந்தனர். அவருக்கு அவசரம் இருக்கவில்லை. கடைசியாளாக அவர் வெளியே வந்தார். தம்பி நளீம் காருடன் வெளியே காத்திருப்பது தெரிந்தது.

“எப்படிப் பயணம். அனுபவிக்க முடிந்ததா?”

“பயணத்தை யார் அனுபவித்தது. பாடசாலையுள் இருந்த உணர்வாகவே இருந்தது.”

தம்பிக்கு, முஜாஹித் என்ன சொல்கிறார் என்பது விளங்கவில்லை. எனினும் மரியாதை நிமித்தம் மௌனமாயினர்.


**CONGRATULATIONS**
**FOR**
**1998 - 2000 BATCH**



*Dr. Hallaj Shafi*
A62/1, ZAHIRA ROAD
MAWANELLA
Tel: 077 - 803204




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SCIENCE COURSE



**Seated (Left to Right) :** MSF. Nafiya, AS. Fasliya, MIS. Janoosa, MNF. Riyasa, MS. Fareetha, Al-Haj. ALA. Rasool (President), MSF. Shamla, MH. Shamila Hamsa, ALF. Shamrooth, SMF. Jazeela.

**Standing (Left to Right) :** MTM. Nihar, MIM. Faiz Mowlana, MSM. Nakeeb, CLM. Riswan, SM. Sulhar, HMM. Roshan, MNM. Riswan, NM. Kiyasul Mohideen S. Mubarak.

**Absentees :** TF. Izrath, IF. Baseema.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE IMPORTANCE OF ENGLISH

**M.S.F. SHAMLA**
Science Cours, 1998 - 2000
MAWANELLA.

There are as many languages as there are races. Each race has a language of its own some languages are well developed and some are internationally renowned. Some others are equally developed but their influences out side their own frontiers are little some languages are rich in literature.

English is the only language that occupies a unique place in the modern world and excels all the rest in every sphere of human endeavour. Whether it is in the field of arts and Humanities or science and Technology or Commerce and diploma. It is the product of centuries of growth. Its international renown cannot be challenged by any on any ground.

There are many reasons for the increasing demand everywhere for more and better English. The most important reason is that it is the language of world culture and utility. It is the treasure house of knowledge so much so; anyone with a good knowledge of English can reach the pearls of wisdom found in all the other languages. This is the greatest advantage of masterring English other wise one has to learn as many languages as possible to share in the world's heritage which is not an easy task even for a linguist.

In countries like Sri Lanka and India. Which are multi racial, multi religious, English serves as a common link and helps to create friendliness while furthering the development of the national languages. The much spoken and much needed national unity in these countries can be easily achieved through a common language like English.

The above are some of the reasons why English is important to us. We must not neglect it because we have no good books in our language. Hence we are unable to learn modern science. So the need for good and better English for our future advancement very soon. English alone has the after bates of the world language that can make the ends of East and west meet in ever growing human family.

## ஹிக் கவிதைகள்

**குழந்தை**
பெற்றோர்க்கு அருளிய
அல்லாஹ்வின் அமானிதம்

**கண்ணீர்த் துளிகள்**
கோழையின் புகலிடம்
வீரர்களின் கேடயம்

**உறவு**
நகமும் சதையுமாய் நட்பில்
நறுக்கி விடும் அந்நகமே பகையில்

**செருப்பு**
காலை கடிக்கும் புதிதில்
காலை வாரிவிடும் பழையதில்

**கடிதம்**
முகங்கள் அறியாத போதும்
உணர்வுகளை அறிவிப்பவை

**நண்பன்**
மற்றவர்களுக்கு கண்ணாடி
உனக்கு அடையாள அட்டை

**ஹிஜாப்**
பெண்களின் வேலி
ஆண்களின் பார்வைக்கு அரண்

**முகவரி**
பெண்களுக்கு அவர்களின் கண்கள்
ஆண்களுக்கு அவர்களின் பெண்கள்

**ஐ. எப். பஸீமா**
(விஞ்ஞான நெறி 1998 - 2000)
தெஹியங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் வாழ்க்கையில்.... சிந்தனைக்கு

ஏ. ஆர். அம். கியாஸ
(ஆரம்ப நெறி - - 1998 - 2000) [illegible]



எங்கள் வீதிகள் அதிகமாகி வருகின்றன – ஆனால்
எம்மனங்கள் குறுகிக் கொண்டே போகின்றன.

எங்கள் வீடுகள் மிக அலங்காரமாக உள்ளன – ஆனால்
எங்கள் குடும்பங்கள் அலங்கோலமாய் அலைகின்றன.

நாம் அதிகமதிகமாய் செலவழிக்கிறோம் – ஆனால்
சொற்பத்தையே பெற்றுக் கொள்கிறோம்.

அதிகமாய் பண்டங்களை வாங்கிக் குவிக்கிறோம் – ஆனால்
சொற்பமாகவே அவற்றை அனுபவிக்கிறோம்.

எங்களிடம் அதிகம் வசதிகள் இருக்கின்றன – ஆனால்
அவற்றை பயன்படுத்த நேரம் போதவில்லை

எங்கள் வருமானங்கள் உயர்ந்து வருகின்றன – ஆனால்
எம் ஒழுக்கம் பண்பாடும் சரிந்து வருகின்றன.

நாங்கள் பக்கம் பக்கமாக வாசிக்கின்றோம் – ஆனால்
சிறிதளவே கற்றுக் கொள்கிறோம்.

கல்விப்பட்டங்கள் பல பெற்றிருக்கிறோம் – ஆனால்
நம் புத்திகள் மந்தமாயிருக்கிறது.

எங்களிடம் நிறைய நிபுணர்கள் இருக்கின்றனர் – ஆனால்
பிரச்சினைகள்தான் தீர்ந்தபாடில்லை.

எங்களிடம் மருந்துகள் விதம் விதமாய் இருக்கின்றன – ஆனால்
ஆரோக்கியம் எங்கும் அருகி வருகின்றது.

நாம் விதவிதமான உணவுகளை சாப்பிடுகிறோம் – ஆனால்
மந்த போசனையால் அவதிப்படுகிறோம்.

நாங்கள் சொத்துக்களை பெருக்கிக் கொள்கிறோம் – ஆனால்
நல்ல பெறுமானங்களை இழந்து விடுகிறோம்.

நாங்கள் மற்றவர்களுடன் அதிகமாக உரையாடுகிறோம் – ஆனால்
எவர்மீதும் அரிதாகவே அன்பு வைக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கு அறிமுகமானவர்கள் நிறைய இருக்கின்றனர் – ஆனால்
உண்மை நண்பர்கள் என்று எவருமில்லை.

சந்திரனுக்கு பலமுறை போய் வந்துவிட்டோம் – ஆனால்
அடுத்த வீட்டானை போய் பார்ப்பதுதான் சிரமமாக இருக்கிறது.

நாம் விண்வெளியையும் கைப்பற்றிவிட்டோம் – ஆனால்
நம் உள்ளங்களை அடக்கியாளத் தெரியாதிருக்கின்றோம்.

நாம் வளிமண்டலத்தை தூய்மைப்படுத்த முயல்கிறோம் – ஆனால்
எங்கள் ஆத்மாக்களை மாசுபடுத்திக் கொள்கிறோம்.

நாங்கள் அதிகமதிமாகத் திட்டமிடுகிறோம் – ஆனால்
அற்பமாகவே சாதிக்கின்றோம்.

நாம் உலக சமாதானத்தைப் பற்றி வாய் கிழிய பேசுகின்றோம் – ஆனால்
எமக்குள்ளேயே சண்டை பிடித்துக் கொள்கிறோம்.

எங்கள் காட்சியறைகளில் பண்டங்கள் நிறைய இருக்கின்றன – ஆனால்
களஞ்சிய சாலைகள் காலியாகவே உள்ளன.

சிந்திப்போம் சிந்தனையை சீர்படுத்துவோம் – வாழ்க்கை ஒன்றும் ஒன்றுமில்லாத
பாலைவனமல்ல – அது வசந்தங்கள் வீசுகின்ற பூந்தோட்டங்கள்தான்.


*With Best Compliments From :*




**Agra Engineering**

19/1/2, COLOMBO STREET,
KANDY Hot. line : 077 - 386264

**SPECIALLY FOR LOWCOAST BUILDING PLANS ESTIMATION & LANDSCAPE**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிலேனியத்தின் ஆசிரியர்

**றபா கே. எம். பாஸிர்**
(ஆரம்ப நெறி - 1998 - 2000)
மூதூர்.

**"றொம் என்ற மாணவனுக்கு லத்தீன் கற்பிக்கும் ஆசிரியர் லத்தீன் மொழியை மாத்திர மன்றி றொம்மையும் தெரிந்திருக்க வேண்டும்"**

மனிதக் குழந்தைகள் அனைத்தும் மாணிக்கங் கள்தான். அவற்றை பட்டை தீட்டி ஒளிபெறச் செய்வது மாண்புமிகு ஆசிரியர்களின் மகத்தான பணியாகும். எத்தனை நூற்றாண்டுகள் எம்மை கடந்து சென்றாலும் நம் மனிதர்களின் மனப் பாங்கு மாறாதவரை மகிழ்ச்சிகரமான வாழ்வு என்பது இரவுச் சூரியன்தான்.

அறிவு திறன் மனப்பாங்குகளை இளைய தலைமுறையினர்க்கு போதித்து, நாட்டுக்கும் உலகுக்கும் நல்ல பிரஜைகளை தயாரித்து வெளியீடு செய்யும் தொழிற்சாலையாக பாட சாலைகள் காணப்படுகின்றன. அங்கு நல்ல மனிதர்களை உருவாக்கும் தயாரிப்பாளர்களாக (Producters) ஆசிரியர்கள் விளங்குகின்றனர்.

ஆசிரியர்கள் வெறுமனே ஏட்டுக் கல்வியை மட்டும் திணிக்கின்ற இயந்திரங்களாக இருக்கக் கூடாது. வகுப்பறைக் கல்வியையும், பாடப் புத்தகத்தையும் கொண்டு எதிர்கால சந்ததியை விவேகமுள்ளவர்களாக, நல்ல மனப்பான்மை மிக்கவர்களாக மாற்றலாம் என்ற கூற்று மலை ஏறிவிட்டது.

இன்றைய உலகு எவ்வளவுதான் அறிவு விருத்தியில் முன்னேறினாலும், விஞ்ஞானி களும், பேரறிஞர்களும், வைத்தியர்களும் உருவாகினாலும், அதன் பயனால் உலகமும் உலக மக்களும் திருப்தியடைந்துள்ளார்களா? நல்ல மனப்பாங்கும், போட்டி பொறாமையற்ற, வஞ்சகத்தன்மையுமற்ற இளைய சமுகத்தைக் கட்டியெழுப்புவதில்தான் ஆசிரியர் பணியின் வெற்றி தங்கி உள்ளது.

ஒரு வைத்தியர் மனித உயிர் ஒன்றை நோயி லிருந்து பாதுகாக்க முடியுமே தவிர உயிர் போகாமல் தடுக்க முடியாது. மாறாக ஆசிரியன் ஒருவனால் மட்டுமே நல்ல மனப்பாங்குள்ள ஒரு மனிதனை உருவாக்க முடியும். நல்ல மனப் பாங்குள்ள ஒரு மனிதனை உருவாக்கிவிட்டாலே போதும், ஒரு ஆசிரியனின் ஆகக் குறைந்த பணியொன்று நிறைவு பெற்றுவிடும்.

சமுகத்திற்கு ஒருவன் நன்மை செய்ய நினைத் தால் அவன் முதலில் நல்ல சிந்தனை உள்ளவ னாக இருக்க வேண்டும். அவனது இதயத்தில் தூய எண்ணமும் சமுக நோக்கும் இருக்க வேண்டும். அத்தோடு அர்ப்பணிப்போடு இணைந்த அறப்பணியுள்ள ஒரு சேவையை பெற்றுக் கொள்ள வேண்டும். அத்தகைய சேவையை ஒருவர் பணம் சம்பாதிக்கும் தொழிலாக நினைக்கும் போதுதான் அதன் மகத்துவம் கெடுகிறது.

இந்த உலகில் பிறரினால் செய்யப்படுகின்ற பாராட்டுக்களும், கௌரவிப்புக்களும் எப்பவுமே நிரந்தரமானது அல்ல. ஆனால் ஒரு ஆசிரியன் தம் மாணவர்களை எதிர்கால வாழ்வுக்கும், சவால்களுக்கும் முகங்கொடுக்கும் மனிதர்களாக உருவாக்கிவிட்டாலே போதும். அந்த ஆசிரிய ரையும், அவரது பணியினையும் பிற்கால சந்ததி ஞாபகம் வைத்திருக்கும்.

புதிய நூற்றாண்டு, புதிய சகத்திரம், புத்தா யிரமாம் ஆண்டு என்றெல்லாம் நாம் பெரிதாக பேசிக்கொள்கின்றோம். ஆனால் கால மாற்றத்திற் கேற்ப தம்மை மாற்றிக் கொள்கின்றோமா? அவ்வாறு மாற்றிக் கொள்வதிலேயே வெற்றி தங்கியுள்ளது. இக்கூற்று வகுப்பறைக் கற்றலுக் கும் பொருந்தும்.

வெண்கட்டி, கரும்பலகை, பாடப்புத்தகம் என்ற பழைய பஞ்சாங்கத்தை மட்டும் வைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு எமது இளைய சமுகத்தை புத்தகப் புழுக்களாகவும், மனனம் செய்யும் இயந்திரங் களாகவும் மாற்றிக் கொண்டிருக்க முடியாது. விஞ்ஞானமும், தொழிநுட்பமும், சர்வதேச பரிமானமும், முண்டியடித்துக்கொண்டு முன்னேறிச் செல்லும் இக்காலத்தில் மாணவ சமுகம், மகத்தான விவேகத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்பது ஒவ்வொரு ஆசிரியரதும் எதிர்பார்ப்பாக இருக்க வேண்டும்.

வகுப்பறைக்கு வெளியே அதாவது வெளிக்களக் கற்றலில் (Out Lerning) மாணவர்கள் தாமாகவே கற்கின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும். ஆசிரியர்கள் தனது பணியினை சிறப்பாகச் செய்யாவிட்டால் அந்த மாபெருந் தண்டனையை இவ்வுலகிலயே பெற்றுக் கொள்வார்கள். ஆம், சிறந்த கல்வியினை மாணவர்க்குக் கொடுக்காத வர்களின் பரம்பரைகள் அதாவது பிள்ளைகள் இவ்வுலகில் அலைக்கழிக்கப்படுவார்கள். இது நிருபணமாக்கப்பட்ட உண்மையாகும்.

நிகழ்காலத்தில் மாணவர்கள் பெறும் கல்வி வாய்ப்புக்கள் அல்லது வாய்ப்பின்மையின் அடிப்படையிலேயே எதிர்கால நிலைமைகள் உருவாக்கப்படும். ஏனெனில், எதிர்காலம் என்பது மாணவர்கள் சென்றடையும் ஒரு இடமல்ல. உண்மையில் எதிர்காலம் என்பது அவர்களால் உருவாக்கப்பட வேண்டியதொன்று.

13938

1989ஆம் ஆண்டு பீகிங்கில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் '21ஆம் நூற்றாண்டுக்கான கல்வித்தராதரங்கள்' பற்றி ஆராயப்பட்டது. அங்கு கல்வி வளர்ச்சிக்கான தொழிநுட்பவியலில் அதன் பங்களிப்பு என்னும் விடயம் தொடர்பாக சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அவையாவன,

> "கல்வி தொழிநுட்பம் கற்போன் தனது முயற்சியினாலும் உந்துதலினாலும் கற்க ஏராளமான வாய்ப்புக்களை பெறுகிறான். இந்நிலை 20 ஆம் நூற்றாண்டு முடிவடைய முன் மிகத்துரித்மடையும்.
>
> எதிர்காலத்தில் எழுத்தறிவற்றவனும் வாழ்நாள் முழுவதும் கற்பதற்கான வாய்ப்புக்களைப் பெறுவான்." என்பதாகும்.

தகவல்களைப் பகுத்து ஆராயும் தொழிநுட்பத்திலிருந்தே புதிய தொழிநுட்பம் எழுந்துள்ளது. அத்துடன் இப்புதிய தொழிநுட்பம் 'கற்பதற்கு உதவும் தொழிநுட்பமேயன்றிக் கற்பிப்பதற்கு உதவுவதல்ல' என்பது பேராசிரியர் சோ. சந்திரசேகரத்தின் தகவலாகும்.

பாடசாலைகள் ஒரு குறுகிய பாட ஏற்பாட்டைக் கொண்டு மாணவர்களைப் பரீட்சைக்கும் அடுத்த கல்வி நிலைக்கும் ஆயத்தம் செய்யும் பணியில் அதிக ஈடுபாட்டைக் காட்டுவது ஒரு குறைபாடாக கூறப்படுகிறது. ஆயினும் தீவிர கல்விச் சிந்தனையின்படி பாடசாலைகள் இப்பணியைக்கூட முறையாகச் செய்யவில்லை. இன்றைய நகர்ப்புற பாடசாலை மாணவர்கள், பொதுப் பரீட்சைகளில் உயர் சித்தி பெறுவதற்கு அவர்கள் பயின்ற பாடசாலைகளே முழுக்காரணம் என்பதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. தீவிர கல்விச் சிந்தனையாளர்களுள் ஒருவரான ஜோன் ஹோல்ட் (Jhon Holt) என்பவர் கூறுவதாவது "நான் சில காலம் பாடசாலையில் பயின்றேன். ஆனால் எனது அறிவின் பெரும்பாலான பகுதியை நான் பாடசாலைக்குச் செல்ல முன்னரும் பாடசாலையை விட்டு விலகிய பின்னரும், பாடசாலைக்கு வெளியேயும்தான் பெற்றுக்கொண்டேன்." இதன் உட்கருத்து கற்றல் பாடசாலையில் மட்டும் இடம் பெறுவதில்லை என்பதுடன், பிள்ளைகள் சுதந்திரமாகவும் பரந்த முறையிலும் கற்க அனுமதிக்கப் படல் வேண்டும் என்பதாகும். இதற்கு ஆசிரியரின் பங்குதான் ஆணிவேராக அமைய வேண்டும்.

மனிதர்களை உருவாக்கும் ஆசிரியர்களிடத்தில் சிறந்த வாழ்கைத் தத்துவம் இருக்க வேண்டியது அவசியமாகும். அறிஞர்களை மட்டுமன்றி ஆட்சியாளர்களையும் உருவாக்குபவர்கள் ஆசிரியர்களே. இதன் காரணமாகவே ஆசிரயர்கள் சமுகத்தின் விடிவெள்ளிகளென அழைக்கப் படுகின்றனர். எத்தகைய கல்வி மரபிலும் கற்றோருக்கு மகத்துவம் வழங்கப்பட்டிருந்தது. ஆசிரியரிடத்தில் ஒழுக்க விழுமியமும் சீரிய சிந்தனையும் இல்லாவிட்டால், மாணவரிடத்தே சிறந்த பண்புகளை உருவாக்கவும் முடியாது. எதிர்பார்க்கவும் முடியாது. எத்தகைய மனிதரை உருவாக்க வேண்டும் என்பதற்கு அடிப்படையான தத்துவம் விளக்கம் ஆசிரியர்க்கு அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருத்தவும்

"அன்றாடம் எழும் கல்விப் பிரச்சினைகளுக்கு விடை காண்பதில் எமது வாழ்க்கைத் தத்துவம் பெருமளவில் பங்களிப்புச் செய்கிறது" என ஹாபார்ட் ரஸ்க் கூறுகிறார்.

இரசாயன விஞ்ஞானத்தில் கைதேர்ந்த மாணவன் ஒருவன் இரண்டு வாயுக்களின் தாக்கத் திறனைப் பயன்படுத்தி புதியவகை குண்டுகளை கண்டு பிடித்தால் அது அவனது அறிவு விருத்தியைக் குறிக்கும். ஆனால் அக்குண்டுகளின் பயன் பாட்டால் எத்தனை உயிர்கள் அழியும்? என்ன சேதங்கள் ஏற்படும் என்பதை சிந்திக்கின்ற மனப்பாங்குகளை அவனிடத்தில் உருவாக்க வேண்டும். ஒருவன் பெறுகின்ற கல்வி அழிவுக்கு வழிகோலக் கூடாது. மாறாக ஆக்கத்திற்கும், மற்ற மனிதர்க்கு உதவுவதற்கும் அவன் பெற்ற அறிவு பயன்பட வேண்டும் என்பதை ஆசிரியர் ஒவ்வொருவரும் உணர்ந்து, அறிவு, திறன், மனப்பாங்குகளை மாணவர்களுக்கு வழங்க வேண்டும். இதுதான் இன்றைய உலகின் அனைவரது எதிர்பார்ப்பாகும்.

'புதிய உலகிற்கான புது மனிதன், இன்று குழந்தையாகப் பிறந்துள்ளான். அவனை நாளைய உலகிற்கு மனிதப் பண்புள்ளவனாக மாற்றி அமைக்கும் பொறுப்பு மூத்த சந்ததிக் குரியது என்பதும், குழந்தை என்பது நாளைய மனிதனின் தந்தை என்பதும் ஆசிரியராகிய எம்மால் உணரப்பட வேண்டிய முழு உண்மையாகும்'.

எனவே, இனிவரும் காலம் இயந்திரவியல் காலம். இளைய சமுதாயம் அண்டை வெளியை ஆய்வு கூடமாய் பயன்படுத்தும் காலம். இருந்தும், மனித இதயங்கள் மரித்துப் போகாமல் அன்பு, கருணை, சமாதான உணர்வுள்ள அறிவினை மாணவர்க்கு கொடுத்து, பூமியின் சக்கரம் நீண்ட ஆயுள் கொண்டு சுழல, ஆசிரியர்களாகிய நாம் ஆணை கொள்வோம்.


With Best Compliments From :

WOODSIDE TRADE CENTRE

Dealers in : GIFT ITEMS, FANCY GOODS & ELECTRIC ITEMS

City Side Shoping Complex
MAIN STREET
MAWANELLA

VISIT FOR ALL YOUR HOUSE HOLD REQUIRMENTS




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MATHS COURSE



Seated (Left to Right) : CMM. Fazi, YLM. Uwais, Al-Haj. ALA. Rasool (President), MHF. Najla, MNN. Saheera Nizam, AL. Hosimin



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெந்துபோன இதயம்

எம். எஸ். பரீதா
(விஞ்ஞான நெறி - 1998 - 2000)
கல்முனை.

உண்மை நேரமென்று
நாசம் செய்யப்டுவதால்
உணர்வுகளெல்லாம்
ஊமையாகித் துடிக்கிறது....!

நீ அனுப்பியிருந்தது
காகிதமல்ல – கத்தியென்று
அது – இதயத்தைக்
கிழித்து விட்ட போதுதான்
அறிந்து கொண்டேன்...!

கல்லறை வரை – தொடர்ந்து
நட்பென்று – சொன்ன நீயா....
இறத்தற்கு –
வரையறை செய்கிறாய்....?

புன்னகைப் பூந்தோட்டத்தில்
வாழ்ந்து கொண்டிருந்த – என்னால்
எப்படி – ஒரு புயலின் வருகையைத்
தாங்கிக் கொள்ள முடியும்....?

எப்போது – புயல்
வந்ததென்கிறாயா....?
உன் வார்த்தைகளே – ஒரு
பெரும் புயல்தானே....

தென்றலையும்,
திங்களையும் தவிர
நம்முறவுக்கு
சாட்சி இல்லைதான்!
ஆனால் –
மனசாட்சியை
என்ன செய்யலாம் என்கிறாய்....?

உயிரில் கலந்தது
நம் நட்பென்றாய்....?
இன்று – பிரிக்கப்பட்டுப்போனது
உயிரா – – நட்பா....?

நெஞ்சத்தில்
நெருப்பெரிய விட்டு விட்டு
நெருக்கமின்றிய...
நேசத்தைத் துறப்போம்
என்கிறாய்...?

நினைவிலும்,
கனவிலும்
காகிதங்களிலும் மாத்திரமே
உறவை வளர்த்துக் கொண்ட
இரு இதயங்கள் – நாம்!

காதலும் நட்பும்
வேறு வேறுதான்!
ஆனால்
பிரிவென்று வரும்போது
துயரிலே – இரண்டும்
ஒன்றாகி விடுகிறது....!

விழிகளோ வேதனை
மழையினில்
நனைந்து கொண்டதால்
உள்ளமோ – இன்று
உறங்க மறுக்கிறது....!

நொந்து போன மனம்!
வெந்து போன இதயம்!
இரண்டுமே – இன்று
எனக்குச் சொந்தம்
சொந்தமாக்கித் தந்தது
நீ என்பதால் – அவற்றை
நான் சொந்தமாக்கிக்
கொள்கிறேன்.



அமீர்அலி பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RSSவும் பாபரி மஸ்ஜிதும்

எஸ்.எம். சுல்ஹார்
(விஞ்ஞான நெறி - 1998 - 2000)
மன்னார்

**1992**ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ம் திகதி முழு உலக முஸ்லிம்கள் அனைவராலும் மறக்க முடியாத - மறக்கப்பட முடியாத அவர்கள் அனைவரது - உள்ளங்களையும் புண்படுத்திய நாள். ஆம், அந்நாள் அயோத்தி வாழ் முஸ்லிம்களால் சுமார் 450 வருடகால மாக தொழுகை நடாத்திவரப்பட்ட "பாபரி மஸ்ஜித்" பள்ளிவாயல் உடைக்கப்பட்ட நாளாகும். முஸ்லிம்கள் அனைவரது உள்ளங்களும் உடைந்து நின்ற அச்சம்பவம் இப்போதும் இந்திய அரசு வெட்கத்தால் தலைகுனிந்து நிற்கின்ற செயலாக அமைந்து விட்டது.

தொடரும் இக்கட்டுரை அயோத்தியில் விசுவ ஹிந்து பரிசத் (R.S.S.) குறிப்பிடுவது போன்று "ராமர் கோயில்"ஐ ஜஹிருதின் ஷா பாபர் இடித்து விட்டு "பாபர் மஸ்ஜிதை" கட்டினார் என்பது உண்மையான ஒன்றா அல்லது R.S.Sஆல் குறிப்பிடப்படும் பொய்யான குற்றச்சாட்டா என்பது பற்றிய ஆதாரபூர்வமான சாட்சியங்களென கருதப்பட்ட தகவல்களோடு எழுதப்பட்டதாகும்.

R.S.Sதலைமையிலான தீவீர போக்குடைய ஹிந்து இயங்கங்கள் கி.பி. 1528ல் முதலாம் முகாலாய மன்னர் ஜஹிருதின ஷா பாபர் அயோத்தியிலிருந்த "ராமர் கோயிலை" இடித்துவிட்டு அங்கு பள்ளிவாயிலை கட்டினார் என்று திட்டமிட்டு பொய்வதந்தியைக் கிளப்பி, தாங்கள் பள்ளிவாயிலை உடைத்து விட்டு ராமருக்கு கோயில்கட்ட தீர்மானித தனர். இதற்காக பொய்ப் பிரசாரங்களையும் மேற்கொண்டு, இதன் மூலம் அப்பாவி ஹிந்து சகோதரர்களையும் தங்கள் வலைக்குள் சிக்கவைத்தனர். இவர்களுடைய இச்சதித் திட்டத்தை 1990 ஜனவரி 27,28ம் திகதிகளில் அலஹாபாத்தில் "விசால் சாண்ட்" சம்மேளனம் என்ற பெயரில் சாதுக்களின் கூட்டம் ஒன்றில் பேசிய சுவாமி சின்மயானந்தாவின் உரையில் இருந்து அறிய முடியும். அவ்வுரையில் சின்ம யானந்தா குறிப்பிட்டதாவது.

"இந்தியாவை ஹிந்து நாடாக்கும் கனவு விரைவில் நனவாகும். புதிய ராமஜென்ம பூமியில் கோயில் கண்டிப்பாக கட்டப்படும். ஆனால் அது ஒரு துவக்கம் மட்டுமே. இதைத் தொடர்ந்து வாரணாசியிலுள்ள காசிவிசுவநாதர் ஆலயத்தையும், மதுராவி லுள்ள கிருஷ்ணஜென்ம பூமியையும் மீட்போம், நான் ஏன் அத்துடன் நிற்க வேண்டும், இன்று டெல்லியிலுள்ள ஜும்மா மஸ்ஜித் இருக்கும் இடத்தில் ஜமுனாபாய் கோயில் அமைப்போம், தாஜ்மஹாலுக்கு பதிலாக கோயில் ஒன்றும் அமைப்போம். (The week, பெப்ரவரி 18,1990) என்று கூறியுள்ளார்.

இந்த உரையை நோக்கும்போதே R.S.Sயின் சதித்திட்டம் என்ன என்பதனை நாம் அறியமுடியும். இது தவிர பள்ளி இருக்கும் இடத்தில் கோயில் கட்டும் பணியில் முன்னணியிலிருக்கும் இதே R.S.S.யின் செயலாளர் சிங்கால் "மேற்குறிப்பிட்ட இடங்களில் கோயில் கட்டுவதற்காகக் காவல் துறையினரை அகற்றுவோம். தேவைப்பட்டால் நீதிமன்ற ஆணையையும் மீறுவோம்" என்று கூறியுள்ளார். இங்கு சட்டம், நீதி, நியாயம் அனைத்தையும் ஓரம் கட்டிவிட்டு தனது சதித்திட்டத்தை எவ்வா றேனும் செய்து முடிக்க முயற்சி எடுத்துள் ளதை தீர்மானிக்க முடியும் அவ்வாறே செய்தும் விட்டது. இதற்காக இந்த சதித் திட்டத்திற்காக அயோத்தி வாழ் முஸ்லிம் களால் சுமார் 450 ஆண்டு காலமாக தொழுகை நடாத்தி வந்த "பாபர் மஸ்ஜிதை", பாபர், "இராமர் கோயிலை" இடித்து விட்டு கட்டினார் என்று பாபர் மேல் வீண் பழியையும் சுமத்தி விட்டது. ஆனால் சரித்திரங்களையும் ஆதாரங்களையும் பாபரின் ஆட்சி காலத்தையும் எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கும்போது அயோத்தியில் இராமர் கோயில் கட்டப்படவில்லை என்பது தெளிவாகியுள்ளது. கட்டப்படாத கோயில் ஒன்றை பாபர் எவ்வாறு உடைத்திருக்க முடியும். இருந்த போதும் இதற்கான ஆதாரங்களை எடுத்து நோக்குவது சிறந்ததாகும்.

அயோத்தியில் இராமருக்கு விக்கிரமாதித்தர் கோயில் கட்டியதாக ராமஜென்ம பூமி மீட்பு இயக்கத்தினர் கூறி வருகின்றனர். ஆனால் எந்த விக்கிரமாதித்தர் எப்போது கட்டினார் என்ற ரீதியில் அவர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு இருப்பதை நோக்கமுடியும். சிலர் விக்கிரமாதித்தர் என்று அழைக்கப்பட்ட 2ம் சந்திரகுப்தர்தான் (கி.பி. 379-413) கட்டினார் என்றும் வேறு சிலர் விக்கிரமாதித்தர் என்பவர் ஸகாந்த குப்தாதான் (கி.பி. 455-467) என்றும்; அவரே கட்டினார் என்றும் குறிப்பிடுகின்றனர். இவர்களின் கருத்து வேறுபாடு இவ்வாறு இருந்த போதிலும் இந்திய தொல்பொருள் துறை அயோத்தியில் 1975ல் மேற் கொண்ட ஆய்விற்குப் பின் வெளியிட்ட முடிவில் குப்தர்களின் பரம்பரையைச் சேர்ந்த எந்தவொரு விக்கிரமாதித்தரும் அயோத்தியில் அரசாட்சி செய்யவில்லை என்றும் குறிப்பிடுகிறது. (Look Indian Archeology - A Review 1976,77, Page52,52)

இதுதவிர 1975ல் அப்போதைய இந்திய தொல்பொருள் துறையின் இயக்குனர் பி.பி. லால் தலைமையில் துவக்கப்பட்ட காலத்தில் மனித நடமாட்டமோ அயோத்தியில் இருக்கவில்லையென நிருபிக்கின்றனர். குப்தர்களின் ஆட்சி உள்ளடக்கியதாக கூறப்படும் கி.பி. 300-1100 வரையுள்ள காலத்தில் அயோத்தியில் மனிதர்கள் வாழவில்லை என்று அம்முடிவுகள் கூறுகின்றன. **(Look The Week 25.02.1990, India Today 15.01.1989, Sunday Mail 20.11.1988)**

எனவே மனிதர்களே வாழாத இடத்தில் குப்தர்கள் எவ்வாறு ஆட்சி செய்திருக்க முடியும். மேலும் கி.பி. 11ம் நூற்றாண்டின் வரையிலும் ஹிந்துக்களின் புனித இடமாக அயோத்தி அமைந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில் லட்சுமி தாரர் என்பவர் தனது குறிப்பேட்டில் 11ம் நூற்றாண்டில் இருந்த ஹிந்து யாத்ரீக வழிபாட்டுத் தலங்களை குறித்து வைத்துள்ள தனது விபரக் கோவையில் அயோத்தியைக் குறிப்பிடவேயில்லை. (பார்க்க - தீராத் விவேகானிகாலல் - பக்கம் 254 முதல்)

இதுதவிர எஸ்.எஸ் அய்யர் என்னும் ஹிந்து அறிஞர் இந்தியாவை ஆண்ட பல்வேறு ஹிந்து அரசுகள் கட்டிய கோயில்களின் பட்டியல் ஒன்றை தயாரித்துள்ளார். அவர் 'Historical Indian to the study of Indian Temple and Archeitectwe' என்ற தனது நூலில் விக்கிரமாதித்தர் கோயிலை கட்டியிருந்தால் நிச்சயம் அய்யர் அதனை குறிப்பிட மறந்திருக்க வாய்ப்பில்லை எனவே மேற் கூறிய தகவல்களிலிருந்து அயோத்தியில் இராமர் கோயில் கட்டப்படவில்லை என்பதே நிருபனமான உண்மையாகும். எனவேதான் கட்டப்படாத ஒரு கோயிலை பாபர் எப்படி உடைத்திருக்க முடியும். இருந்தபோதிலும் பாபரின் ஆட்சி காலத்தின் அரசாட்சியை எடுத்து நோக்கும்போது பாபர் கோயில்களை இடிக்க கூடிய அளவிற்கு மதவெறியரல்ல என்பது புலனான உண்மையாகும். இதைப் பற்றி தெளிவாக ஆராயும்போது இந்தியில் இராமாயணத்தை வெளியிட்டு பிரபலப் படுத்திய துளசிதாசர், பாபர் இடித்த காலமாக கூறப்படும் 1528ம் ஆண்டு காலப்பகுதியில் வெளியிட்ட தனது "ஸ்ரீ ராம சரித் மானஸ்" எனும் காவியத்தில் பாபர், கோயிலை இடித்ததாகவோ அங்கு கோயில் இருந்ததாகவோ குறிப்பிடவில்லை. இதனை சர்வபள்ளி கோபாலும் 24 வரலாற்று ஆசிரியர்களும் தமது அறிக்கையில் குறிப்பிடுகின்றனர்.

இது தவிர பாபர் ஆட்சி செய்த காலப் பகுதியில் வாழ்ந்த மன தைரியமுடைய சீக்கிய மதத்தை நிறுவிய குருனாக் சீக்கியர்களினால் புனித நூலாக கருதப்படும் "குரு கிரந்த சாகிப்" நூலை எழுதிய இவர் பாபரின் ஆட்சியை பகிரங்கமாக துணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாடக்கூடிய இவர் அயோத்தியில் பாபர், கோயிலை இடித்திருந்தால் நிச்சயமாய் அதனை சாடியிருப்பார். இவ்வாறான ஒன்றை அவரின் எந்த ஒரு எழுத்துக்களிலும் காண முடியவில்லை. பாபரை கடினமாக சாடியுள்ள குருனாக், பாபர் ஒரு போதும் மத வெறியுடன் செயல்பட்டாரென குற்றம் சாட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இது இவ்வா றிருக்க முன்னாள் குடியரசுத் தலைவர் டொக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணனின் மைந்தரும் வரலாற்று பேராசிரியருமான எஸ். கோபால் அவர்கள் குறிப்பிடும்போது அயோத் தியிலுள்ள பெரும்பாலான கோயில்கள் கி.பி. 18ம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் கட்டப் பட்டுள்ளன. 16ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜஹிருதீன் ஷா பாபர் கோயிலை இடித்தார் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லையென குறிப்பிடுகிறார். மேலும், அவர் Indian School of Social Science நிறுவனம் 1989 டிசம்பர் 18ம் திகதி நடாத்திய கருத்தரங்கில் பேசுகையில் "ஒரு முஸ்லிம் மன்னராக இருந்தபோதும் பாபர், கோயிலை இடித்தார் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இதுவரை கிடைக்கவில்லை. ஹிந்து கோயில்கள் மற்றும் மத குருக்களின் புரவலர்களாக முஸ்லிம் மன்னர்கள் திகழ்ந்தார்கள் என்பதற்கு வரலாற்று ஆதாரங்கள் உள்ளன. ஹிந்து யாத்ரீக தளமாக அயோத்தி வளர்ச்சி யடைந்ததற்கு முக்கிய காரணம் முஸ்லிம் நவாப்களின் ஆதரவுதான்" எனக் குறிப் பிடுகிறார்.

இவரைப் போலவே டொக்டர் சியாம்சுக்லா எனும் ஹிந்து அறிஞர் "சச்சித்தரர் பரமாணிக் இத்திஹாஸ்" எனும் நூலில் பாபர், கோயிலை இடித்தார் என்பதனை மறுக்கிறார். இவர் இந்நூலில் மேலும் குறிப் பிடுகையில் பாபர், கோயில்களுக்கு சன்மான மாக நிலம் வழங்கியுள்ளதையும் குறிப் பிடுகிறார். பாபர் வழங்கிய நில ஆவணம் இன்று கூட அயோத்தியிலுள்ள தாண்டதவான் கோயிலில் வைக்கப்பட் டுள்ளதாகக் குறிப்பிடுகிறார்.

மேலும் ராம ராக்சா திரிபதி எனும் மற்றொரு ஆய்வாளர் தாம் எழுதிய "ராம ஜெனம பூமியா பாபரி மஸ்ஜித்" எனும் நூலில் அயோத்தியிலுள்ள ஹனுமான்கிரி, தாண்ட தவான் குண்ட், ஜன்மஸ்தான், நாகேஸ் பர்நாத், சித்திகிரிமடம் ஆகியவற்றுக்கு பாபர் தானம் வழங்கியுள்ளார் எனவும், இதற்கான ஆதாரங்கள் இன்னும் இக்கோயில்களில் இருக்கின்றன எனவும் குறிப்பிடுகின்றார். எனவே இவர்களின் கருத்துக்களைக் நோக்குகையில் பாபர், கோயில்களை இடிக்கக் கூடிய ஒருவரல்லர் என்பது தெளிவாகும். இது தவிர ஆய்வாளர்கள் பலரால் உண்மையான சுய சரிதை என போற்றப்படும் "பாபர் நாமாவில்" பாபர், கோயிலை இடித்ததாக எங்கும் குறிப் பிடவில்லை.

எனவே முற்று முழுதாக இக்கட்டுரையை நாம் நோக்குவோமாயின் விசுவ ஹிந்து பரிசத் குறிப்பிடுவது போன்று பாபர், கோயிலை இடித்து விட்டு பள்ளியைக் கட்டினார் என்பது அப்பட்டமான ஒரு வதந்தியாக அறியக் கூடியதாகவுள்ளது. இது R.S.S.யின் திட்டமிட்டு முடிக்கப்பட்ட சதி வேலையாகவே எண்ணத் தோன்றுகிறது. மக்கள் உண்மைத் தன்மையை தெரிந்து நியாயமான, நீதியான முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதே இக் கட்டுரை யின் நோக்கமாகும்.

இக்கட்டுரை பேராசிரியர் இ. அருட்செல்வன் அவர்கள் எழுதிய பாபரி மஸ்ஜித் ராம ஜென்ம பூமியா? ஒரு வரலாற்றுப் பார்வை என்ற நூலின் அடிப்படையில் எழுதப்பட்ட தாகும்.

அறிவைக் கற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில், அதனைக் கற்பது அல்லாஹ்வுக்குப் பயப்படுவ தாகும். அதனைத் தேடுவது இபாதத் ஆகும். அதனை மீட்டிப் பார்ப்பது தஸ்பீஹ் ஆகும். அதனைத் தேடித் திரிவது ஜிஹாத் ஆகும். அறியாதோருக்கு அதனைக் கற்றுக் கொடுப்பது ஸதகாவாகும். அதற்குப் பொருத்தமானோருக்கு அதனை அளிப்பது இறைவனை நெருங்கு வதாகும்.

- அல்-ஹதீஸ் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE SECTION
உசாத்துணைப் பிரிவு

# மானிடா

எம். ஏ. எம். யஸீர்
(ஆரம்ப நெறி - - 1998 - 2000)
ஏறாவூர்.

ஒன்றே தெய்வம்
ஒன்றே மார்க்கமென
வாழ்ந்திட
எம் மனங்களில்
ஒற்றுமை வேண்டுமடா....
மானிடா....!
எம் மனங்களில்
ஒற்றுமை வேண்டுமடா....

பேதங்கள் அழிந்து
தேசத்தின்
மோதல்கள் ஒழிந்திட
எம் மனங்களில்
ஒற்றுமை வேண்டுமடா....
மானிடா....!
எம் மனங்களில்
ஒற்றுமை வேண்டுமடா....

மதங்கள் காட்டி
மனிதனையே பதம்
பார்க்கும்
மதங்களை நீக்கிட
எம் மனங்களில்
ஒற்றுமை வேண்டுமடா....
மானிடா....!
எம் மனங்களில்
ஒற்றுமை வேண்டுமடா....

சாதியெனும் சந்ததியே
இல்லாதொழிந்து
மானிட சமத்துவம்
ஓங்கிட
எம் மனங்களில்
ஒற்றுமை வேண்டுமடா....
மானிடா....!
எம் மனங்களில்
ஒற்றுமை வேண்டுமடா....

முஹம்மதும்
புத்தரும்
இயேசும்
எல்லோர் இதழ்களிலும்
ஒன்றாய்
மொழிந்திட
எம் மனங்களில்
ஒற்றுமை வேண்டுமடா....
மானிடா....!
எம் மனங்களில்
ஒற்றுமை வேண்டுமடா....

புது யுகம் படைத்து
புது சுகம் காணும்
இந்நூற்றாண்டிலாவது
ஒற்றுமை தீபம் ஏற்றி
நல்லொளி வீசும்
நன் நாளை
கண்டிட
எம் மனங்களில்
ஒற்றுமை வேண்டுமடா....
மானிடா....!
எம் மனங்களில்
ஒற்றுமை வேண்டுமடா....

*With Best Compliments From:*
FRM
**FARWIN RICE MILL**
ISMAIL ROAD, MAVADIPALLI
KARAITIVU
Tel: 067 - 60016
Res. Tel: 067 - 29933



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# [illegible] பிளேட்டோ

எஸ். சுபைர்டீன்.
(உடற்கல்வி நெறி - 1998 - 2000)
திருகோணமலை.

மதம்,இனம்,தேசம், கலாசாரம் எனும் குறுகிய எல்லைச் சுவரைத் தாண்டி விருப்பு, வெறுப்புக்களுக்கு அப்பால் நின்று அடி வானத்துக்கு அப்பாலும் ஊடுருவிப் பார்த்து அரசியலறிவு மேலோங்கியுள்ளது. இன்றைய சிந்தனையாளர்களையும் மலைக்க வைக்கக் கூடிய ஒருவன் கி. மு. 427இல் கிரேக்க தேசத்திலுள்ள ஏதென்ஸ் நகரில் பிறந்தான். அவன் நவீன சிந்தனைகள் அனைத்துக்கும் மூலவேரான "அரிஸ்டோக்கிளிஸ்" எனும் இயற்பெயரையும் பிளேட்டோ எனும் புனைப் பெயரையும் கொண்ட சிந்தனையாளனா வான். கிரேக்க மொழியில் பிளேட்டோ என்பது "விலாசம்" எனும் பொருளைக் குறிக்கும் அவனது விசாலமான அறிவின் காரணமாகவே இப்பெயர் அவனைக் குறிக்கிறது.

பூலோக மக்களைச் சுவர்க்கத்துக்கு ஏற்றுமதி செய்யாமல் சுவர்க்கத்தைப் பூலோக மக்களுக்காக இறக்குமதி செய்ய முயன்ற தத்துவஞானி அவன். பெண்களின் சமவுரிமைப் போராட்டம் முதல் ரஷ்யாவின் பொதுவுடமை இலட்சியம் வரை சகல விதமான முற்போக்கு கருத்துக்களும் அவனது நூல்களில் பொதிந்துள்ளன. ஐரோப்பாவின் நவீன சிந்தனையாளர்களில் பிளேட்டோ ஆக்கம் பெற்றிருப்பதுபோல் வேறு எந்த சிந்தனையாளனும் இடம் பெறவில்லை. இன்றைய அரசியலமைப்புத் திட்டங்களுக்கெல்லாம் ஆதித் தந்தை யாரென்றால் பிளேட்டோ எனக் கூறலாம். கி. மு. தோன்றிய இவனது கருத்துக்களின் வாடை "செலினட் ஜானின்" எனும் தெய்வீகக் கிரந்தத்திலும் மணக்கிறது. கண் முன் தோன்றும் எல்லாம் நித்தியமற்றமை. கண்ணால் காணதவை தாம் நித்திய மானவை என்று முதன் முதல் வாதம் புரிந்தவர் பிளேட்டோ ஆவான.

தனிமனிதனின் ஆத்மா பண்பட வேண்டும் பெருவாரியான மக்களை அறிவாளர்களும் அரசியல் அனுபவம் வாய்ந்தவர்களுமே ஏதாவது ஒரு முறையில் அரசாள வேண்டும் என்று கருதிய பிளேட்டோ தன் அரசியல் சிந்தனைகளை நூல்கள் வடிவாக்கி வருங் கால சமுதாயத்தை உருவாக்க முயன்றான். அதற்காக ஏதென்ஸ் நகரில் ஒரு மாளிகை யையும் பூந்தோட்டத்தையும் விலைக்கு வாங்கி "அகடமி" எனும் வித்தியாபீடத்தை அமைத்தான். தன் சிந்தனைக்கேற்ப மாணாக்கரை உருவாக்குவதில தன் வாழ் நாள் முழுவதையும் கழித்தான். இவ்வித்தியா பீடத்தை விஞ்ஞானக் கல்விக்கே பயன்படுத்த வேண்டுமென உயில் எழுதிவைத்தான். அதுதான் உலகத்தின் முதல் சர்வதிகார சாலையாக நீண்டகாலம் நீடித்தது. கி. மு. 380ல் ஸ்தாபிக்கப்பட்ட அக்கல்லூரி கி. பி. 529ல் சக்கரவர்த்தி கெஸ்டினியனால் மூடு விழா செய்யப்பட்டது.

பிளேட்டோவின் நூல்கள் அனைத்திலும் தலை சிறந்த நூலாக விளங்குவது "குடியரசு" எனும் நூலாகும். இந்நூல் பிறப்புக்கு முன் தொடங்கி இறப்பிற்குப் பின் வரை ஆராய்கிறது. ஒவ்வொரு தனிமனித னையும் சமுதாயமாக நிச்சயித்து துருவித் துருவி ஆராய்கிறது. இவரது ஆத்மீகக் காதல், சட்டங்கள் ஆகிய நூல்கள் பிரபல்ய மாகி இன்றைய சமுதாயத்தை விழிக்க வைக்கின்றன. "அறிவனைத்திலும் மனிதன் தன்னை உணர்வதுதான் பேரறிவு" என்றும், அறிவும் பண்பும் மற்றவர்களுக்கு தலை வணங்காமல் அறவாழ்வுக்காகவும் நீதிக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PHYSICAL EDUCATION COURSE



**Seated (Left to Right) :** S. Subaideen, ILM. Irfan, AM. Ansar, Al-Haj. ALA. Rasool (President), MIM. Asmi, TKM. Siraj, MWM. Ali Sabry.

Standing (Left to Right) : NM. Mahsoom, MAG. Firnaz, AMM. Rishad, MSM. Aslam, MFM. Thufail.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் போராடித் தன் உயிரையும் தியாகம் செய்யக் கூடிய நெஞ்சுறுதியுள்ளதாகவும் இருக்க வேண்டும் என்ற கருத்தை 'வாக்கு மூலம்' எனும் நூலில் 'தீமைக்கு தீமை நல்லறமல்ல' என வழியுறுத்துகின்றான். தனது (Sophists) எனும் நூலில் மருத்துவம் பற்றி மருந்தின் தன்மையையும் தேகத்துக்கு உதவும் வண்ணம் தெளிவுபடுத்தியுள்ளான். அதுபோல் ஆட்சி புரியும் கலை ஆள்பவர்களின் நன்மைக்காக இல்லை. ஆளப்படுபவர்களின் நன்மைக்கே என்று அரசியலாளர்களைச் சாடியுள்ளான்.

இவன் கல்வியின் தேவையைப் பற்றி கூறும் போது "ஒருவன் கல்வியை புறக்கணிப்பானாகில், அவன் தன் வாழ்நாள் முழுவதையும் நொண்டியாக்கவே நடக்கிறான்" ஒன்றுக்கும் உதவாத உதவாக் கரையாகவே மரணிக்கின்றான். கல்வியின் மூலம் பகுத்தறிவும் உண்மையான நம்பிக்கைகளையும் அடைபவன் தன் முதுமையிலும் ஆனந்தமாயிருக்கின்றான். பிளேட்டோ கூறும் போது "உலகத்திலேயே சிறந்த கல்வி பரிசிலனை" எனக் கூறுகின்றான். இதனை நவீன சிந்தனையாளன் ரூஸோவும் புகழ்கின்றான்.

ஆரம்பக் கல்வி பற்றி குறிப்பிடும்போது, கல்வி என்பது குழந்தையிடம் இயற்கையாகவே அமைந்துள்ள இயல்புகளின் முதல் உணர்வுக்கு ஏற்குமாறு பழக்கங்களைக் கொடுக்கும் பயிற்சியாகும். குழந்தைக்கு ஆரம்பக் கல்வியை வேடிக்கை விளையாட்டாகச் சொல்லிக் கொடுத்தால் அவை குழந்தைகளின் மனதில் பதிவதில்லை. ஆசிரியர்கள் நல்லவர்களாகவும் திறமைசாலிகளாகவும் இருக்க வேண்டும். பாடசாலைகள் அனைவருக்குமாக திறந்து விடப்பட வேண்டும். கணிதமும் விஞ்ஞானமும் அனைவரும் அறிந்திருக்க வேண்டும். இதனாலேயே தன் Acadamy கலாபீடத்தின் வாயிலில் "கேத்திர கணித அறிவு இல்லாதவன் இதனுள் நுழையாதிருப்பானாக" என்று எழுதப்பட்டு இருந்தது.

**பிளேட்டோவின் சிந்தனைகளில் இருந்து பெறப்பட்ட மணி மொழிகள் சில:**

* நேர்மையான மனம் படைத்தவனுக்கு சட்டம் தான் கடவுள், முட்டாளுக்கு கேளிக்கைதான் கடவுள்.
* காணப்படும் உலகம் வேறு. அறியப்படும் உலகம் வேறு.
* மனித வாழ்க்கை ஒரு யாத்திரை.
* கற்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பது மேல்.
* அனைத்திலும் அதி மேலான படிப்பு மனிதன் எப்படி இருக்க வேண்டும், எதைத் தேட வேண்டுமென்ற படிப்புத்தான்.
* ஒளி விளக்குகளை வைத்திருப்போர் மற்றவர்களுக்கும் அவற்றை வழங்குபவர்களாக இவ்வாறே கற்றவர்களும்.
* ஏகாந்திரத்தில் பேரானந்தம் கொள்பவன் அவன் ஒரு மூர்க்க மிருகமாயிருப்பான் அல்லது தெய்வமாயிருப்பான்.
* எது உண்மையான ஆனந்தம் என நிர்ணயிப்பதற்கு அறிவு. அனுபவம் இயற்கை உணர்வு ஆகிய மூன்றும் தேவை.
* கோபம், அச்சம், இன்பம், துன்பம், பொறாமை, பேராசை முதலியன ஆத்மாவை அடக்கியாள்வதே ஆதாரமாகும்.
* அநீதியால் அவஸ்தைப்படுவதை விட அநீதி செய்வதுதான் இன்னும் அவமானமானது. நமக்கு சமமானவர்களிடம் நாம் நேர்மையாக நடந்து கொள்வதை விட நமக்கு கீழ்பட்டவர்களிடம் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும்.
* வறுமையோ, செல்வமோ இல்லாத சமுதாயத்திற்குக் கண்ணியமான பண்புகள் இருக்கும். அதில் மமதைக்கோ அநீதிக்கோ பொறாமைக்கோ இடமில்லை.
* படிப்பற்றவர்களையோ உண்மையை அறிய முடியாதவர்களையோ வாழ்க்கை முழுவதும் புத்தகம் படிப்பதிலே கழிக்க விரும்புபவரையோ அதிகாரியாக்கக் கூடாது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

* சமாதானத்திற்காக சண்டை பிறப்பிக்காமல் சண்டைக்காக சமாதானம் பிறப்பிப்பவன் புத்திசாலியல்ல.
* காதல் ஒரு தீவிரமான மனநோய்.
* உன்னைக் காதலிக்க வேண்டுமென்றல்ல நீ காதலி.
* எது சீராகவும் அழகாகவும் அமைந்திருக்கிறதோ அதை நிதானமாகவும் ஆழமாகவும் காதலிக்க வேண்டும்.
* அறியாமைகளிலெல்லாம் வலிய அறியாமை, தெரியாததை தனக்கு தெரியும் என்று நினைத்தல்.
* நாட்டில் சனத் தொகை கூடாமலும், குறையாமலும் கண்காணிக்க வேண்டும்.
* மனித மனங்களை ஆளும் கலைதான் சொற்பொழிவு.
* அளவுக்கு மீறிய செல்வத்தினால் ஆடம்பரமும் சோம்பேறித்தனமும் ஏற்படும். அளவு மீறிய வறுமையினால் புரட்சியும் கீழ்த்தரமான எண்ணங்களும் துரோக சிந்தனைகளும் ஏற்படும்.
* ஒரு பொருளை புத்திசாலித்தனமாகக் காப்பாற்ற முடிந்தவனுக்கு அந்தப் பொருளை புத்திசாலித் தனமாகத் திருடவும் முடியும்.
* பிறக்கும் குழந்தைகள் அனைத்தும் அரசின் பொதுவுடமைச் சொத்துக்களாகி விட்டால் குழந்தைகள் பிறப்பில் எல்லோருக்கும் ஒரே மாதிரியான ஆனந்தமும் அவை மரிப்பில் ஒரே மாதிரியான துக்கமும் ஏற்படும்.
* மனிதனிடம் அறிவு உறங்கினால் மிருக இச்சைகள் கண் விழித்தெழுந்து குதியாட்டம் போடுகின்றன.
* இளமை எனும் பக்குவமான வயதில் தான் எல்லாக் குணப்பண்பும் உருப் பெறுகிறது. எல்லாவித அபிப்பிராயமும் ஆழமாக வேரூண்டுகிறது.
* அறிவின் எதிரில் அறியாமை தலைவணங்குகின்றது.
* உண்மையான காதல் நிலைத்திருக்க வேண்டுமாயின் சிற்றின்பம் தலைகாட்டக் கூடாது.
* ஒவ்வொரு மணமகனுக்கும் மணமகளிற்கும் திருமணத்திற்கு முன் ஆரோக்கிய சான்றிதழ் தேவை.
* அரசியல் வாதிகளின் மனைவிமார் நல்ல கல்வி அறிவும், திறமையும் உடையவர்களாயிருக்க வேண்டும்.
* ஆடம்பர உல்லாச வாழ்க்கையினால் அடிக்கடி வைத்தியரை நாட வேண்டும்.
* உணவு விடயத்தில் ருசியை பார்க்காதவன் தேகாரோக்கியமுடையவனாயிருப்பான்.
* நேரான வாழ்க்கை நடத்துபவர்களும் மன அமைதி உடையவர்களும் முதிய வயதில் பாதிக்கப்படுவதில்லை.
* இன்பம், துன்பம் என்பவை எல்லாம் வெறும் உணர்ச்சிகள்தான் அவை ஆத்மாவின் வெறும் அசைவுகள்தான்.
* எவ்வளவு கெட்டவனாயிருக்கின்றானோ அவ்வளவு துன்பம் அனுபவிக்கின்றான்.
* சாவைத் தவிர்ப்பதை விட ஆத்மாவை தவிர்ப்பது சிரமமானது.
* தத்துவம் என்பது அதி உன்னதமான சங்கீதம்.
* மனிதனிடம் வீரமில்லாத ஒழுக்கமோ, ஒழுக்கமில்லாத வீரமோ இருந்தால் அவன் கோழையாகவோ முரடனாகவோ ஆகிவிடுவான்.


வாழ்த்துகின்றோம்.

**பேராதனை நகரில்!**

மேல்நாட்டு - உள்நாட்டு அறுசுவையான உணவுவகைகளை உண்டுமகிழ நாட வேண்டிய ஒரே இடம்...

**Hotel Paradise**

**34A, COLOMBO ROAD,**
**PERADENIYA**
**KANDY**
Tel: 08 - 388829





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பா உன் சிந்தனைக்கு...

எம். எஸ். சுஜாத் முஹம்மட்
(ஆரம்பநெறி - 1998 - 2000)
சிலாவத்துறை
மன்னார்

சிந்தித்துப்பார்
எனதருமைத்
தோழனே - நீ
என்றென்றும்
சிந்தித்துப்பார்

புன்னகைக்காய்ப்
படைக்கப்பட்டதுதான்
உன்
புஷ்பத்து உதடுகள்
ஆனால்
நிச்சயமாய்
சிகரட் நுனியினை
தாங்கிக்கொள்ள
அல்ல

அபாய அறிவிப்பின்
சிகப்பு
சமிக்ஞையது
உன்
குருட்டு விழிகளுக்குத்
தெரியவில்லையா?
தன்னைத்தானழித்து
உனக்கு
இன்பம் தரும்
தியாகி என்று
நீ
நினைத்துக்கொண்டாயா?

நான் சொல்வேன்
நிச்சயமாய்
அது தியாகியல்ல
மாறாக
அது ஒரு
தற்கொலைப்போராளி
சிந்தித்துப்பார்
எனதருமைத்
தோழனே - நீ
என்றென்றும்
சிந்தித்துப்பார்

அது உன்
செங்கமல
ஈரலில்
ஓட்டையிட்டு
உன்
வாழ்வையது
சீரழிக்கப்போகிறது

சருகைத் தாளின்
சலசலக்கும்
ஓசையது
உன் செவிட்டுச்
செவிகளுக்கு
சங்கீதமாய்க்
கேட்கிறதோ.
நிச்சயமாய்
அது சங்கீதமல்ல
நண்பனே
உன்
மரண நாளைப்
பறை சாற்றும்
பறையோசை

நீ
வாழப் பிறந்தவன்
நண்பனே - நீ
வாழப் பிறந்தவன்
வாழ்க்கை
என்றும்
வாழ்வதற்கே

உன்
விரல் இடுக்குகளில்
வீற்றிருக்கும்
அக்னிக்குண்டமதை
அடியோடு
வீசிவிடு
வாழ்க்கை
என்றும்
வாழ்வதற்கே
வசந்தம்
என்றும் - உன்
திருவடிக்கே.

இது உங்கள் நூல்
சுத்தமாக வைத்திருக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிநட்சத்திரங்கள்

ஏ. எல். எப். சம்றாத்
(விஞ்ஞான நெறி - 1998 - 2000)
மாவனெல்லை

ருமைஸாவுக்கு ஒரே எரிச்சலாய் இருந்தது. எவ்வளவுதான் விரட்ட முயன்றாலும் மீண்டும் மீண்டும் எதிர் வீட்டு முபீரா டீச்சரின் வார்த்தைகள் காதுக்குள் ரீங்காரமிட்டுக் கொண்டே இருந்தன. மனதை வலுக்காட்டாயமாகவேனும் திருப்ப எண்ணி சின்ன மகள் ஷப்னாவின் பாதி தைத்த கவுனைத் தைக்க முயன்றுவிட்டு, முடியாமல் போய் முன் விறாந்தையிலிருந்த சாய்மனையில் சாய்ந்து கொண்டு பாடசாலை சென்ற கணவரையும் ஷப்னாவையும் எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இருந்தாலும் இந்த முபீரா டீச்சருக்குத்தான் என்ன தைரியம். என்னிடமே என் கணவரின் படிப்பிக்கிற முறை பற்றிக் குறை கதைக்க" என அவள் மனம் ஆர்ப்பரித்துக் கொண்டே இருந்தது. மறையாத நிழற்படமாய் காலையில் நடந்த சம்பவம் அவள் மனதில் தோன்றித் தோன்றி எண்ண அலைகளை முட்டிக் கொண்டிருந்தது.

அன்றைய தினமும் அந்தக் கிராமமும் இல்லாத நகரமும் இல்லாத 'அரைகுறையில்' அடிக்கடி நிகழும் 'மின்வெட்டு' அதைத் தொடர்ந்து 'நீர்வெட்டு'. ருமைஸாவும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள் தண்ணீர் வரும் சாயலேயில்லை. ஏதோ மூத்தமகள் ஷஹீதாவின் புண்ணியத்தில் அவளுக்கொரு சிரமமுமின்றியே சமையலும் முடிந்தது. ஷஹீதா கெட்டிக்காரி; அவளுடைய கைச் சமபலுக்கு வீட்டில் அமோக வரவேற்பு. அவளுக்குச் சமையலில்தான் என்றில்லாது கைவினைப் பொருள்களை செய்வதிலும் தனி ஆர்வம். கண் பார்த்ததைக் கை செய்யும். சென்ற ஆண்டில் உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேற்றை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

இருக்கின்ற தண்ணீரைக் கொண்டு சமையல் வேலையை எல்லாம் முடித்துவிட்டு,

"அவசரத்துக்கு இரண்டு பக்கெற்று தண்ணி கொண்டாங்க உம்மா"

என பக்கெற்றை வைத்துப் போனாள். ருமைஸா கொஞ்சநேரம் தண்ணீர்க் குழாயைத் திருகியே வைத்திருந்தும் பலனேதும் இல்லையாதலால் பக்கெற்றை எடுத்துக் கொண்டு இரண்டு வீடு தள்ளி இருக்கும் முனீரா தாத்தா வீட்டு 'ஸ்டொக் டேங்க்' பக்கம் நகர்ந்தாள். அங்கு ஏற்கனவே முபீரா டீச்சரும் அடுத்த வீட்டு நஜீமா சாச்சியும் நீர் பிடித்துக் கொண்டிருந்தனர். ருமைஸாவைக் கண்டதும் முபீரா டீச்சர் நிம்மதி கலந்த ஒரு புன்சிரிப்பை வெளியிட்டார். ஏதோ தண்ணி பிடிக்கும் வேலையில் ருமைஸாவின் வரவால் தனது கௌரவம் சரிக்கட்டாற் போல. நஜீமா சாச்சி அப்பாவி.

"நீங்க வரங்காட்டியும் இருக்கவா மகள்" என விசாரிக்க,

"நீங்க போங்க சாச்சி; கிட்டத்தானே" என ருமைஸாதான் அனுப்பி வைத்தாள். அதன் பிறகுதானே தொடங்கியது வினை.

"ஸா... எங்க வகுப்புக்கு போனா ருமைஸா" ஆயிஷா டீச்சர் கேட்க,

"ஓ.... அவருக்கு சரியான பிஸி; வீட்டில இருக்கிற நேரமே குறைவுதான்"

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சொல்லிக் கொண்டாள். முபீரா டீச்சருக்கு உதடுகளில் ஒரு புன்னகை அடங்கிப் படர்ந்தது.

"அது சரி ருமைஸா; எங்கட முன்னுத்து வீட்டு பொடியன் ஸேர்ட வகுப்புக்கு வர ஏலாண்டு சொல்றானாம். ஸேர்ட முறையெல்லாம் பழைய முறையாம். இந்தக் காலப் பொடியன்களோட எங்க ஒண்டையும் செஞ்சு தப்பேலா சொல்லிவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாறன் ருமைஸா"

என்று நடையைக் கட்டினார். ருமைஸாவுக்கு அவமானத்திலும் கோபத்திலும் முகம் சிவந்தது. ஏதோ நலவுக்குச் சொல்வது போலச் சொல்லி தன்னை வெகுவாக மட்டம் தட்டிய முபீரா டீச்சரின் தந்திரமான பேச்சில் அயர்ந்து நின்றாள் ருமைஸா. அவசர அவசரமாகத் தண்ணீர் பிடித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்து வெகுநேரமாகியும் அவளின் படபடப்பு அடங்கவில்லை.

"உம்மா......."

சின்னவள் ஷப்னாவின் சத்தம் அவளை சுயநினைவுக்குக் கொண்டு வந்தது. அப்போதுதான் ஷப்னாவும் பாறூக் ஸேரும் வகுப்பு முடிந்து வந்து கொண்டிருந்தனர். அவர்களுக்குத் தேநீர் தயாரிக்கவெனத் திரும்பிய ருமைஸாவின் கையை இழுத்து

"தச்சாச்சா உம்மா கவுன்"

கேட்டாள்.

"அது ஷப்னா.... வெள்ள நூல் முடிஞ்சிட்டுது. நாளைக்கு வாங்கித் தச்சுவோம்"
சமாதானப்படுத்த முயன்றபடி நகர,

"லைட் கலர் நூல் இல்லியா உம்மா"

மீண்டும் யோசனையோடு கேட்டாள். ருமைஸாவுக்குச் சிரிப்பாகவும் பெருமையாக வும் இருந்தது. ஷப்னாவுக்கு ஐந்து வயது தான் ஆகிறது. இருந்தும் வாப்பாவோடு வகுப் புக்குப் போய் மூன்றாமாண்டு மாணவர் களுடன் அவளும் இருந்து படித்து விட்டு வருகிறாள். முதலில் ருமைஸாவும் பாறூக் ஸேரும் சின்ன வயதில் அழுத்தம் எதற்கு என தடுக்க முனைந்தும், ஷப்னா பிடிவாத மாக வாப்பாவுடன் போவாள். மகள் திறமை சாலியாய் இருப்பது பற்றி இருவருக்குமே அலாதி பெருமைதான். ஷப்னாவின் சுட்டித்தனத்தையும் குறும்புத் தனத்தையும் பார்த்ததில் அவளுடைய மனக் கவலைக ளெல்லாம் மறந்தே போய்விட்டன.

'சட்' 'சட்' 'சட்' என இடைவிடாது தூறிக் கொண்டேயிருந்தது மழை. குடையை மடக்கி ஒரு ஓரத்தில் வைத்தவாறே 'ஸ்டா'.ப் ரூமுக்குள்' நுழைந்தாள் ருமைஸா. அவர்களின் ஸ்டா'.ப் ரூம் கோட்டை குண்டு வெடிப்பு தொடக்கம் கிளின்டன் - மொனிக்கா விவகாரம் வரை வர்க்க பேதமின்றி அலசப்படும் ஒரு தகவல் சுரங்கம். அங்கு பொறி பறக்கும் அரசியல் விகாரம் முதல் பர்ஹானா டீச்சர் வீட்டு வெள்ளை ஆடு குட்டி போட்டது பற்றிய சில்லறை விவகாரம் வரை கலந்துரையாடப்படும். காலியாயிருந்த ஒரு கதிரையில் அமர்ந்த படியே சுவாரசிய மாக அவர்களுடன் தன்னையும் இணைத்துக் கொண்டாள் ருமைஸா. வாழைக்காயை புதிய விதமாக சமைப்பது எப்படியென்று ஷியாமா டீச்சர் விளக்கிக் கொண்டிருந்தார். பேச்சு அங்கிங்கெல்லாம் சுற்றி அலைந்த பின் பாடசாலைக்கு புதிதாக வந்து சேர்ந்திருக்கும் காலிதீன் ஸேரில் வந்து நின்றது. எப்போதுமே 'லொட' 'லொட' என்று பேசும் பர்ஹானா டீச்சர்,

"பேரப் பார்த்தா பெரிய பழைய பஞ்சாங்கம் போல இருக்குதே"
என்று சொல்லி முடிக்கவும்

"பேர் பழசா இருந்தா என்ன? புதுசா இருந்தா என்ன? பேரப் பார்த்து ஆளப் பாக்குறவங்க இந்த நூற்றாண்டுக்கே பொருத்தமில்லாத வங்க"
என்று சுடச்சுட வந்தது பதில் முபீரா டீச்சரிடமிருந்து.

இந்தச் சின்ன விடயத்திற்குப் போய் சிறு பிள்ளைபோல் இப்படி சீறிக் கிளம்புவானேன் என எல்லோரும் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே சடக்கென வெளியே றினார் முபீரா டீச்சர்.

"என்ன பர்ஹானா, வந்திருக்கிறது முபீரா டீச்சரிட தம்பி இல்லியா, ஓங்களுக்கு தெரியாதா" என ஷியாமா டீச்சர் கேட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுதான் எல்லோருக்கும் ஆயிஷா டீச்சரின் கோபம் புரிந்தது. ருமைஸாவக்குக் கூட அன்றைய சம்பவத்தின் காரணம் தெரிந்தது.

இப்பொழுதெல்லாம் பாறூக் ஸேரிற்கு அதிகம் வகுப்புகளில். ஆர்வமில்லை. அவர் முன்னப்போல படிப்பித்தலிலும் அதிக ஆர்வமில்லாதது போல ருமைஸாவிற்கு ஒரு நினைவு. காரணமும் ஓரளவு அவள் அறிந்ததே. பாடசாலைக்குப் புதிதாய் வந்திருக்கும் காலிதீன் ஸேரைச் சுற்றி ஈ மொய்ப்பது போல் எப்பொழுதும் ஒரு மாணவர் கூட்டமிருப்பதை அவள் கண் கூடாகக் கண்டிருக்கிறாள். அன்றொரு நாள் எழாம் ஆண்டு வகுப்புக்கு அவள் பாட மெடுத்துக் கொண்டிருக்கும் போது அடுத்த வகுப்பில் காலிதீன் ஸேர்தான் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்படி என்னதான் புதிய முறையில் இவர் படிப்பிக்கிறார் என்றுதான் பார்ப்போமே என எண்ணி அவள் அந்தப்பக்கமாய் சிறிது காதைக் கொடுத்த போது அவளுக்கு மிஞ்சியது வருத்தமும் ஏமாற்றமும்தான். மாணவர்களை விறுவிறுப் பாகவும், உற்சாகமாகவும் வைத்துக்கொள்ள எத்தனையோ வழிகளிருக்க கிளுகிளுப்பான மூன்றாம் தர ஜோக்குகளைக் கையாளும் காலிதீன் ஸேரை எண்ணி வெறுப்புத்தான் ஏற்பட்டது. அவருக்கு முன் பாறூக் ஸேரின் ஆத்மார்த்தமான, கண்ணியமான படிப்பித்தல் முறை எத்தனை உயர்ந்தது என அவளுள்ளம் எண்ணிக் கொண்டது. இதே விடயத்தை மாலையில் கணவனிடமும் சொன்னபோது, அவருக்கேயுரிய நிதானமான புன்னகையுடன்,

"மத்தவங்க எத நினைச்சா எங்களுக்கென்ன ருமைஸா, நாங்க உண்மையா, உண்மை யான அக்கறையோட எங்கட கடமையைச் செஞ்சா மத்தத அல்லாஹ் பார்த்துக்குவான்" எனச் சொன்னபோது ருமைஸாவின் கவலைகள் ஒருவாறு நிதானத்துக்கு வந்தது.

அன்று பாடசாலை ஒரே பரபரப்பில் இருந்தது. ஜீ. சீ. ஈ. சாதாரண தர பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்து மாணவர்களும், ஆசிரியர்களும் ஒருவிதப் பரபரப்பில் இருந்தனர். ஒருவாறு பதினொரு மணியளவில் பெறுபேறும் வந்து சேர்ந்தது. முபீரா டீச்சர் குட்டி போட்ட பூனை யாய் அங்குமிங்கும் சுற்றிக் கொண்டி ருந்தவர், ஒரேயடியாய் அலுவலகத்தினுள் நுழைந்து பார்க்க முற்பட்டார். அவரின் தம்பி கற்பித்த பின் வரும் முதல் பெறுபேறாதலால் மிகவும் எதிர் பார்ப்புடன் அவர் இருந்தார். சிறிது நேரத்தில் சரத்தேயில்லாத முகத்து டன் வெளியே வந்த ஆயிஷா டீச்சரிடம் எதிர்ப்பட்ட ஒவ்வொருவரும் "எப்படி டீச்சர் தம்பிட வகுப்பு" என வினாவெழுப்ப,

"பார்க்கல்ல டீச்சர்"

என்று சொல்லிக் கொண்டே 'கெண்டீ னுக்குள்' நுழைந்து கொண்டார்.

கடந்த பெறுபேற்றினை அடுத்து அதிகளவு புள்ளிகளைப் பெறக் காரணகர்த்தாக்களான ஆசிரியர்களுக்காக ஒரு பாராட்டு விழாவை அதிபரும் மாணவர்களும் ஒழுங்கு செய்திருந்தனர். பெற்றோர், மாணவரின் அமோக ஆதரவுடன் நடந்த அக்கூட்டத்தில் தன்னலமின்றி சேவை செய்ததற்காக மட்டுமன்றி, மாணவர்களுக்கு சிறந்த ஒழுக்கக் கல்வியையும் போதிக்கும் நல்லாசிரியராக பாறூக் ஸேரை அதிகம் பாராட்டிப் பேசினார் அதிபர். இதையெல்லாம் கேட்கும்போது ருமைஸாவுக்கு அன்று பாறூக் ஸேர் சொன்ன வார்த்தைகளில் பொதிந்திருந்த உண்மை தெளிவாகத் துலங்கியது.

பார்வைக்குப் பிரகாசமாக இருந்து இடையில் பஸ்பமாகி விடும் எரிநட்சத்திரங்களைப் போல, வரும் புகழ்ச்சிகளுக்கு மயங்கி விடுவது எத்தனை அறிவீனமானது என எண்ணிக் கொண்டாள். மேடையில் அதிபருக்குப் பக்கத்தில் சாதாரணமாக அமர்ந்திருக்கும் பாறூக் ஸேரைப் பார்த்து அவள் மனம் மானசீகமாக இறைவனின் அருளுக்குப் பணிந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ADDRESS OF ADDALAICHENAI NATIONAL COLLEGE OF EDUCATION TRAINEES - 1998 / 2000 BATCH

### PRIMARY - A

| | |
|---|---|
| 01. AH. JANOOSIYA | 100, MATHAWAN ROAD, KALMUNAI - 03. |
| 02. AR. MOHAMED KIYAS | KANDALKULIYA ROAD, KURUNCHIPITIYA, PUTTALAM. |
| 03. ARM. NAATHIR | MARCUS ROAD, WARD NO - 04, T/THOPPOOR. |
| 04. ARS. JIFFRIYA | 296, OSMAN ROAD, SAINTHAMARUTHU - 07. |
| 05. H. JULAINA | 10, MALMADUWA ROAD, KOTTIYAKUMBARA. |
| 06. J. NAAMDEEN | KAKKAMUNI-06, KINNIYA. |
| 07. J. SAMSUDEEN | OTTUKKULAMA, RASNAYAKAPURA, NIKAWARATIYA. |
| 08. JF. RIFANA | 104, PUTHUKKUDIYIRUPPU CH-BATTULU-OYA, CHILAW. |
| 09. LAR. FARHAN | RC - 01, KALAWEWA, VIJITHAPURA. |
| 10. M. FAAJEETH | 54/4, T.C. ROAD, KANTHALAI. |
| 11. MA. AAYSHA | 476A, PALAWADY ROAD, OLUVIL -06. |
| 12. MA. FATHULA | 34, CO-OPARATIVE ROAD, KANKEYANODAI, KATTANKUDY. |
| 13. MA. SALAHUDEEN | RAHUMANIYA PATH, ADDALAICHENAI - 07. |
| 14. MAM. RAMSAN | PEOPLES BANK ROAD, KINNIYA. |
| 15. MAM. YASEER | 365, K.P. ROAD, ERAVUR - 0602. |
| 16. MH. SAJEETHA | 129, HAJA LANE, SAINTHAMARUTHU - 12. |
| 17. MI. RAKEEBA BANU | 58/1, SAREEF PROCTOR ROAD, KATTANKUDY -02. |
| 18. MI. RINOSA | 26, BEACH ROAD, AKKARAIPATTU - 01. |
| 19. MM. AAYSHA BEEVE | 138, FISHERISH CO-OPRAVITY ROAD, NEW KATTANKUDY. |
| 20. MM. THASLIYA | 499A, MOSQUE ROAD, KALMUNAI - 05. |
| 21. MPMF. RINOSA | 36, MATTAMAGODA, KOTTIYAKUMBARA. |
| 22. MS. SUJATH MOHAMED | C/O, A.W.M. SALEEM, ALANKUDA ETALAI, PUTTALAM. |
| 23. MT. SAMSUNISA | 73/12, MADAWALA ROAD, KATUGASTOTA. |
| 24. NF. FASLIYA | 78/1, POLGOLLAWATA, POLGOLLA. |
| 25. PLS. RAFEEKA | 55, SMALL MOSQUE LANE, SAMMANTHURAI - 08. |
| 26. SHB. RUWAISA | 29A, ALIYAR ROAD, KALMUNAI - 07. |
| 27. SL. JASMIN | BASAR 7TH LANE, SAMMANTHURAI 07. |
| 28. SM. RASEETHA | HASRATH ROAD, OTTAMAVADY. |
| 29. SMS. FAREENA | 170, CENTRAL ROAD, SAMMANTHURAI. |
| 30. SS. SAHEETHA | 285A, MAKKAMADY ROAD, MARUTHAMUNAI - 03. |
| 31. TM. IMTHIYAS | SALVAN NAGAR, THOPPOOR - 03. |

### PRIMARY - B

| | |
|---|---|
| 01. AC. ASFAR | BEKKANWATTA, ALAHAPPERUMAGAMA, VIJITAPURA. |
| 02. AC. ASMA | 12, THAQVA NAGAR, TRINCOMALEE. |
| 03. AH. FARMILA | WAGURUWELA IBBAGAMUWA. |
| 04. AL. SARMILA | 188/1, AMPARA ROAD, SAMMANTHURAI - 02. |
| 05. ALA. RAHUMAN | 151, GTC, NORTH ROAD, ADDALAICHENAI - 04. |
| 06. ALHR. RAIHANA | 06, MAIN STREET, NINTAVUR - 16. |
| 07. AM. NASEEHA BAGAM | 14, UDATALAVINNA MADIGE, UDATALAWINNA. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 08. AR. RUWAISA | 3, HIJIRAPURA GENIWELPOLA, KEKKIRAWA. |
| 09. AS. ANVER ALI | 17, AHAMED LANE, KINNIYA. |
| 10. ASF. SILMIYA | 46, UDAYAR LANE, PUTTALAM. |
| 11. HMS. RAFEESA | ANNAL STREET, KINNIYA - 03. |
| 12. K. SAMEERA | NEW WELCOME TEX, PUTHUK UDIYIRUPPU, CH. BATULU-OYA. |
| 13. KMM. BAASHEER | 81, ARABIC COLLEGE ROAD, MUTHUR - 05. |
| 14. M. MAJEEDA | 624, 5TH CROOSS STREET, SAMMANTHURAI - 11. |
| 15. MAM. NALEEFA | WAMMIYADI ROAD, ADDALAICHENAI. |
| 16. MB. FAYSA | 417, PICHCHIPILAVADI ROAD, KALMUNAI - 04. |
| 17. MB. ZANFANIYA | 70, GAHATOVITA, NITTAMPUWA. |
| 18. MCM. SALAHUDEEN | WALAHAVIDDAWEWA, PARANKIYA WADIYA, HORAWAPOTNA. |
| 19. MFS. SAMSUNNISHA | 170B, NEW ROAD, G.S. LANE, KALMUNAI - 07. |
| 20 MHF. FARSANA | 412/3, MATALA ROAD, ALAWATUGODA, AKURANA. |
| 21. MHF. HINAYA | 11, MUHANTHIRAM ROAD, ERAVUR - 06. |
| 22. MI. AHAMED LEBBE | 57, BLOCK 'J' WEST VILYNAYADY, SAMMANTHURAI. |
| 23. MI. JIYA | NEITHAL NAGAR, MUTHOOR - 01. |
| 24. MIF. ROSHANA | 24/5, THAKKIYA LANE, THALAPITIYA, GALLE. |
| 25. MK. NAWASIYA | 23, KETAWELA, MADAWALA ULPOTHA, MATALE. |
| 26. MM. MARJUNAS BEGAM | AKKARAICHENAI, MUTHOOR - 01. |
| 27. MM. YASEER | 148/A, MAIN STREET, KINNIYA - 03. |
| 28. MMF. KAREEMA | 186/1, KURUNDUWATA - 02, GINTOTA, GALLE. |
| 29. MSF. NOORIYA | D54, MADULBOWA, HEMATHGAMA. |
| 30. MY. SAMOON | 151, GTC, NORTH ROAD, ADDALAICHENAI - 04. |
| 31. SL. RAZAK | 242, MOSQUE ROAD, KALMUNAIKUDY - 09. |
| 32. SM. RAMSIYA | 249A, MOSQUE ROAD, KALMUNAI - 05. |

## SCIENCE COURSE

| | |
|---|---|
| 01. ALF. SHAMROOTH | A61/2, ZAHIRA ROAD, MAWANALLA. |
| 02 AS. FASLIYA | 316/2, WARAGASHINNA, AKURANA. |
| 03. CLM. RISWAN | MOOSAWELLAWE, PUTTALAM ROAD, NIKAWERETIYA. |
| 04. HMM. ROSHAN | HUTHA MOSQUE ROAD, ODDAMAVADI - 01. |
| 05. IF. BASEEMA | 103B, THALAPITIYA, DEHIYANGA, MARUTHALAWA, KANDY. |
| 06. IF. IZRATH | 14/C, DASKARA, GELIOYA. |
| 07. MH. SHAMILA HAMSA | SEENIGODELLA, KANNATOTA. |
| 08. MIM. FAISMOWLANA | 388 HAJIYAR ROAD, MARUTHAMUNAI. |
| 09. MIS. JANOOSA | 249B, MOSQUE ROAD, KALMUNAI - 05. |
| 10. MM. KIYASUL MOHIDEEN | 31, 5TH CROSS STREET, PUTTALAM. |
| 11. MNF. RIYASA | 32, UNITED LANE, MAWANELLA. |
| 12. MNM. RIZWAN | 48/5, ILLAWATURA, GAMPOLA. |
| 13. MS. FAREETHA | 153, TOWN HALL ROAD, KALMUNAI - 13. |
| 14. MS. NAFIYA | 16/7, HAJIYAR ROAD, DHARGATOWN. |
| 15. MSF. SHAMLA | 59 ZHIRA ROAD, HINGUL - OYA, MAWANELLA. |
| 16. MSM. NAKEEB | 683 KALYANA ROAD, SAINTHAMARUTHU - 14. |
| 17. MT. MOHAMED NIHAR | 81/4B, AL ARSATH ROAD, MALAYADI GRAMEM - 03, SAMMANTHURAI. |
| 18. S. MUBARAK | 182C, KARIYAPPAR ROAD, SAINTHAMARUTHU - 02. |
| 19 SM. SULHAR | 32/2, LANE NO - 03, 3RD CROSS STREET, PUTTALAM. |
| 20. SMF. JAZEELA | 777, MALWANAHINNA, AKURANA. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PHYSICAL EDUCATION COURSE

01. AM. ANZAR — 131D, 9/4 RAHMANIYAPURAM, BEACH ROAD, NINTAVUR - 05.
02. AMM. RISHAD — 255/70, MARIYAVILA ESTATE, PUTTALAM ROAD, BATHULU - OYA.
03. ILM. IRFAN — 208 PAKIYATHUZZALIHATH ROAD, PERIYA NEELAWANAI, MARUTHAMUNAI.
04. MAG. FIRNAZEE — 136, SHAREEF HAJIYAR ROAD, ADDALAICHENAI - 01.
05. MFM. THUFAIL — 93, NEDUMKULAM ROAD, PUTTALAM.
06. MIM. AZMY — 204A, RILA MANZIL, A.P.L. ROAD, NINTAVUR - 07.
07. MSM. ASLAM — SEA STREET, P/KALPITIYA.
08. MWM. ALI ZABRY — 660 CQ POLES ROAD, PUTTALAM.
09. NM. MOWZOOM — 63, NHS LOVE LANE, TRINCOMALEE.
10. S. SUBAIDEEN — 14A, JINNAH NAGHAR, TRINCOMALEE.
11. TKM. ZIRAJ — 535, OLD MARKET ROAD, SAINTHAMARUTHU - 03.

## MATHAMATICAL COURSE

01. AL. HOSIMIN — 131, HAPUKASKANTHA, MADAWALA BAZAR.
02. CM. MOHAMED FAZI — BASH IMMAM STREET, VALAICHENAI - 04.
03. MHF. NAJLA — 14, ASOKARAMA ROAD, DICKWELLA.
04. MNM. ZAHEERA NIZAM — 125/1, HAPUKASTENNA, MADAWALA BAZAR.
05. YLM. UWAIZ — WALPALUWA, THAMBUTTA, GALGAMUWA.

அமீர்அலி பொது நூலகம்
பிரதேச சபை - சம்மாந்துறை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ADDRESS OF ADDALAICHENAI NATIONAL COLLEGE OF EDUCATION TRAINEES - 1999 / 2001 BATCH

## ISLAM COURSE :

| | |
|---|---|
| 01. KM. NAZAR, | 812, MALIGA ROAD, SAINTHAMARUTHU - 17. |
| 02. MSM. RIMSAN, | MATARAGE WATTA, KANNAMPITIYA, GANDARA, MATARA. |
| 03. MNM. RISHAD, | 88/40, KIRINGADENIYA, MAWANALLA. |
| 04. MSM. RAFEEL, | 96, UDAYARS LANE, PUTTALAM. |
| 05. MI. HUSNA MUNEERA, | 516/2, KALUGAMUWA, GELIOYA, KANDY. |
| 06. R. NALEERA, | AHAMED LANE, KINNIYA - 03. |
| 07. M. NAFEELA, | 127, BOUNDARY ROAD, MARUTHAMUNAI - 01. KALMUNAI. |
| 08. MB. HAMSUL NIHARA, | 16A/1, MAIN STREET, MARUTHAMUNAI - 04. KALMUNAI. |
| 09. SH. MEHARUNNISA, | 18/4, BAWA LANE, KATTANKUDY - 06. |
| 10. PM. SHAFILA BEGAM, | B/2, HUSSAINIYA NAGAR, PALAMUNAI - 04. |
| 11. AC. SITHI RIFAYA, | 277/2, IBRAHIM MOULAVI LANE, OLD ROAD, KATTANKUDY - 01. |
| 12. MS. SITHY SATHEEKA, | 129/1, MAIN STREET, ERAVUR - 01. |
| 13 MHR. NOORUL IRFANA, | 9/2, "DHARUL IKRAM", INDIRILI GODA, MAGGONA. |
| 14. MSF. FASEEHA, | 39, INDIRILI GODA, MAGGONA. |
| 15. M. HUSNIYA, | 22, REPORTER HOUSE, YONAKAPURA, DICKWELLA. |
| 16. MB. FAYITHA, | KALMUNIKUDY, AALANKUDA, EATHTHALAI, PUTTALAM. |
| 17. NP. RISVIYA BEGUM, | WALPALUWA, THAMBUTTA, GALGAMUWA. |

## PRIMARY COURSE :

| | |
|---|---|
| 01. MA. NIYAS, | 277, BAND ROAD, SAMMANTHURAI. |
| 02. SIM. SHATHATH, | 614, BOUNDARY ROAD, ODDAMAVADI - 03. |
| 03. AL. SAMEEM, | 105, K.P.M. ROAD, POTTUVIL - 02. |
| 04. ACM. MUFEETH, | 262, SCHOOL ROAD, NINTAVUR - 11. |
| 05. SMM. SAJEER, | 137E, HOSPITAL ROAD, SAINTHAMARUTHU - 10. |
| 06. PM. NINAF, | 77 THAKYA ROAD, SAMMANTHURAI. |
| 07. ILA. RAHUMAN, | 240/B, HOSPITAL ROAD, NINTAVUR - 04. |
| 08. A. ASVARULNIMAIRY, | 322B, HIJRA ROAD, NATPIDDIMUNAI. |
| 09. AM. SARJOON, | 138, VANNIYAR ROAD, NINTAVUR - 13. |
| 10. ML. ANSHAR, | M.K. ROAD, ODDAMAVADY - 02. |
| 11 MI. IMTHIYAS, | 171, LIBRARY ROAD, MARUTHAMUNAI. |
| 12. S. NAZEER AHAMED, | 303, KATHIYAR ROAD, ERAVUR - 06. |
| 13. MSA. HAMEES, | 303A, MACKAMADY ROAD, MARUTHAMUNAI - 03. |
| 14. ML. SAFEERA, | 203, VANNIYAR ROAD, NINTAVUR - 12. |
| 15. UL. SITHY HITHAYA, | 66A, NELLITHIVU, NINTAVUR - 25. |
| 16. UK. JESMIN, | 592A, JAMAHIRIYA ROAD, SAINTHAMARUTHU - 02. |
| 17. MBF. HAMZIYA, | VADDA VITHANAI ROAD, VALAICHENAI - 05. |
| 18. MH. SATHIKA BEGUM, | 609, 3RD CROSS ROAD, NINTHAVUR - 03. |
| 19. AL. THAHIRA, | 457, SAHIBUTHAMBY ROAD, POTTUVIL - 01. |
| 20. ML. JASMIN, | 96, AL-NAJATH ROAD, PAKKIYAWATHA, POTTUVIL - 14. |
| 21. AG. MUFLIHA, | "DARUL FALAH", BAWA HAJI LANE, KATTANKUDY - 05. |
| 22. AP. HAJARA BEEVI, | V.C. CROSS ROAD, POTTUVIL - P/8. |
| 23. SB. NAZEELA, | 111/1, DEEN ROAD, KATTANKUDY - 06. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. IL. SITHY ANEEZA, 53, MAIN STREET, NATPIDDIMUNAI - 01.
25. MFKR. JAMUNA KARIAPPER, 327, HANIFA ROAD, KALMUNAI - 07.
26. U. INUL NASHEEFAH, 515A, MOSQUE ROAD, KALMUNAI - 05.
27. MS. SITHY INAYA, MPCS ROAD, SEMMANNODAY - 07, ODDAMAVADY.
28. SL. FASMINA, 506, HOSPITAL ROAD, SAINTHAMARUTHU - 07.
29. MH. HAFIYA, 310, OLD POST OFFICE ROAD, KALMUNAI.
30. MM. FASLIYA, 377A, THAIKA ROAD, KALMUNAI - 05.
31. MH. NUSRATH BEGUM, "ARULAKAM", NEW ROAD, KALMUNAI - 14.
32. AR. NOORLIYA, 19A, AL-HILA ROAD, SAINTHAMARUTHU - 11.
33. AW. RINOSIYA, 136, MAVADY ROAD, SAINTHAMARUTHU - 05.
34. AL. AMEENA, 85, BEACH ROAD, AKKARAIPATTU - 01.
35. MFS. RIFANA, 133, BEACH ROAD, KALMUNAI - 04.
36. AL. SAJITHA, "NOTTARY PUBLIC VILLA" 2ND CROSS STREET, AKKARAIPATTU - 01.

## 1ST YEAR SCIENCE

01. I. FAMEEL, 145/A, SCHOOL ROAD, IRAKKAMAM - 09.
02. AM. MUJEEBDEEN, PANDIRUPPU DIVISION, MARUTHAMUNAI - 06.
03. P. SAHAK, 63, AL-AQZA STREET, KINNIYA - 02.
04. ACA. MAHIR, 138/B, MAIN STREET, NATPIDDIMUNAI - 02, KALMUNAI - 02.
05. SH. AZEEMA, 22A, KALUACHCHIGAMA, MANNEKULAM.
06. MS. FATHIMA SHARMILA, 16/4, NAYAWALA, MAWANELLA.
07. MA. HAFSA, MOHIDEEN MANZIL, BAZAAR 2ND LANE, SAMMANTHURAI.
08. MBS. USAINA, 568/1, ARASAIADY ROAD, AKKARAIPATTU - 06.
09. AGF. RISWANA, 46, THAKKIYA ROAD, MAHAWATTA, MAWANELLA.
10. MY. JESMIN ISSATH, 171, KANDY ROAD, MAWANELLA.
11. MI. SANFARAH, "NISAYA MANZIL" NUGAGAHAGEDARA, PAHAMUNE.
12. MM. SAYEETHA, 121, OLD POST OFFICE ROAD, SAINTHAMARUTHU - 01.
13. MB. RIYAS FATHIMA, 168, UYANWATTA, DEWANAGALA.
14. MB. MUSTHARI BEGUM, 54C, AL-MANAR ROAD, MARUTHAMUNAI - 02.
15. MS. ILHAM, 226/A, LIBRARY ROAD, MARUTHAMUNAI - 03.
16. FO. FATHIMA RIZNA, 07, MOSQUE ROAD, MADAWALA BAZAR.
17. S. FASMIYA, 348, KALAWEWA, VIJITHPURA, ANURADHAPURA.
18 WAF. NAAJIHA, 220, KAPUWATTA, DENIPITIYA.
19. MFR. SANEERA, RASMILA MANZIL, VAKGASMULLA, WEERAKETIYA.
20. MI. ZEENATH RIYAZANA, "JAMEELA MANZIL" MAIN STREET, NINTHAVUR - 16.
21. AM. FATHIMA SILSIYA, 68/3, HUTHA LANE, KATTANKUDY - 03.
22. SS. AYSHA, 243/4, KANDY ROAD, GALHINNA - 20152.
23. SH. HAMEEDHA BEGUM, 765, MALWANAHINNA, AKURANA.
24. WAF. NAJIHA, 220, KAPUWATTA, DENIPITIYA.

## MATHS COURSE :

01. HMM. AJMAL, 282, NAVINNA UKUWITHA, GALLE.
02. A. ZIHABUL IZAM, SAILAN ROAD, KALMUNAI.
03. PMM. NALEEM, ALANGUDA, ETTALE, PUTTALAM.
04. A. MOHAMED CASEEM, VELLANKARAI ROAD, PALLIVASAL THURAI, PUTTALAM.
05. MI. NAAZAR, 86A, OSHMAN ROAD, SAINTHAMARUTHU - 05.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PHYSICAL EDUCATION COURSE :

| | |
|---|---|
| 01. AHM. BASHRY, | ARABIC COLLEGE ROAD, MUTHUR - 05. |
| 02. MI. RIYAS AHAMED, | 22, UNITED LANE, MAWANELLA. |
| 03. J. BATHSA, | 39A BOUNDRY ROAD, MARUTHAMUNAI. |
| 04. CIM. RIYAS, | 118/6A, BETHAWALA, HAMPANTHOTAI. |
| 05. AGM. SAHEEB, | 142A, AL-MANAR ROAD, MARUTHAMUANI. |
| 06. CM. ASHAR, | 234, HIJRA ROAD, MARUTHAMUNAI. |
| 07. A. FAIZAR, | 638, OLD MARKET ROAD, SAINTHAMARUTHU |
| 08. MFM. NASFAR, | 07, BAWA HAJIYAR LANE, KATTANKUDY - 05. |
| 09. AM. NAFFAR, | 33B SAILAN ROAD, KALMUNAI - 04. |
| 10. MSM. MUNEEP, | 29, KAPOOR STREET, KINNIYA - 07. |
| 11. AM. NOUSATH, | 199, HANIFA ROAD, KALMUNAI. |
| 12. MM. BUHARY, | 456B, MERSA ROAD, SAINTHAMARUTHU - 03. |
| 13. MS. KABEER, | 231/B, VANNIYAR ROAD, NINTHAVUR. |
| 14. K. SUBAIR, | FISHERS ROAD, FATHIMA STREET, VALAICHENAI - 04. |
| 15. H. DILSHAN MOHAMED, | SCHOOL ROAD, KURINCHI PITIYA KALPITIYA, PUTTALAM. |
| 16. MFH. HYKEL, | 114/1, MARAIKAR ROAD, MARUTHAMUNAI - 04. |
| 17. MZM. ISMEER, | CENTRAL ROAD, COLOMBO - 12. |








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2001ஆம் ஆண்டு கல்லூரியின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் முன்னிலை நிகழ்வுகள்



தேசிய கல்விக் கல்லூரிகளுக்கிடையில் நடைபெற்ற கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 2001ஆம் ஆண்டுக்கான சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டு தங்கப் பதக்கங்களை வென்ற கல்லூரி கால்பந்தாட்டக் குழுவினருடன் பீடாதிபதி மற்றும் உடற்கல்வி விரிவுரையாளர்களும் காணப்படுகின்றனர்.



2001ஆம் ஆண்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட கால்பந்தாட்டக் குழுவினருக்கான வெற்றிக் கேடயத்தை பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கல்வி, உயர் கல்வி அமைச்சர் கௌரவ சுசில் பிரேம ஜயந்த அவர்களிடமிருந்து குழுத் தலைவர் ஏ. பைசால் பெற்றுக்கொள்கிறார்.



தேசிய கல்விக் கல்லூரிகளுக்கிடையிலான 9வது மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்ட தென் மாகாண முதலமைச்சர் கௌரவ ரெஜினோல்ட் குரே அவர்களுடன் பஸ்துன்ரட்ட, அட்டாளைச் சேனை தேசிய கல்விக் கல்லூரிகளின் பீடாதிபதிகளும் காணப்படுகின்றனர்.



2001இல் நடைபெற்ற 9வது மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் குண்டு போடுதல் நிகழ்ச்சியில் 3ம் இடத்தைப் பெற்றுக்கொண்ட எம். எஸ். கபார்கானுக்கு, மகாவலி தே. க. க. இன் விரிவுரையாளர் வெண்கலப் பதக்கத்தை அணிவித்துக் கௌரவிக்கின்றார்.



2001இல் நடைபெற்ற 9வது மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் நானூறு மீற்றர் நிகழ்ச்சியில் 3ம் இடத்தைப் பெற்றுக் கொண்ட கே. எம். சக்மிக்கு, சியன தே. க. க.இன் பீடாதிபதி வெண்கலப் பதக்கத்தை அணிவித்துக் கௌரவிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



23 - 06 - 2001இல் சென். ஜோன் அம்பியூலன்ஸ் படைப்பிரிவால் நடாத்தப்பட்ட முதலுதவியாளர்களுக்கான பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட பயிலுனர்களில் ஒரு பகுதியினர் செயன்முறைப் பயிற்சியில் ஈடுபடுகின்றனர்.



2001ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3, 4, 5 ஆகிய தினங்களில் தேசிய சென். ஜோன் அம்பியூலன்ஸ் படையினரால் காலி லெபதுவ சிறீதர்மா தேசிய பாடசாலையில் நடைபெற்ற தேசிய பாசறையில் கலந்துகொண்ட குழுவினருடன் கொமாண்டர் டாக்டர் ஜே. ஜே. ஜயதிலக, உதவியாணையாளர்கள், மாவட்ட ஆணையாளர்கள் ஆகியோரும் காணப்படுகின்றனர்.



காலியில் நடைபெற்ற தேசிய பாசறையில் படைப்பரிசோதனைக்காக எம். இஸட். எம். இஸ்மீர் தலைமையில் குழுவினர் தயார் நிலையில் நிற்கின்றனர்.



காலியில் நடைபெற்ற தேசிய பாசறையில் முதலுதவிப் படையினரை உதவி ஆணையாளர் எம். ரி. றாபன் அவர்கள் பரிசோதனை செய்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா தேசியக் கல்விக் கல்லூரியல் நடைபெற்ற தேசிய கல்விக் கல்லூரிகளின் தமிழ் விழா - 2001 இடம்பெற்ற அபிநயப் பாடலில் முதலாம் இடத்தையும் நிறுவர் நாடகத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்ற குழுவினருடன் பீடாதிபதி, உப-பீடாதிபதி மற்றும் விரிவுரையாளர்கள் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

28 - 08 - 2001இல் வயம்ப தேசிய கல்விக் கல்லூரியில் நடைபெற்ற கல்விக் கல்லூரிகளுக்கிடையிலான கலாசாரப் போட்டியில் 'றபான்' நடனமாடி முதலாம் இடத்தைப் பெற்ற நடனக்குழுவினருடன் பகுதிநேர விரிவுரையாளர் எம். ஐ. எம். அமீரும் காணப்படுகிறார்.





REFERENCE SECT
உசா துணைப்

2001 ஒக்டோபர் 20, 21, 22 ஆகிய தினங்களில் மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் NIPUவால் நடாத்தப்பட்ட தேசிய கல்விக் கல்லூரிகளுக்கிடையிலான தேசிய ஒருமைப்பாடு நாடகப் போட்டியில் 3ம் இடத்தைப்பெற்ற 'மீண்டும் வரும் வசந்தம்' நாடகத்தின் ஒரு காட்சி.

11 - 04 - 2001இல் காரைதீவு சண்முகா வித்தியாலயத்தில் அக்கரைப்பற்று - கல்முனை மாவட்டத்தினால் நடாத்தப்பட்ட குருளைச் சாரணர் தினத்தில் கலந்துகொண்ட சாரணர்களுடன் தேசிய பயிற்சித் தலைவர் ரி. தர்மலிங்கம் அவர்களும், குருளைச் சாரணியத்திற்குப் பொறுப்பான உதவி மாவட்ட ஆணையாளரும் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

STAR OFFSET PRINTERS
SAINTHAMARUTHU

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org